

KALKI
10.12.2000
ரூ. 5.00
கல்கி
விரலிசை
வித்யா!

பாலின் நற்பண்புகள்.
அத்துடன் பல அதிகம்.

தளிர்நடை பயிலும் உங்கள் செல்வமகன், இப்போது, வேகமாக வளர்ச்சி பெறும் மிக முக்கிய காலகட்டத்தில் அடியெடுத்து வைத்துள்ளான். ஆகவேதான் அவனுக்கு இப்போது தேவை ஸ்பெஷல் போஷாக்கு. பால் முக்கிய போஷாக்கை தந்தபோதிலும், வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் அத்தியாவசியமான **அயர்ன் மற்றும் குறிப்பிட்ட விட்டமின்களின் குறைபாடு அதிலுள்ளது**. அதோடு, பாலை கொதிக்க வைக்கும் பொழுது, அதிலுள்ள சத்துள்ள போஷாக்குகளை அது இழந்து விடுகிறது.

ஆகவேதான் நெஸ்லே இப்போது வழங்குகிறது, **க்ரோயிங் அப் மில்க்.** **இது 1 முதல் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காகவே விசேஷவிதமாக தயாரிக்கப்பட்டுள்ளது.** இது பாலின் நற்பண்புகளோடு 13 அத்தியாவசிய விட்டமின்களின் சக்தியையும், கூடவே வலிமையூட்டுவதற்கு அயர்ன் மற்றும் ஜிங்க் சக்தியையும் கொண்டுள்ளது. அதோடு ஆரோக்கியமான பற்கள் மற்றும் வலுவான எலும்புகளுக்கும் தேவைப்படும் போதுமான கால்ஷியச் சத்தையும் இது அளிக்கிறது. இதிலுள்ள இயற்கை நற்குணங்கள் மற்றும் தேனின் அருமையான ருசியை உங்கள் குழந்தை வெகுவாய் விரும்புவான்.

ஆகவே உங்கள் குழந்தைக்கு நெஸ்லே க்ரோயிங் அப் மில்க் வழங்கும் நற்பண்புகளை அளித்து, அவன் ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் வளர்வதைப்பாருங்கள்.



கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



தமிழ்ப் படத் தயாரிப்பாளர் டாக்டர் முரளி மனோகர், இந்தி டைரக்டர் சுபாஷ் கய்யைச் சந்தித்துப் பேசுவதற்காக மும்பை சென்றிருந்தார். சுபாஷ் கய்க்குப் பல வேலைகள். அப்பாயின்ட்மென்ட் கிடைக்கவில்லை. கடைசியில், அரை மணி நேர கார் பயணத்தின் போது, பேசுவது என முடிவாயிற்று.

முரளி மனோகரின் கார் ஸ்டீரியோவில் ஒலித்துக் கொண்டிருந்த பாட்டைக் கேட்டு, ''யாருடைய மியூஸிக்? ரொம்பப் பிரமாதமாக இருக்கிறதே!'' என்று சிலாகித்தாராம் சுபாஷ்கய். பெயரைச் சொன்னதும், 'இதற்கு முன் எத்தனைப் படங்களுக்கு மியூஸிக் பண்ணியிருக்கிறார்?' என்று கேட்டிருக்கிறார். ''இதுதான் முதல் படம்'' என்று பதில் வந்த போது சுபாஷ் கய்க்கு இனிய அதிர்ச்சி!


''யாரோ அனுபவசாலி போட்ட மியூஸிக் போல இருக்கிறதே!'' என்று வியந்து பாராட்டினாராம்.

பாராட்டப்பட்டவர் முப்பத்து நாலு வயது இளைஞர் ஹாரிஸ் ஜெயராஜ். இவர் இசையமைத்துத் தூள் கிளப்பியிருக்கும் படம் : 'மின்னலே!'

ஹாரிஸ் ஜெயராஜின் குடும்பமே இசைக் குடும்பம். தாத்தா ஹாரிஸ் மௌத் ஆர்கான் கலைஞர். அப்பா ஜெயராஜ் கிடாரிஸ்ட். பேரன் ஹாரிஸ் ஜெயராஜ் கீ போர்டு வாசிப்பவர்.

''எனக்குச் சிறு வயது முதலே இசை ஆர்வம் ஏற்பட்டு விட்டது. அப்

மின்னலடிக்கும் ஜெயராஜ்!



போதே அப்பாவின் கிடாரை எடுத்து வைத்துக் கொண்டு விளையாடுவேன்'' என்று சொல்லும் ஹாரிஸ் ஜெயராஜ் தனது ஒன்பதாவது வயதில் லண்டன் டிரினிடி இசைக் கல்லூரியில் அடிப்படை வகுப்பில் சேர்ந்து எட்டு கிரேடுகள் வரை வெற்றிகரமாக முடித்தாராம்.

''சிறு வயதிலேயே எனக்குத் தொழில் இசைதான் என்பதை நான் தீர்மானித்து விட்டேன். படிப்பை முடித்த கையோடு, இசையமைப்பாளர்களுக்கு கீ போர்டு வாசிக்க ஆரம்பித்து விட்டேன். கிறிஸ்தவ இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறேன். இசை கேஸட்களும் வெளி வந்திருக்கின்றன'' என்கிறார்.

சினிமாவில் கவனம் செலுத்த ஆரம்பித்த பின், குறிப்பிடும்படியானது 'சேவலப்பேரி பாண்டி' படத்தில் வரும் 'ஒயிலா பாடும்' பாடலுக்குக் கீ போர்டில் முழுமையாக இசை அமைத்துக் கொடுத்தது. அதன்பின் 'கண்டுகொண்டேன், கண்டு கொண்டேன்' வரை பல படங்களுக்கு கீ போர்ட் இசை இவருடையதுதான்.

'' 'மின்னலே' பட வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?''

''கண்ணெதிரே தோன்றினாள்' பட இயக்குனர் ரவிசந்திரன் தமது 'மஜ்னு' படத்துக்குப் புதிய இசையமைப்பாளரைத் தேடியபோது, என்னைப் பற்றிக் கேள்விப் பட்டு என்னை இசையமைப்பாளராக்கினார். 'மஜ்னு', 'மின்னலே' இரண்டுக்குமே டாக்டர் முரளி மனோகர்தான் தயாரிப்பாளர். 'மஜ்னு' படத்துக்கு நான் இசையமைத்த பாடல்களைக் கேட்டு விட்டு, இயக்குனர் கௌதம் 'மின்னலே' படத்துக்கு வாய்ப்புக் கொடுத்தார். ஆனால், 'மஜ்னு' கேஸட் ரிலீசுக்கு முன் 'மின்னலே' ரிலீஸ் ஆகி கலக்கிக் கொண்டிருக்கிறது.''

— மௌலி


படங்கள் உதவி: நிகில்

மகாகவி பாரதி வீட்டில் ஒரு புத்தக அறிமுக விழா நடந்தது. (புத்தகம் ஏற்கெனவே வெளியிடப்பட்டு நாலாயிரம் பிரதிகள் கடகட விற்று விட்டதாம்) அந்தப் புத்தகம் : சாலமன் பாப்பையா எழுதிய திருக்குறள் விளக்க வுரை.

சிலம்பொலி செல்லப்பன், கண.சிற்சபேசன், சுகி.சிவம், கவிக்கோ அப்துல் ரகுமான் போன்றவர்கள் புத்தகத்தைப் பற்றிப் பேசியதோடு இல்லாமல்,



• சாலமன் பாப்பையா



• தமிழ்க்குடிமகன்



• சிற்சபேசன்

பாட்டு பாப்பையா எதிர்பாட்டு சாத்தையா!

சாலமன் பாப்பையா பற்றியும் சுவாரசியமாகப் பேசினார்கள். கண. சிற்சபேசன், பாப்பையாவுக்கு ஆசிரியராம். அப்துல் ரகுமான், கல்லூரியில் பாப்பையாவுக்கு ஒரு வருடம் ஜூனியராம்.

கண.சிற்சபேசனின் பேச்சில் நகைச் சுவைக்குப் பஞ்சமில்லை. "நானும் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன். ஆனால் அந்தப் புத்தகத்தை உங்களில் ஒருவர் கூட நிச்சயம் படித்திருக்க மாட்டீர்கள். காரணம், அச்சடித்த ஆயிரம் பிரதிகளும் என்னிடமே பத்திரமாக இருக்கின்றன'' என்றபோது அரங்கத்தில் சிரிப்பலை.

"ஒரு தமிழறிஞரை விழாவுக்கு அழைக்க, அயல்நாட்டுத் தமிழர் ஒருவர் சென்றிருந்தாராம். தமிழறிஞர் குளித்துக் கொண்டிருந்ததால், கொஞ்சம் நேரம் காத்திருக்க நேரிட்டது. அவரது மகனிடம், ''தேவாரம் அறிமுகம் உண்டா?" என்று கேட்டபோது, "அவர் ரிடையர் ஆயிட்டார். எனக்கு அறிமுகமில்லை; என் அப்பாவுக்குத் தெரிந்திருக்கும்'' என்றாராம்: வந்தவருக்கு அதிர்ச்சி.

''மாணிக்கவாசகம்?'' என்று கேட்டதும், ''அவரை டிரான்ஸ்பர் பண்ணிட்டதா பேப்பர்ல படிச்சேன்'' என்றாராம்.

அந்த மாதிரி இருக்கிற இன்றைய நிலைமையில், திருக்குறளை, சாதாரண மக்களுக்கும் புரிய வேண்டும் என்ற நோக்கத்துடன் மிகவும் எளிமைப்படுத்திய பாப்பையாவின் முயற்சியைப் பாராட்ட வேண்டும்'' என்றார் அவர்.

சாலமன் பாப்பையா சிறந்த பேச்சாளர் மட்டுமில்லை, நல்ல ஓவியரும் கூட என்கிறார் அப்துல் ரகுமான்.

"கல்லூரியில் படிக்கிற போது, கையெழுத்துப் பத்திரிகை ஒன்றை உருவாக்கும் பொறுப்பு எனக்கும், பாப்பையாவுக்கும் தரப்பட்டது. பாப்பையா மிகவும் நன்றாகப் படம் வரைவார் என்பதால், அவர் கையெழுத்துப் பத்திரிகையின் அட்டைக்காக ஒரு ஓவியம் வரைவது என்றும், நான் உள்ளே பயன்படுத்திக் கொள்ள ஒரு படம் வரைவது என்றும் முடிவானது. இரண்டு பேரும் படங்கள் வரைந்து முடித்தோம். இரண்டையும் பார்த்து விட்டு, "என் படத்தை விட உங்கள் படம் மிக நன்றாக இருக்கிறது. அதையே அட்டையில் வைத்துக் கொள்ளலாம் என்றார்" என்று நெகிழ்ந்தார் அப்துல் ரகுமான்.

இன்னொரு சேதி : அந்தக் காலத்தில் பாப்பையாவும், சாத்தையாவும் பட்டி மன்றங்களில் எதிரெதிர் அணியில் கலந்து கொள்ளுவார்களாம். இருவருமே மிக நன்றாகப் பாடுவார்களாம். சரி! பாப்பையா தெரியும். சாத்தையா யார்?

வேறு யாருமில்லை! அமைச்சர் தமிழ்க்குடிமகன்தான்!

— மௌலி

படம் : யோகா

பூட்டிய வீட்டிற்குள் பூத்திருக்கும்

சென்னைப் புறநகரில் இருக்கும் மருத்துவமனை அது. அதற்குப் பின்புறம்தான் அந்தப் பூட்டிய வீடு. ஆறு மாத மழலைகள் தொடங்கி, பன்னிரண்டு வயது சிறார்கள் வரை ஒரு நூறு குழந்தைகளின் உறைவிடம் அல்லது மறைவிடம். அங்கிருக்கும் பிஞ்சு நெஞ்சங்களைப் பொறுத்தவரை அது அவர்களின் பள்ளி ஹாஸ்டல். அங்கே வகுப்பறை உண்டு. டீ.வி. உண்டு. டீச்சர் உண்டு. ஆயாவும் உண்டு. ஆனால் பூட்டிய வீட்டின் உள்ளிருந்து கிரில் கம்பிகளின் இடைவெளியில், வெளியுலகை வெறித்துப் பார்க்கச் சுதந்திரம் இருந்தாலும், வெளியேறி சிறகடிக்கச் சுதந்திரம் இல்லை. இவர்கள் யார்? குழந்தைக் குற்றவாளிகளா? இல்லை கொத்தடிமைகளா? அப்படியெல்லாம் இருந்து விட்டால் கூட கொஞ்சம் ஆறுதலடைந்து கொள்ளலாம். இவர்கள் வாழ்நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் எச்.ஐ.வி. குழந்தைகள் என்று தெரிந்த பிறகு நெஞ்சம் பதறுகிறது.

பெற்றோர் தந்த விபரீதப் பரிசை, ரத்த நாளங்களில் சுமந்து கொண்டு, எந்த அறிகுறியும் இல்லாமல் வெளியே சிரித்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். கார்டூன் அலை வரிசையில் தோன்றும் மிக்கி மௌசுக்கும், டொனால்டு டக்கிற்கும் உற்சாகமாய்க் கைதட்டுகிறார்கள். "அங்கிள்... அங்கிள் என்னை போட்டோ எடுங்க அங்கிள்" - குழந்தை அழகுக் கொப்பளிக்கும் இரண்டரை வயது கவிதாவுக்கு டாக்டராக ஆசை.

"என்னை அம்மாகிட்டே கூட்டிக்கிட்டுப் போறீங்களா? போன தீபாவளிக்கு வந்துட்டு, அப்புறம் வரவே இல்லை. ப்ளீஸ் அங்கிள்... என்னைக் கூட்டிக்கிட்டுப் போறீங்களா?" ஐந்து வயது ரமேஷின் அம்மாவை எச்.ஐ.வி. கொண்டு சென்று விட்டதை அவனிடம் எப்படிச் சொல்வது?

இங்கிருக்கும் ஒவ்வொரு குழந்தையிடமும் ஓராயிரம் ஏக்கங்கள், கனவுகள்.

நம்மை அழைத்து வந்த செஸ் ஆசிரமத்தின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான பாண்டியன் தனது அனுபவ வலிகளில் சிலவற்றைப் பகிர்ந்து

• டாக்டர் மனோரமா





பகீர் ரிப்போர்ட்

அனிச்சங்கள்!

கொள்கிறார்.


''எச்.ஐ.வியால் இறந்து போயிட்டவங்களுடைய



குழந்தைகள்... எச்ஐவின்னு தெரிந்ததும் உறவினர்களால் புறக்கணிக்கப்படுகிற குழந்தைகளுக்காக, இந்தியாவிலேயே முதல் முறையாக இந்த ஆசிரமம் தொடங்கி ஆறு வருடம் ஆகிறது. சாதாரண அனாதை இல்லங்கள், எச்ஐவி குழந்தைகளை ஏற்றுக் கொள்ள மறுத்ததுதான் டாக்டர் மனோரமா இப்படியொரு ஆசிரமம் தொடங்கக் காரணமாக அமைந்தது'' என்று ஆரம்பித்தார்.

''எய்ட்ஸ் நோயால் இறந்து போனவர்களின் குழந்தைகளை அவர்களின் உறவினர்களே ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கிறார்கள். தொட்டால் ஒட்டிக் கொள்ளுமே என்கிற பயம். தனி தட்டு, தனி தம்ளர் என்று விலக்கி வைத்து மனநிலை பாதிக்கும்படி நடத்துகிறார்கள். இறந்து போன பெற்றோர் தவிர வேறு உறவினர்கள் இல்லாததால், அனாதைகள் ஆகிவிடுகிறார்கள் மற்றொரு பிரிவு குழந்தைகள். இங்கே அழைத்து வரப்படும் குழந்தைகளிடம் அவர்களுக்கு எச்ஐவி இருப்பதாக எந்தச் சூழ்நிலையிலும் நாங்கள் சொல்வதில்லை. அது அவர்களுக்குத் தெரிந்துவிடக்கூடாது என்பதிலும் கவனமாக இருக்கிறோம். சத்தான உணவும், மனநல பராமரிப்பும்தான் அவர்களின் வாழ்நாளைக் கூட்டுகிற மருந்தாக இருக்கின்றன. ஆனால் எத்தனைப் பராமரிப்பு இருந்தும் மனச் சோர்வுக்கு அடிக்கடி ஆளாகி விடுகிறார்கள். அதற்கான காரணங்களை அடுக்கலாம்.

இங்கிருந்து எதிரே தெரியும் குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் தத்தம் அப்பாக்களின் ஸ்கூட்டர்களில் அமர்ந்து கொண்டு... பள்ளிக்குப் போய் வருவதைப் பார்க்கிறார்கள். வீட்டு வாசலில் நின்றபடி கையசைக்



கும் அம்மாவைப் பார்த்து ஏங்குகிறார்கள். நாம் மட்டும் இந்த வீட்டிலேயே ஏன் இருக்க வேண்டும் என்ற கேள்வி வருகிறபோது அவர்களை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தவிக்கிறோம்.

தியேட்டருக்கோ, மற்ற பொது இடங்களுக்கோ அழைத்துச் செல்லும் போது, குழந்தைகளுக்கு எதிர்பாராமல் அடிபட்டு ரத்தம் வழிந்தால் பாதுகாப்புடன்தான் முதலுதவி செய்ய முடியும். அப்படியொரு சந்தர்ப்பத்தில் நமது தன்னார்வ சேவகர் கைகளில் மாட்டிக் கொள்ள பிளாஸ்டிக் பை தேடப் போய், பொது மக்கள் அவரை

அடிக்கவே வந்து விட்டார்கள்.

"முதன் முதலில் ஆசிரமம் செயல்பட்ட வாடகை வீட்டின் உரிமையாளருக்கு எங்கள் மீது சந்தேகம் வந்து விட்டது. அவர் எப்படியோ மோப்பம் பிடித்து விட்டார். அவருக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் எங்களைக் காலி செய்யும்படி சொல்லி விட்டார். இதனால் ஆசிரமத்திற்கு அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களோடு கூட நாங்கள் பழக முடியவில்லை. மற்றொன்று குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள நிரந்தரமான ஆயாக்கள் கிடைப்பதில்லை. எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி அளித்து பணியில் அமர்த்தினாலும் இரண்டு மாதம் தான் இருக்கிறார்கள். மருத்துவச் சேவையை விரும்பிப் படித்து விட்டு வரும் நர்சுகள் கூட பணியாற்றத் தயாராக இல்லை. ஆனால் இப்போது நிலைமை கொஞ்சம் மாறியிருக்கிறது. ஆறு மாதம், ஒரு வருட இடைவெளியில் குழந்தைகளைப் பார்க்க வரும் உறவினர்கள், இங்கே குழந்தைகளோடு நாங்கள் பழகுவதையும், சாப்பிடுவதையும் பார்த்துவிட்டு, தைரியம் வந்தவர்களாக குழந்தைகளை வீட்டிற்கு அழைத்துப் போகிறார்கள். இதுவரை ஐம்பத்தைந்து குழந்தைகளை உறவினர்களோடு சேர்த்து வைத்திருக்கிறோம் என்றவரிடம் "எத்தனை வயது வரைத் தொற்றுக்கு ஆளான குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்கிறார்கள்" என்றோம்.

"மனநிலை பராமரிப்பும் தரமான சத்துணவும் இருந்தால் பன்னிரண்டு வயது வரையும் அதிகபட்சம் பதினைந்து வயது வரையும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். அதற்குப் பிறகும் வாழ்நாளைத் தள்ளிப் போடும் ஆண்டி ரெட்ரோவைரல் மருந்துகள் நமக்கு இன்னும் வானத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் மாதிரிதான். இறுதிக்கட்டத்தை நெருங்கும் குழந்தைகளை உடனடியாக மற்ற குழந்தைகளிடமிருந்து பிரித்து, தீவிர மருத்துவக் கண்காணிப்பில் வைத்து விடுவோம். இறந்து போன பிறகு, 'அங்கிள், அங்கிள்' என்று சுற்றிச் சுற்றி வந்து விளையாடிய குழந்தையை பிளீச்சிங் பவுடர் போட்டு நாங்களே 'பேக்' செய்வது மிகப் பெரிய கொடுமை."

"ஆம்புலன்ஸ் வசதி இல்லாததால் ஒரு முறை இறந்த குழந்தையை ஸ்கூட்டரில் எடுத்துக் கொண்டு, பெசன்ட் நகர் மின்சார மயானத்திற்குச் சென்றோம். வழியிலேயே போலீஸ் மறித்து பார்சலைத் திறந்து காட்டச் சொல்லி சண்டை பிடித்தார்கள். அவர்களைச் சமாதானப்படுத்தி விட்டு சென்றபோது மயான ஊழியர்கள் பணி முடிந்து சென்று விட்டார்கள். அதன் பிறகு போரூர் சுடுகாட்டில் நடு இரவில் தகனம் செய்தோம். எங்கள் ஆசிரமத்திலிருந்து மட்டும் இதுவரை பன்னிரண்டு குழந்தைகளைப் பறிகொடுத்திருக்

ரகசியம் கூடாது

தந்தையிடமிருந்து தாய்க்கும், தாயிடமிருந்து குழந்தைக்கும் எச்.ஐ.வி. தொற்று ஏற்படுகிறது. எச்.ஐ.வி. பெற்றோர்களுக்குப் பிறக்கும் முப்பது சதவீத குழந்தைகள் மட்டுமே பாசிட்டிவ்களாக பிறக்கின்றன. ஆயினும் தொற்றுள்ளவர்கள் மகப்பேறை தவிர்ப்பதுதான் முறை.

உலகம் முழுவதும் ஒரு நிமிடத்திற்கு ஆயிரத்து ஐந்நூறு குழந்தைகள் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகின்றன. இதில் அறுபது சதவிகிதக் குழந்தைகள் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவை. பாலியல்



தொழிலாளர்கள் மூலம் இந்தியாவில் 48 சதவிகிதம் எச்.ஐ.வி. தொற்று நிகழ்கிறது. பாலியல் தொழிலாளர்கள் மற்றும் மனைவி அல்லாதவர்களிடம் தொடர்புள்ள ஆண்களிடமிருந்து மட்டும் 68 சதவிகித பெண்கள் தொற்றுக்கு ஆளாகிறார்கள். தாய் மூலம் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகும் குழந்தைகளின் சதவீதமும் மற்ற வளரும் நாடுகளை விட இந்தியாவிலேதான் அதிகம். பதினைந்து ஆண்டு பிரசாரம் மூலம் நம்மால் இருபத்தைந்து சதவிகித விழிப்புணர்வுதான் ஏற்படுத்த முடிந்திருக்கிறது. பாலியல் தொழிலாளர்களிடம் மட்டுமே நூறு சதவிகித விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. காரணம்... தங்களது சகாக்கள் எச்ஐவியால் கண் முன்னால் இறந்து போவதைப் பார்த்து வருகிறார்கள். பொது மக்களிடம் விழிப்புணர்வு வெற்றி பெறாததற்குக் காரணம், எய்ட்ஸ் சாவுகள் பகிரங்கப்படுத்தப்படாமல் ரகசியமாக மூடி மறைக்கப்பட்டு வருவதுதான். வெளியே தெரியும் ஒரு சில சாவுகளும், டிபி அல்லது மஞ்சள் காமாலையால் இறந்து விட்டதாக உறவினர்களையும், மற்றவர்களையும் நம்ப வைத்து விடுகின்றனர். எய்ட்ஸால் இறந்தவர் குடும்பம் என தெரியவந்தால் சமூகம் அவர்களை இழிவுபடுத்தும் என்ற பயமே காரணம். எய்ட்ஸ் மரணங்கள் பகிரங்கமாக்கப்பட்டால்தான் இந்தியாவில் உண்மையான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்கிறார்கள் துறை சார்ந்தவர்கள்.



கிறோம் என்ற பாண்டியன், இறந்து போன குழந்தை எங்கே என்று மற்ற குழந்தைகள் கேட்டால் அப்பா அம்மா வந்து அழைத்துக் கொண்டு போய் விட்டதாகப் பொய் சொல்வதைத் தவிர வேறு வழியே இல்லை" என்று கண்கலங்குகிறார்.

செஸ் ஆசிரமத்தின் நிறுவனர் டாக்டர். பி. மனோரமா சொல்கிறார் : "எச்ஐவி குழந்தைகளுக்காக நிரந்தரமான இல்லம் தமிழகத்தில் இல்லை. நிரந்தர இல்லம் அமைக்கப்பட்டு, அங்கே குழந்தைகள் மகிழ்ச்சியுடன் விளையாட பிளே ஏரியா வேண்டும். இது ஆரோக்கியம், மனநிலை இரண்டையும் கட்டுப்பாட்டில் வைக்க மிகப் பெரிய உதவியாக இருக்கும். செஸ் ஆஸ்ரமத்தை நடத்துவது, நிதி அளவிலும், நிர்வாக அளவிலும் தொடர்ந்து எங்களுக்கு சவாலாகவே இருந்து வருகிறது. ஒருமுறை குழந்தைகளின் மறுநாள் உணவுக்கு நூறு ரூபாய் இல்லாமல் கஷ்டப்பட்டோம். எங்கள் கஷ்டத்தைப் புரிந்து கொண்டு அரிசி, பருப்பு கொடுத்து உதவுகிற உள்ளங்கள் இருக்கிறார்கள். ஆசிரமத்திற்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இன்னொரு பக்கம் இந்தக் குழந்தைகளின் ஆசைகளை எவ்வளவு விரைவில் நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்றி வருகிறோம்.

"இந்தப் பணிக்கு இடையில் 'தூளி' என்ற திட்டத்தையும் தொடங்கி நடத்தி வருகிறோம். குறைந்த செலவில் தரமான வாழ்க்கையை இந்தக் குழந்தைகளுக்கு எப்படி வழங்குவது என்ற பயிற்சி திட்டம்தான் அது. இந்தியா முழுவதுமிருந்து இதுவரை நூற்றுக்கும் அதிகமான பிரதிநிதிகள் பயிற்சி பெற்றுச் சென்றிருக்கிறார்கள். இதற்கு நல்ல பலன் கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறோம்" என்கிறார்.


பெற்றோரின் அறியாமை அல்லது தவறு காரணமாக பயங்கரத்தைச் சுமக்கும் குழந்தைகள் சமுதாயத்தின் புறக்கணிப்பையும் சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதுதான் மாபெரும் கொடுமை.

சந்திப்பு : **ஆர்.சி.ஜெ.**

படங்கள் : **ஐரிஸ்**



அஞ்சறைப் பெட்டிக்குள் வயாக்ரா!



கிராமப்புறப் பெண்களானாலும், நகர்புறத்துப் பெண்களானாலும், வயது வித்தியாசமில்லாமல், பாதிக்கிற ஓர் நோய் ரத்தச் சோகை. இது ரத்தப் புற்று நோயின் அறிகுறியாக அமைந்து விடுகிற அபாயம் உண்டு. இந்த ரத்தச் சோகையைத் தடுக்க சமையல் அறையிலேயே அற்புதமான மருந்து உள்ளது. அதுதான் வெந்தயம்.

'அயச் செந்தூரம்' என்று, ஏழு விதமான மூலிகைகளிலிருந்து சாறு எடுத்து, இரும்புடன் சேர்த்துப் புடம் போட்டு, ரத்தசோகைக்கு மருந்தாக கொடுப்பார்கள். 'அயம்' என்றால் இரும்பு. அலோபதி மருத்துவத்தில், அனீமியா என்கிற ரத்தச் சோகைக்கு, இரும்புச் சத்துக் குறைபாடுதான் காரணம் என்று சொல்லி, அயர்ன் டானிக் சாப்பிடச் சொல்லுவார்கள்.

ஆனால், இறைவன், இயற்கையிலேயே இரும்புச் சத்து மிகுந்த வெந்தயத்தைப் படைத்திருக்கிறார். பூமியிலேயே இருக்கக் கூடிய இரும்புச் சத்து வெந்தயத்தின் மூலம் நமக்குக் கிடைத்து விடுகிறது.

நம் அன்றாட உணவாக இருப்பவை இட்லியும், தோசையும். இவற்றுக்கான மாவு அரைக்கிற போதே நாம் உளுந்துடன் வெந்தயத்தையும் சேர்க்கிறோம். ஆக, வெந்தயம் இல்லாவிட்டால், நாம் சாப்பிடும் இட்லி, தோசையில் சுவையுமில்லை; சத்தும் இல்லை என்றே சொல்லி விடலாம். சில வீடுகளில், இட்லி, தோசைக்கு மாவு அரைக்கிற போது உளுந்து சேர்க்காமல், வெந்தயம் மட்டுமே சேர்ப்பார்கள். பலகாரம் மிகவும் மிருதுவாக இருக்க, வெந்தயம் மிக மிக அவசியம்.

வெந்தயம் பயன்படுத்திச் செய்யும் இன்னொரு சுவையான ஐட்டம், வெந்தயக் குழம்பு. சாதத்தில் விட்டுப் பிசைந்து சாப்பிடுவதற்கு மட்டுமின்றி, இட்லி, தோசை போன்ற டிபன்களுக்குத் தொட்டுக் கொள்ளவும் சுவையானது. புளிப்பில்லாத தயிர் சாதம் பிசைந்து, அதில் ஒவ்வொரு கவளத்திலும் வெந்தயக் குழம்பு விட்டுச் சாப்பிட்டால் தேவாமிருதம் தான்.

வெந்தயக் குழம்பு செய்ய...

எலுமிச்சை அளவு புளி, தேவையான அளவு சின்ன வெங்காயம், தக்காளி, நசுக்கிய பூண்டு துண்டுகள், 1 டேபிள் ஸ்பூன் காய்ந்த மிளகாய்த் தூள், பெருங்காயம், கருவேப்பிலை, 1 டேபிள் ஸ்பூன் தனியாப் பொடி, அரை டேபிள் ஸ்பூன் வெந்தயப் பொடி, தேவையான உப்பு இவற்றை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

வாணலியில் நல்லெண்ணெய் விட்டு கடுகு தாளித்து, வெங்காயம், தக்காளி, பூண்டு, கருவேப்பிலை இவைகளைப் போட்டு வதக்கி, பின் புளியைக் கரைத்து விடவும். ஒரு சிட்டிகை மஞ்சள் தூள், உப்பு, தனியாப் பொடி, மிளகாய்த் தூள் இவைகளைப் போட்டு கொதிக்க விடவும். நன்கு கொதித்துக் கெட்டியாகும்போது வெந்தயப் பொடியைப்





போட்டு இறக்கி விடவும். விருப்பப்பட்டால் நெல்லிக்காய் அளவு வெல்லம் சேர்த்தும் கொதிக்க விடலாம். சுவையாக இருக்கும்.

வெந்தயக் கீரை கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த வெந்தயக் கீரையைப் 'பச்சை நிற ரத்தம்' என்று குறிப்பிடுவோம். காரணம், வெந்தயக் கீரையில் உள்ள குளோரோஃபில், ரத்தத்தில் ஹீமோ குளோபினை அதிகரிக்கச் செய்கிறது.

பல பெண்களுக்குப் பிரசவத்துக்குப் பின் தாய்ப்பால் போதிய அளவு கிடைக்காமல் போகும். அல்லது முற்றிலுமாகவே வற்றிப் போகும். இப்படி வற்றிப்போன பாலையும் ஜீவநதியாக ஊற்றெடுக்க வைக்கும் சக்தி வெந்தயத்துக்கு உண்டு.

தாய்மார்கள் எப்படி வெந்தயத்தை உட்கொள்ளலாம்?

ஒரு ஸ்பூன் வெந்தயத்தை முதல் நாள் இரவே தண்ணீரில் ஊறவைத்து, மறுநாள் காலை அதை மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்து, ஒரு டம்ளர் மோரில் கலந்து, காலை பதினோரு மணி அளவில் சாப்பிடலாம்; புழுங்கலரிசி அல்லது கோதுமை மாவுக் கஞ்சி செய்து, அதில் இந்த வெந்தயத் துவையலைச் சேர்த்துக் குடிக்கலாம்.

வெந்தயத்தை ஊற வைத்தபின், முழுசாக அப்படியே சாப்பிடுவதை விட, மைய அரைத்துச் சாப்பிடுவதன் மூலமே முழுப் பயனையும் பெற முடியும்.

கடையிலிருந்து வாங்கி வந்த வெந்தயத்தை அப்படியே பயன்படுத்துவதைவிட, இரண்டு மணி நேரம் வெயிலில் காயவைத்து எடுத்து வைத்துக் கொண்டு அதன் பின் தேவையான போது பயன்படுத்துவதுதான் உசிதம். மிக லேசாக வறுத்தும் பயன்படுத்தலாம். தவறில்லை.

அண்மையில் நீரிழிவு சம்பந்தப்பட்ட ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் டயாபடிஸ் நோயாளிகளுக்கான உணவு பற்றியும் விவாதிக்கப்பட்டது. 'அரிசி சாதம் வேண்டாம்; கோதுமை சாப்பிடுங்கள் என்று சொல்லுவதால், திரும்பத் திரும்ப கோதுமையிலேயே சப்பாத்தி, உப்புமா, சாதம் என்று செய்து சாப்பிட்டு போரடித்துப் போகிறது. ஆபத்தில்லாத, மிக எளிதில் செரிக்கக்கூடிய வேறு ஏதாவது உணவு சாப்பிட முடியாதா?' என்ற கேள்வி எழுந்தது. அதற்குத் தரப்பட்ட விடை : நம் ஊர் இட்லி!

புழுங்கலரிசி, உளுந்து, வெந்தயம் போன்றவை செரிப்பதற்கு மிக மிகக் குறைவான இன்சுலினே போதுமானது என்பதால்தான் இட்லிக்கு இந்த மரியாதை கிடைத்துள்ளது.

பொதுவாக, வெந்தயத்தை விட, வெந்தயக் கீரையைப் பயன்படுத்துவது நல்லது என்றாலும், வெந்தயக்கீரை குளிர்ச்சி என்பதால், ஆஸ்துமா தொல்லை உள்ளவர்களுக்கு ஒத்துக் கொள்ளாது. அவர்கள் வெந்தயத்தையே உபயோகிக்கலாம்.

புழுங்கலரிசிக்குப் பதிலாக கோதுமை பயன்படுத்தி, அதனுடன் வெந்தயத்தைச் சேர்த்து 'வெந்தய - கோதுமை தோசை' கூட தயாரிக்கலாம்.

இப்போது மேற்கத்திய நாடுகளில் செக்ஸ் உணர்வுகளை அதிகரிக்கச் செய்யும் அபார சக்தி கொண்ட மாத்திரை என்று வயாக்ராவைப் பற்றி பரபரப்பாகப் பேசுகிறார்கள். ரத்த அழுத்தம் போன்ற பிரச்னை உள்ளவர்கள் வயாக்ராவைப் பயன்படுத்துகிறபோது மாரடைப்பு, மரணம் போன்ற பக்கவிளைவுகளும் நேரிடலாம் என்று பயமுறுத்துகிறார்கள். ஆனால், நம் கிச்சனிலேயே உள்ள வயாக்ராவான வெந்தயம் செக்ஸ் சம்பந்தமான பிரச்னை உள்ளவர்களுக்கு நலம் தரும். செக்ஸ் உணர்வை அதிகரிக்கச் செய்யவும், அதே சமயம் ஆபத்தில் கொண்டு போய் விடாத அளவுக்குக் கட்டுப்பாட்டில் இருக்கவும் செய்யும் அபார குணம் வெந்தயத்துக்கு உண்டு.

சைனஸ் தொல்லையா?

காலையில் எழுந்து, முகம் கழுவினாலோ, குளித்தாலோ அடுக்கடுக்காய்த் தும்மல் போடுவார்கள். ஒன்று, இரண்டு என்று எண்ண ஆரம்பித்தால் கால் செஞ்சுரி அடிப்பார்கள். சைனஸ் தொல்லையால் அவதிப்படுவார்கள். இதற்கு என்ன வைத்தியம்? மிளகு ஐம்பது கிராம், வெந்தயம் நூறுகிராம், இரண்டையும் இலேசாக வறுத்து, பொடி செய்து, சலித்து ஒரு டப்பாவில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். காலை, இரவு இரண்டு வேளையும், உணவுக்குப்பின், இந்தப்பொடியில் பத்து சிட்டிகை எடுத்து, ஒரு ஸ்பூன் தேனில் கலந்து சாப்பிடுங்கள். நிவாரணம் கிடைக்கும்.

சிலருக்கு, மூக்குக்குள் 'பாலிப்ஸ்' என்று சொல்லக் கூடிய மைக்ரோ சைஸ் கட்டிபோல வரும். உண்மையில், இது சைனஸின் இரண்டாவது கட்டம். பொதுவாக இதற்கு ஆபரேஷன்தான் தீர்வு என்பார்கள். ஆனால், இப்போது சொன்ன சைனஸ் மருந்து, சொரசொரப்பான பரப்பை, உப்புக்காகிதம் போட்டுத் தேய்த்தால், சொரசொரப்பு மறைந்து வழுவழுப்பாகுமே அதேபோல, மைக்ரோ கட்டிகளை அகற்றி, மூக்கை பழையபடி ஆக்கிவிடும்.



மத்திய அரசின் மௌன ராகம்!

ஆர்.எம். வீரப்பன் தலைமையிலான எம்.ஜி.ஆர் கழகம் ஓர் உருப்படியான ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருக்கிறது. ஜெயலலிதா மற்றும் சசிகலா குடும்பத்தினர் மீது மத்திய அரசின் ஏஜென்ஸிகளான சி.பி.ஐ, அமுலாக்கப் பிரிவு மற்றும் வருமான வரித்துறை ஆகியவற்றால் போடப்பட்டுள்ள வழக்குகளை விரைந்து விசாரிக்க வேண்டும் என்பதற்காக நடத்திய ஆர்ப்பாட்டத்தைத் தான் சொல்கிறோம்.

சி.பி.ஐ சார்பாக இரண்டு வழக்குகள், அமுலாக்கப்பிரிவு சார்பாக பதின்மூன்று வழக்குகள் மற்றும் வருமான வரி இலாகா சார்பாக ஆறு வழக்குகள் – ஆக மொத்தம் 21 வழக்குகள்/விவகாரகங்கள் (அப்பாடியோவ்!) ஜெயலலிதா-சசிகலா குடும்பத்தினர் மீது பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறது.

"இந்த வழக்குகளின் மீது நடக்கும் ஆமை வேக விசாரணையைப் பார்த்தால், இன்னமும் இரண்டு தலைமுறைக்குக்கூட இழுத்துக் கொண்டு போகும் என்று தெரிகிறது. எனவேதான் எங்கள் ஆர்ப்பாட்டம்" என்கிறார் ஜெகத்ரட்சகன். மத்திய அரசு மௌன ராகம் வாசிக்கும் வழக்குகளில் முக்கியமான சிலவற்றைப் பார்ப்போமா!

● ஆர்.சி. எண் 50/96. ஜெயலலிதா பிறந்த நாள் பரிசாக 4.11 கோடி ரூபாய் பணம், நகை பெற்ற வழக்கு. இத்துடன் மூன்று லட்சம் அமெரிக்க டாலர்களை காசோலை மூலம் பெற்ற விவகாரமும் இதில் இருக்கிறது. விசாரணை முடிந்தும் சி.பி.ஐ இன்னமும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவில்லை.

● மலேசிய நாட்டிலிருந்து 8.50 கோடியை இந்தியாவுக்குக் கொண்டு வந்த வழக்கு. சசிகலாவுக்கு, மலேசியாவில் வசிக்கும் சுசிலா என்பவர் 8.50 கோடி அனுப்ப, அந்தப் பணம் அபிராமபுரம் இந்தியன் வங்கி கிளையில் போடப்பட்டுள்ளது. இந்தப் பணம் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு ஸ்டேட் வங்கியில் சசிகலாவால் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டது. இதுவரை சுசிலா என்பவர் பிடிபடவில்லை. அமுலாக்கப் பிரிவு விசாரிக்கும் வழக்கு இது.

● சசிகலா, பாஸ்கரன் ஆகியோர் மீது ஜெ.ஜெ.டி.வி 'ரிம்சாட்' சாட்டிலைட் தொலைத் தொடர்பைப் பெறுவதற்காக ஆறரை லட்சம் அமெரிக்க டாலர் அன்னிய செலாவணி விதிமுறைகளை மீறி வழங்கியது சம்பந்தமான வழக்கு. அமுலாக்கப் பிரிவில் நிலுவையில் உள்ளது.

● டிப்பர் இன்வெஸ்ட்மென்ட்ஸ் என்ற கம்பெனிக்கு லண்டனில் உள்ள இரண்டு வங்கிகளின் மூலம் சுமார் 28 கோடியை தினகரன் கொடுத்தது தொடர்பான வழக்கு. இந்த வழக்கில் தினகரனுக்கு 28 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தினகரன் அதைச் செலுத்தவில்லை. தகுந்த மேல்நடவடிக்கை எடுக்க முடியாமல் தடுமாறுகிறது அமுலாக்கப் பிரிவு.

● மயிலாப்பூர் அமிர்தாஞ்சன் பங்களாவை முறைகேடாக வாங்கியது தொடர்பாகவும், வருமானவரி கணக்குகளைச் சமர்ப்பிக்காமல் இருந்ததற்காகவும் ஜெயலலிதா மற்றும் சசிகலா மீது வருமானவரித் துறையால் ஆறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

— சஞ்சயன்

படம்: ராஜன்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

பவர்ஃபைனான்ஸ்

நடத்தும்

டெபாசிட் திரட்டும் முகாம்

உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்

திருவனந்தபுரம்	நாகர்கோவில்
நாள் : 4, 5 டிசம்பர், 2000. ஹோட்டல் ஹைலேண்ட், கான்ஃபரன்ஸ் ஹால் (முதல் தளம்), மஞ்சகுளம் ரோடு, தம்பனூர், திருவனந்தபுரம் - 695 001. தொலைபேசி : 333200, 333416.	நாள் : 6 டிசம்பர், 2000. ஹோட்டல் ப்ளூ ரெஸிடென்ஸி, கான்ஃபரன்ஸ் ஹால் (முதல் தளம்), தளவாய் தெரு, (T.T.C. பஸ் நிலையம் அருகில்), மீனாட்சிபுரம், நாகர்கோவில் - 629 001. தொலைபேசி : 29694, 29695.

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

எங்களின் அடுத்த டெபாசிட் திரட்டும் முகாம்கள்

விழுப்புரம்	குரு திருமண நிலையம் நாள் : 15 டிசம்பர், 2000.
நெய்வேலி	ஹோட்டல் ராதா நாள் : 16 & 17 டிசம்பர், 2000.

12.12%	16.34%
12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%. 24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 11.10% 36, 48, 60 மாதங்களுக்கு மாதந்திரது வட்டி 12.00%, காலாண்டிற்கு வட்டி 12.12%.	60 மாதங்களுக்கு (மாதாந்திர கூட்டுவட்டி ஆண்டிற்கு 12.00%)

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டி.டி.கே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.

தொலைபேசி : 4997689, 4995648, ஃபேக்ஸ் : 044-4982894.

30-9-2000 தேதியிட்ட [illegible]

Visit us at : www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com / www.webulagam.com

கமலுக்கு ஏற்பட்ட





சில ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை விமான நிலையத்தில் நடந்த சம்பவம் இது.

மும்பைக்குக் கிளம்பிய ஏர்பஸ் விமானம் ஓடு பாதையின் முடிவில் உயரே கிளம்பாமல், கரடு முரடான நிலப் பரப்பில் ஓடி விமானதள வளாகச் சுற்றுச்சுவரில் மோதி நின்றது. பயணிகள் பலருக்கு உள்காயம்! அந்தச் சுவர் அங்கு இல்லாதிருந்தால் விமானம் அதை ஒட்டி இருக்கும் தேசிய நெடுஞ்சாலைக்குள் நுழைந்து பெரிய விபத்து நடந்திருக்கும்.

விமானம் சுற்றுச் சுவரில் மோதியபோது காதைத் துளைக்கும் வெடிச்சப்தம் கேட்டதாக அதில் பயணம் செய்த பயணிகள் கூறினார்கள். அந்தக் கால கட்டத்தில் நிறைய வெடிகுண்டுப் புரளிகள் வந்து கொண்டிருந்த படியால் பத்திரிகைகள் பரபரப்பாக இந்தச் செய்தியை வெளியிட்டுக் கொண்டிருந்தன. வெடிகுண்டுப் பரபரப்பு தவிர, இந்த விபத்து, மீடியாவில் முக்கியத்துவம் பெறக் காரணம், அதில் பயணம் செய்த ஒரு வி.ஐ.பி. அவர் நடிகர் கமலஹாசன்! தரை தட்டிய விமானத்தை நன்கு சோதனை செய்த போலீஸ் அதில் வெடிகுண்டுத் தடயம் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அப்படியானால் மேலே எழ வேண்டிய விமானம் தரையை விட்டுக் கிளம்பாததன் காரணம் என்ன? விமான நிலைய உயர் அதிகாரிகள் எங்களை அணுகினார்கள்.

பொதுவாக இது போன்ற விவகாரங்களை எடுத்துக் கொள்ள தடய அறிவியல் நிபுணர்கள் தயங்குவார்கள். ஒரு தடய அறிவியல் நிபுணருக்கு சர்வ விஷயங்களும் தெரிந்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் தெரியாத விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொண்டு அதில் தடய அறிவியல் அறிவைப் புகுத்தி, முடிச்சுகளை அவிழ்க்க வேண்டும். எனவே இந்த விமான விவகாரம் என்னிடம் வந்த போது தயங்காமல் எடுத்துக் கொண்டேன். உடனே பிரிட்டிஷ் கவுன்ஸில், அமெரிக்கத் தகவல் நிலைய நூலகங்களில் முகாமிட்டேன். விமானங்கள், வானத்தில் கிளம்புவது, இறங்குவது, பறப்பது ஆகியவற்றில் உள்ள நுட்பங்களைப் படித்துத் தெரிந்து கொண்டேன். எந்த ஒரு விமானம் விபத்துக்குள்ளானாலும், உடனே அந்த விமானத்தை ஓட்டிய விமானிகளின் ரத்தத்தை எடுத்துப் பரிசோதனை செய்வார்கள். காரணம் அவர் குடித்துவிட்டு டூட்டிக்கு வந்திருந்தால், ரத்தத்தில் ஆல்கஹால் கலந்திருப்பதன் மூலம் தெரிந்து கொள்ள முடியும் அல்லவா! விமானிகளுக்குள் நடைபெறும் உரையாடல்

தடய அறிவியல் நிபுணர்



கள், தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துடன் விமானிகளின் தொடர்பு ஆகியவற்றைப் பதிவு செய்யும் ஒலிப்பதிவு பெட்டியைப் போட்டுக் கேட்டேன்.

விமானம் ஓடு பாதையில் கிளம்பியதும், விமானிகள் இருவரும் ஜாலியாக பேசத் துவங்கியிருக்கிறார்கள். இரவு பதினோரு மணி வரையில் 'உற்சாக மூடில்' இருந்ததாக விமானத்தை ஓட்டும் பொறுப்பில் இருந்த

ஆ(ப)பத்து!

விமானி கூறியது ரிகார்டரில் பதிவாகியிருந்தது. ஓடு பாதையில் சிறிது தூரம் ஓடி, தரையில் வேகத்தைக் கூட்டி உயரே கிளம்ப வேண்டிய வேகத்தில் பூமிக்கு விடை கொடுக்கும் தருணத்தில் சகவிமானி "பறவை மோதி விட்டது; பறவை மோதி விட்டது" என்று சொல்வது கேட்டது.

இந்த இடத்தில் 'Bird hit' என்பதைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். 'பறவை மோதி விட்டது' என்றால் 'ஏதோ பறவை, விமானிக்கு முன்னால் இருக்கும் கண்ணாடியின் மீது மோதி விட்டது' என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அல்ல; ஜெட் விமானங்களின் இறக்கைகளில் காற்றை இழுத்து, இன்ஜின்களின் வழியாக வெளியே விடும் சாதனங்கள் இருக்கின்றன. விமானம் பறப்பதற்கான நுட்பங்களில் இதுவும் ஒன்று. விமான நிலையத்தில் ஒரு பாதையைச் சுற்றியுள்ள காலியிடங்களில் ஏதாவது பிராணிகள் இறந்து கிடந்தாலோ அல்லது உணவுப் பொருட்கள் இருந்தாலோ பறவைகள் அங்கு வட்டமிட்டபடி இருக்கும். ஓடு பாதையை விட்டு உயரே விமானங்கள் கிளம்பும் போது, இறக்கைகளில் காற்றை உறிஞ்சும் வழிகளில் இந்தப் பறவைகள் மாட்டிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. அப்படி மாட்டிக் கொள்ளும் பறவை இன்ஜினுக்குள் சென்று அகப்பட்டுக் கொண்டால் இன்ஜின் செயலற்றுப் போகும். இதைத்தான் Bird hit என்று சொல்கிறார்கள். இது போன்ற சந்தர்ப்பங்களில் விமானி, மேலே ஒரு சுற்றுச் சுற்றி மறுபடி விமானத்தைக் கீழே இறக்கி விட வேண்டும்.

விமானத்தை ஓட்டும் பொறுப்பில் இருந்த விமானியின் ரத்தத்தைப் பரிசோதனை செய்ததில் அதில் ஆல்கஹால் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இரவு பத்து, பதினோரு மணிக்குக் குடித்திருந்ததாகக் கணக்குப் போடப்பட்டு, அந்த விமானி விமானத்தை ஓட்டும் வேளையில், ஆல்கஹால் எந்த அளவு வீரியத்தோடு ரத்தத்தில் கலந்து மூளையை சற்றே பிசக வைத்திருக்கும் என்றெல்லாம் அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து அறிக்கை தயார் செய்தேன்.

சக விமானி, 'Bird hit' என்று சொன்னவுடன் மேலே கிளம்பி வட்டமடித்து திரும்புவதற்குப் பதிலாக விமானி, விமானத்தின் பிரேக்கை அழுத்தி விட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது. முழு வேகத்தில் வந்து ஒரு பாதையின் முடிவில் கிளம்ப யத்தனித்த நேரத்தில் பிரேக்கை அழுத்தியதால் விமானம் நிலை தடுமாறி, ஓடு தளத்தை விட்டு விலகி, கரடுமுரடான பாதையில் சென்று, நல்லவேளையாக சுவர் இருந்ததால் அதில் மோதி நின்றது. சுவரில் மோதியபோது ஏற்பட்ட சத்தம்தான் வெடிச் சத்தம் போன்று இருந்தது என்பதும் பயணிகளைத் தீவிரமாக விசாரித்தபோது தெரிந்தது. இந்த



டாக்டர் பி. சந்திரசேகரன்

விபத்துக்குக் காரணம், விமானத்தை ஓட்டும் பொறுப்பிலிருந்த விமானி ஆல்கஹால் காரணமாக பதற்றப்பட்டுத் தவறாகச் செயல்பட்டதுதான் என்று அறிக்கை கொடுத்தேன்.

நான் இதுபோன்று அறிக்கை கொடுக்கப் போவது அரசல் புரசலாக, மீடியாவின் மூலமாகவும், அதிகாரிகள் மூலமாகவும் லீக் கானது. அந்த விமானிக்கு மிகவும் வேண்டிய போலீஸ் அதிகாரிகள் சிலர் என்னைப் பார்க்க வந்தார்கள். "அந்த விமானி மிகவும் அனுபவம் வாய்ந்த விமானி. உங்கள் அறிக்கையின் காரணமாக அவருக்கு வேலை போய்விடும்; எனவே கொஞ்சம் உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டார்கள். இதுபோன்று சிபாரிசுகளை நான் என்றைக்குமே ஏற்றுக் கொண்டதில்லை. தடய அறிவியல் துறை, போலீஸ் துறையுடன் இணைந்திருந்தபோது அருள் காவல் துறைத் தலைவராக இருந்தார்கள். யாராவது போலீஸ் அதிகாரிகள் இதுபோன்ற கோரிக்கைகளோடு தடய அறிவியல் துறைக்கு வந்தார் என்று தெரிந்தால் தொலைத்து விடுவார். அதன் பிறகு தடய அறிவியல் துறை போலீஸ் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு செயல்பட்டதால் அவ்வளவாகத் தொல்லைகள் இல்லை.

விமானிக்கு ஆதரவாக வந்த காவல் துறை அதிகாரிகளிடம் தெளிவாக 'ஸாரி' சொல்லி அனுப்பி விட்டேன். அந்த விமான விபத்துக்கான காரணத்தைத் தடய அறிவியலைப் பயன்படுத்தி ஆராய்ந்து அறிக்கை கொடுத்ததை தில்லியில் இருந்து வந்திருந்த உயர் அதிகாரி சத்வேந்தர்சிங் மிகவும் பாராட்டினார். கமல் பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளானது குறித்த மர்மம் வெளிப்பட்டு ரசிகர்களும் அமைதியானார்கள்.

ஒரு பெண் கொலை விவகாரத்தில் நடந்ததைச் சொல்கிறேன். சமையல் அறையில் மேலே அலமாரியிலிருந்து ஏதோ ஒரு பொருளை ஸ்டூலைப் போட்டு எடுக்கும் போது தவறி கீழே விழுந்தார்; விழும் போது சரியாக அவரது நெஞ்சுப் பகுதி அரிவாமணையின் மீது விழுந்தது; அப்போது ஏற்பட்ட காயம் காரணமாக, நிறைய ரத்தம் வெளியேறி இறந்து போனார். போலீஸ் உடனே போஸ்ட்மார்ட்டம் செய்து வழக்கை இந்த அடிப்படையில் முடிக்கப் பார்த்தது. ஆனால் பெண்ணின் அப்பா வுக்கு மட்டும் சந்தேகம். "என் பெண்ணின் மரணத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது" என்று போலீஸ் உயர்அதிகாரிகளிடம் மனு கொடுத்தார். விவகாரம் எங்களிடம் வந்தது. மார்ச்சுவரியில் இருந்த உடலைப் பார்த்தோம். ஒரு அங்குல அகலத்துக்கு காயம். அது அரிவாள்மணை காயம்தான் என்று தெரிந்தது. அந்தப் பெண்ணின் வீட்டை மூலை முடுக்கெல்லாம் சோதனை செய்தோம். ஒரு தடயமும் கிடைக்கவில்லை. வீட்டிற்குப் பின்புறம் கிணறு, காய்கறிச் செடிகள், தென்னை மரங்கள். அந்தப் பகுதியில் சோதனை செய்து பார்த்தபோது ஒரு தென்னை மரத்தடியில் பளபளவென்று ஏதோ....

(தொடரும்)

தேவகௌடா கொடுத்த கியாரண்டி

"நீங்கள் உங்கள் வலிமையைக் காட்டும் விதம் பேரணி நடத்துங்கள். ஜெயலலிதாவோ, மூப்பனாரோ, யார் தலைமையில் உள்ள கூட்டணியில் இணைகிறோமோ அவர்களிடம் பேசி நமக்குத் தேவையான சீட்டுகளைப்



பெற்றுத் தருகிறேன்" என்று தேவகௌடா கொடுத்த உறுதிமொழியால் உற்சாகமடைந்து பேரணி நடத்தினார்கள் ஜனதாதள (மதச்சார் பற்றது) தொண்டர்கள். சும்மாச் சொல்லக் கூடாது, நல்ல உழைப்பு. கூட்டத்தைச் சேர்த்து விட்டார்கள். கொட்டும் மழையிலும் தேவகௌடா கலந்துகொண்டு தொண்டர்களுக்கு உற்சாகமூட்டினார். துறைமுகம் மூன்பு நடந்த ஆர்ப்பாட்டத்தில் கூடுதல் அட்ராக்ஷன்: வி.பி. சிங்! "எந்தக் கூட்டணியாக இருந்தாலும் எங்களுக்குக் குறைந்தபட்சம் ஐந்து இடங்களாவது ஒதுக்க வேண்டும்" என்றார் ஒரு ஐ.த.பிரமுகர்.

— கௌசி

படம்: ராஜன்



புற்றுநோய்க்கு தெய்வீக இயற்கை மூலிகை மருத்துவம்



நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்களும் வளருகின்றன. ஒவ்வொரு நிமிடமும் பழைய செல்கள் அழிந்து புதிய செல்கள் உருவாகி கொண்டே இருக்கின்றன. இதற்கு இயற்கையாகவே ஒரு கட்டுப்பாடு உள்ளது. ஆனால் சில செல்கள் கட்டுப்பாடின்றி உடலின் எந்த இடத்திலும் பல்கிப் பெருகி வளர ஆரம்பிக்கும். கட்டுப்பாடு இல்லாமல் வளர்ச்சியடையும் செல்கள் ஒரு கட்டியாக மாறுகிறது. இதைத்தான் புற்றுநோய் என்கிறோம். எல்லா ரக புற்று நோய்களுக்கும் சில வகை பழக்க வழக்கங்களே காரணமாக இருக்கின்றன. புகையிலை போடுவதால் வாயில் புற்று நோய், சிகரெட் பிடித்தல் காரணமாக நுரையீரல், தொண்டை, உணவுக் குழாய், மூத்திரப்பையில் புற்று நோய், பொடி போடுவதால், மூக்கில் புற்று நோய், மது அருந்துவதால் காமாலை வந்தால் கல்லீரல், இரப்பையில் புற்றுநோய் அதிக குழந்தைகளை பெறுதல், பல ஆண்களுடன் தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றால் கர்ப்பபை புற்று நோய், ஏற்படுகின்றது. மேலும் நாம் உண்ணும் உணவு வகைகள் தயாரிப்பில் நிலங்களில் அதிகமான இரசாயன உரங்கள், மருந்துகள் சேர்ப்பதாலும், சுகாதாரமற்ற சுற்றுப்புற சூழ்நிலைகளாலும், அவ்வப்போது நாம் உபயோகிக்கும் இரசாயன மாத்திரைகளாலும் அதிகமான கோபம், பயம், மன உளச்சல், பரபரப்பு, அடிக்கடி உணர்ச்சி வயப்படுதல் போன்றவற்றின் காரணமாக தோன்றும் நரம்புத் தளர்ச்சியாலும் புற்றுநோய் வரலாம். ஒரு புற்று நோய் செல் பல்கி பெருகி புற்று நோய் கட்டியாக மாறுவதற்கு குறைந்தது 7 முதல் 10 ஆண்டுகள் ஆகும்.

புற்றுநோய் ஆரம்ப அறிகுறிகள் ஒவ்வொரு உறுப்புக்கும் எந்தவிதமான நோய் வந்தாலும் ஒரேவிதமான அறிகுறிகள்தான் தென்படுகின்றன. உதாரணமாக காசநோய், நிமோனியாக் காய்ச்சல் ஆகியன நுரையீரலைத் தாக்கும்போது இருமல், சளி, மூச்சு வாங்குதல், சளியில் இரத்தம் ஆகிய அறிகுறிகள் தென்படுகின்றன. நுரையீரலைப் புற்றுநோய் தாக்கும் போதும், இதே அறிகுறிகள்தான் இருக்கும். இதேபோன்று வயிற்றுப் புண்ணுக்கு இருக்கும் அறிகுறிகள்தான் இரப்பையில் புற்றுநோய் வந்தால் இருக்கும். எனவே எந்த நோயின் அறிகுறிகளும் இரண்டு வாரத்திற்கு மேல் இருந்தால் உடனடி மருத்துவ ஆலோசனை அவசியம். எச்சில் துப்பும்போது ரத்தம் வந்தால் அலட்சியப்படுத்தக் கூடாது. ஏனெனில் புற்று நோய்க்கென தனிப்பட்ட அறிகுறிகள் கிடையாது. பொதுவான அறிகுறிகளுடன் புற்றுநோய் இருக்க வாய்ப்புகள் அதிகம்.

புற்றுநோய்க்கு தெய்வீக மூலிகைகள் வேப்பிலை, வில்வம், துளசி, மாவிலை, அருகம்புல், அத்தி, வெற்றிலை, தும்பை, கீழாநெல்லி, நித்திய கல்யாணி, முருங்கை, நெல்லி, கரிசலாங்கண்ணி, வல்லாரை ஆகியவைகளை பொடி செய்து பின் சமஅளவில் ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒருமணி நேரம் முன்பாக காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் உட்கொள்ள வேண்டும். இம் மூலிகைகளினால் முதலில் புற்று செல்கள் பெருகி வளர்ச்சி அடைவது தடுக்கப்படுகின்றது. பின்னர் புற்று செல்கள் உருவாகாமாலும், கட்டிகள் உடைந்து மெதுவாக வெளியேற்றப்படுகின்றது. இந்த தன்மை மேற்கூறிய மூலிகைகளுக்கு உண்டு என்பது மறுக்கப்படாத உண்மையாகும்.

புற்றுநோய்களைக் (குணமாக்கும்) தடுக்கும் உணவு வகைகள் புற்று நோயாளிகளுக்கு பச்சை காய்கறிகள் நல்லது. மஞ்சள் நிறத்திலும், பச்சை நிறத்திலும் உள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் புற்று நோயைத் தடுக்க கூடியவை. இவற்றில் வைட்டமின் ஏ,சி சக்திகள் அதிகம். வைட்டமின் ஏ் பீட்டாகரோட்டின் என்ற பொருள் உள்ளது. இது ஒரு ஆண்டி ஆக்சிடெண்ட் புற்று நோயை தடுக்கும் குணம் இதற்குண்டு. காரட், தக்காளி, மாம்பழம், பலாப்பழம், கொய்யா, ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, எலுமிச்சை, நெல்லிக்காய், முட்டைகோஸ் பீட்ரூட் போன்றவற்றில் மேற்சொன்ன சத்துக்கள் அதிகமுள்ளன. இவற்றை அடிக்கடி உண்பவர்களுக்கு புற்றுநோய் வரவாய்ப்பில்லை. இதேபோல் நார்பொருள் நிறைந்த உணவுகளை சாப்பிட்டால் பெருங்குடல் தொடர்பான புற்றுநோய்கள் வருவது குறைகிறது. கோதுமை, கம்பு, சோளம், கேழ்வரகு, தேங்காய், நிலக்கடலை, அவரை, கத்திரிக்காய், வெள்ளரிக்காய், வெண்டைக்காய், பட்டாணி, வெங்காயம், பேரிச்சம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றில் நார்ச்சத்து அதிகம். மேலும் முருங்கை கீரை, பொன்னாங்கண்ணி கீரை, மணத்தக்காளி, இலைகள், மஞ்சள், சீரகம், துளசி, கசகசா, வெள்ளைப்பூண்டு, ஏலக்காய் ஆகியவற்றிலும் புற்று நோயைத் தடுக்கின்ற நொதிப் பொருட்கள் அடங்கியுள்ளன. ஆகவே இவைகளை அடிக்கடி நமது உணவுகளில் தவறாமல் பயன்படுத்துவது நல்லது.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : **Dr.M.குருபரன், Dr.M.சபாபதி, & Dr.M.சிவசக்தி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகம்**

P.B. No:30, No:3, திருநாத முதலி நகர், காலேஜ் எதிரில், திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 5 to 7 ✆ 6424285, 6427638

அறிவிப்பு சென்னை, வேலூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தாராபுரம், திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம்-விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்

குறிப்பு டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 26 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.70/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7 & 8-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga. (CR). Ph : 4011589

9-ந் தேதி - பெங்களூர் : காலை 11 to 1 ஹோட்டல் [illegible] ✆ : 2266374

18 & 19-ந் தேதி-புது டெல்லி: காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh. ✆ : 5717126, 5723651

KALKI SHOPPING PAGE

பருக பருக ஆனந்தம்
அதிக ஆனந்தம்
சுத்தமான தஞ்சாவூர்
டிகிரி காப்பிக்கு

ஜீவா காபி

100% பீயூர் பில்டர் காபி பவுடர்

தயாரிப்பாளர்கள் :

ஜீவா காபி ஒர்க்ஸ்
28, பி.வி. நாயக்கன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005.

இலவச டோர் டெலிவரிக்கு
தொடர்பு கொள்ளவும் : 8444725

அருணை

இயற்கை மூலிகை
மருந்துகள்

பண்டைய சித்தர்கள் வாழ்ந்த அண்ணாமலையார் வீற்றிருக்கும் மலைவல புகழ் திருஅண்ணாமலையில் இருந்து மக்களின் பிணி தீர்க்க, சித்தர்கள் திருஏடுகளைப் பின்பற்றி தயாரகி வருவது

அருணை மூலிகை மருந்துகள்

★ அரிய இயற்கை மூலிகைகளால் ஆனது ★ பக்க விளைவுகள் அற்றது ★ இரசாயன கலப்பு அற்றது ★ பத்தியம் தேவையில்லை ★ எல்லா வயதினருக்கும் ஏற்றது ★ செயற்கை நிறங்கள், செயற்கை வாசனை அற்றது.


அறுபத்து மூன்று வகைகளில் ஆயிரத்துக்கும் மேலான நோய்களைத் தீர்க்கும் அபூர்வ அருணை மூலிகை மருந்து வகைகள் அனைத்து (தமிழக, ஆந்திரா, கர்னாடகா, கேரளா, பாண்டி) நகரங்களிலும் கிடைக்கும்.

தயாரித்து வினியோகிப்போர் :

**லக்ஷ்மி ஹெர்பல்ஸ்
காஸ்மெட்டிக்ஸ்**

Spencer Plaza, S-54-B, 2nd Floor, 2nd Phase
769, Anna Salai, Chennai - 2.
Website : www.tiruvannamalai-info.com/arunai.htm E-mail : dhananja@md4.vsnl.net.in

அனைத்து ஏரியாக்களுக்கும் வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகிறது.



அதிர்ஷ்ட விநாயகர்



உயர்தர கண்ணாடியில் கைகளால் உருவாக்கப்பட்டது. இந்த அதிர்ஷ்ட விநாயகர் உருவாகுவதை நீங்கள் எங்களிடம் மட்டுமே நேரில் காண முடியும்.

காஞ்சி மகா பெரியவாள் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டது. உங்கள் கைகளுக்கு வந்த 15 நாட்களுக்குள் கண்டிப்பாக நல்லது நடக்கும். நம் இல்லத்திற்கு வருகின்ற நம் உறவினர்களுக்கும் மற்றும் சுமங்கலிகளுக்கும் இந்த **அதிர்ஷ்ட விநாயகரை** அவர்களுக்கு தருவதினால் மேலும் நன்மைகள் பல பெறுவீர்கள். மூன்று அளவுகளில் கிடைக்கும்.விலை ரூ. 30.00, 60.00 மற்றும் 90.00 ரூபாய். கூரியர் சர்வீஸ் மூலம் பெற விரும்புகிறவர்கள் தமிழ் நாட்டிற்குள் ரூ. 15.00 பிற மாநிலங்கள் ரூ. 30.00 சேர்த்து அனுப்பவும்.எங்களிடம் காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை நேரில் பெற்றுக் கொள்ளலாம். விடுமுறை கிடையாது.

புத்தாண்டை முன்னிட்டு அதிர்ஷ்ட விநாயகரை மொத்தமாக வாங்கி பரிசு அளிக்க விருப்பம் உள்ளவர்கள் எங்களிடம் 15.12.2000க்குள் முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.


உங்கள் தேவைகளுக்கு எங்களுக்கு Money order அல்லது Demand Draft Payable at Chennai in favour of. B. vinoba. (உங்கள் விலாசத்தை தெளிவாக எழுதவும்.)

இந்த அதிர்ஷ்ட விநாயகரை வரும் இனிய புத்தாண்டின் பொழுது நாம் இதை மற்றவர்களுக்கு பரிசளித்து அவர்கள் மகிழ்வதை பார்த்து நாமும் மகிழ்வோமே!

உருவாகும் இடம்:

ப. வினோபா
புதிய எண்.15, பஜார் சாலை, சைதாப்பேட்டை,
சென்னை – 15. (பிரேம்ஸ் கண் மருத்துவமனை அருகில்)
Ph: 91-44-4333011, E.mail:vinoba_aakash@yahoo.com

எல்லா ஊர்களுக்கும் விநியோகஸ்தர்கள் தேவை





2000 டிசம்பர் 10
விக்ரம கார்த்திகை 25
மலர் : 59
இதழ் : 19

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




மல்டிநேஷனல் மோகம்!

இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் என்பதை எல்லா அரசியல்வாதிகளுமே தேர்தல் சமயத்தில் ஞாபகம் வைத்துக்கொண்டு முழங்குகிறார்கள். ஆட்சியில் அமர்ந்த பிறகோ ஆன்மாவைச் சுலபமாகத் துண்டித்துவிட்டு அரசியல் பலத்தையும் பண பலத்தையும் மையமாக்கி இயங்குகிறார்கள்.

தற்போது ஆட்சியிலிருக்கும் மத்திய அரசும் இதற்கு விதிவிலக்கு அல்ல. தேசிய ஜனநாயக முன்னணி அரசின் பிரதான கட்சியான பி.ஜே.பி தனது தேர்தல் அறிக்கையில் விவசாயம் - விவசாயம் சார்ந்த தொழில்கள் குறித்து ஒரு பெரிய செயல் திட்டமே வகுத்துக் கொடுத்தது. அத்தேர்தல் அறிக்கையின் வேறு பல அம்சங்களுடன் கருத்து வேறுபாடு கொண்டவர்கள்கூட விவசாயத்துக்கும் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கும் அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை வரவேற்றுப் பாராட்டினார்கள்.

ஆனால், ஆட்சியில் அமர்ந்த பின்னர் அரசின் அணுகுமுறை மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

விவசாயத் துறையும் விளைபொருள்களும் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை சரியான நேரத்தில் சுட்டிக் காட்டும் உருப்படியான ஒரு காரியத்தைச் செய்திருக்கின்றனர் இரண்டு முன்னாள் பிரதமர்கள். மதச்சார்பற்ற ஜனதாதளம் சார்பில் சென்னையில் நடத்திய கூட்டத்தில் வி.பி. சிங், தேவேகௌடா ஆகிய இருவரும் மத்திய அரசின் விவசாய விரோதப் போக்கைக்



கண்டித்துள்ளனர்.

'இந்தியாவில் தாராளமாக விளையும் தேயிலை, ரப்பர், சமையல் எண்ணெய் வித்துக்கள் போன்ற விவசாய விளைபொருட்களைக்கூட இறக்குமதி செய்ய அரசு அனுமதித்து வருகிறது. இதனால் உள்நாட்டு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள்' என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் இருவரும்.


பால் பவுடர் உள்ளிட்ட 714 வகையான விவசாயம் சார்ந்த உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்ய இதுநாள் வரை தடை இருந்து வந்தது. இந்தத் தடையை நீக்கி சர்வதேச நிறுவனங்களை இந்தியச் சந்தைக்குள் நுழைய அனுமதித்துவிட்டது மத்திய அரசு. உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு இதனால் மரண அடி.

தவிர, 'எண்ணெய் வித்துக்கள் இறக்குமதி பேரிலான தீர்வை சுமார் 300 சதவிகிதம் அதிகரிக்கப்படும்; அவ்வாறு உயர்த்துவதன் மூலம் எண்ணெய் வித்து இறக்குமதிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டுவிடும் என்பதால் உள்நாட்டில் விளையும் எண்ணெய் வித்துக்களுக்கு நல்ல விலை கிடைக்கும்' என்று கொள்கை அளவில் அறிவித்தது மத்திய அரசு.

ஆனால், நடைமுறையில், எண்ணெய் வித்துக்கள் இறக்குமதி பேரிலான தீர்வையை வெறும் இருபது சதவிகிதம்தான் அதிகரித்திருக்கிறார் மத்திய விவசாயத்துறை அமைச்சர் நிதீஷ் குமார்.

உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் வாங்குவதைக் காட்டிலும் இறக்குமதி மலிவு என்கிற நிலைமை இருப்பதால் விவசாயிகள் நிறைய விளைவித்து வைத்துக்கொண்டு, நல்ல விலை பெற முடியாமல் அவஸ்தைப்படுகிறார்கள்.

இத்தனையும் போதாதென்று பல்நாட்டு நிறுவனங்களை இந்தியாவில் 'கார்பரேட் ஃபார்மிங்' எனப்படும் தொழில்முறை விவசாயத்தில் ஈடுபட அனுமதிக்கலாம் என்கிற யோசனையும் மத்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.



இதன் பின் விளைவுகள் என்னவாயிருக்கும் என்பதை சற்று யோசிக்க வேண்டும்.

பல்நாட்டு நிறுவனங்கள் பல்லாயிரம் கோடி முதலீடு செய்து முழுக் கிராமங்களையே விலைக்கு வாங்கிக்கொள்ளும். நவீன இயந்திரங்கள், விவசாய தொழில் நுட்பம் என்று பலவற்றைப் புகுத்தி, பாரம்பரிய விவசாய முறைகளையும் சிறு விவசாயிகளின் பிழைப்பையும் ஒருங்கே அழித்துவிடக் கூடும் இந்தப் பல்நாட்டு நிறுவனங்கள்.

இந்திய ஜனத் தொகையில் பெரும் பகுதியினர் விவசாயத்தை நம்பி வாழ்க்கை நடத்துபவர்கள்தான்.

சுதேசி கொள்கையில் பற்றுள்ள பி.ஜே.பி, இவர்களின் நலனை மறந்து மல்டிநேஷனல் மோகத்தில் மூழ்கியுள்ள கணத்தில் தட்டி எழுப்பியிருக்கிறார்கள் வி.பி. சிங்கும் தேவேகௌடாவும்.

நாட்டின் பெரும்பான்மை ஜனத்தொகையின் பொருளாதார வளம் பாதிக்கப்படும்போது அந்த பாதிப்பின் அதிர்வுகள் எல்லா துறைகளையும் தொட்டு அசைக்கும். வி.பி.சிங், ராஜீவ்காந்தி ஆட்சிக் காலத்தில் தொடங்கி வைத்த தாராளமயமாக்கல் கொள்கையின் நல்விளைவுகள் நேர்வழியில் தொடருவதற்குப் பதிலாக விபரீத பாதையில் திசை திரும்பிவிடும்.

பசுமைப் புரட்சிக்குப் பின் இந்தியாவில் விவசாயமும் விளைச்சலும் பெருகியுள்ளன. ஆனால் அந்த அளவுக்கு விவசாயம் சார்ந்த தொழில்கள் அபிவிருத்தி ஆகவில்லை.

அதற்கான அடிப்படை வசதிகள் கிராமப்புறங்களில் இல்லாதிருப்பது ஒரு முக்கியமான காரணம்.

இந்த வசதிகளைப் பெருக்கி கிராம பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு வழியமைத்துத் தர வேண்டும். இந்த யோசனையை வி.பி. சிங்கோ தேவேகௌடாவோ தெரிவிக்கவில்லையென்றாலும் இந்தியப் பொருளாதார மேம்பாட்டுக்கும் பெரும்பான்மை இந்தியர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் இதுவே முதலும் முடிவுமான வழி. ○

அசாருக்கு ஹூசு தரும் அதிரடி அட்வைஸ்

கிரிக்கெட் வீரர் அசாருதீன் வீட்டு வாசலில் ஏகக் கூட்டம். என்னைப் பார்த்ததும் போலீஸ் கான்ஸ்டபிள் மாதிரி இருந்த ஒருவர் ஓடி வந்தார்.

"ஏம்ப்பா பாக்க ஹூசு மாதிரி இருக்கியே! நீ சி.பி.ஐயா, கிரிக்கெட் போர்டா, இன்கம் டாக்சா இல்லை போலீசா?"

"நான் தாவூத் இப்ராஹிம்..!"

நான் பேரை முழுதாகச் சொல்லி முடிப்பதற்குள் மாயமாய் மறைந்தே போனார் அந்த மகானுபாவர். 'நான் தாவூத் இப்ராஹிமுக்கும் அசாருக்கும் உள்ள தொடர்பைப் பற்றித் தெரிந்து கொள்ள வந்த பொது ஜனம்' என்று ஹூசுத்தனமாக முழுதாகச் சொல்லியிருந்தால்... என்னை அங்கேயே போட்டுத் துவைத்திருப்பார்கள். அசாரின் வீட்டுக்குள் பாய்ந்தேன்.

அசார் இருக்கும் அறையைக் கண்டு பிடித்தேன். ஆனால் உள்ளே நுழைய பயமாக இருந்தது. மெதுவாக தலையை மட்டும் நீட்டிப் பார்த்தேன். அசார் பார்த்து விட்டார். அவ்வளவுதான் கேள்விக்கணைகளால் என்னைத் துளைத்துச் சல்லடையாக்கிவிட்டார்.

"யாரது? உன் பெயர்? தகப்பனார் பெயர்? நிரந்தர விலாசம்? வயது? எத்தனை வருடங்களாக கிரிக்கெட் விளையாடுகிறாய்? குப்தா என்ற பெயரில் யாரையாவது தெரியுமா? தாவூத் இப்ராஹிம் என்பவர் உன்னோடு பேசியிருக்கிறாரா? எத்தனை செல்போன் வைத்திருக்கிறாய்? அவையெல்லாம் யார் யார் பேரில் இருக்கிறது?"

அவர் கேட்ட வேகத்தில் எனக்கே மூச்சு வாங்கியது. பாவம்! ஒரு மனிதரை இப்படி சி.பி.ஐ. கிரிக்கெட் போர்டு, வருமானவரி, பத்திரிகைக்காரர்கள் என்று கேள்விகளால் வறுத்து எடுத்தால், அவருக்கும் கேள்விகள் கேட்க ஒரு வடிகால் வேண்டாமோ?

"நான் சி.பி.ஐ...." என்று ஆரம்பித்தேன்.

"ஓ சாரி சார். வாங்க சார். உக்காருங்க சார். என்ன சாப்பிடறீங்க சார்? ஆப்பிள் ஜூஸ் சொல்லட்டுமா? டிபன் கொண்டு வரச் சொல்லட்டுமா?" உபசரிப்பில் திக்கு முக்காடிப் போனேன்.



"நான் சி.பி.ஐ. கிரிக்கெட் போர்ட் விசாரணையில் உங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கிறேன். என் பெயர் ஹூசு."

"அடச்சீ, எழுந்திருய்யா. நான் கூட என்னமோ ஏதோன்னு பயந்தே போய்ட்டேன். கடவுளே! என் நிலைமையைப் பாத்தியா? தெருவுல போற வர ஹூசெல்லாம் எனக்கு ஹெல்ப் பண்றேன்னு சொல்றாங்களே."

"அங்கதான் தப்பு பண்றீங்க அசார் சார். சாதாரண கேசுல புத்திசாலி வக்கீல வச்சித் தப்பிச்சிரலாம். ஆனா உங்க மாதிரி படு சிக்கலான கேஸ்ல, என்னை மாதிரி ஹூசுக்குத்தான் பிரமாதமான ஐடியா வரும். அதுவுமில்லாம நான் தமிழ்நாட்டுலேர்ந்து

வரேன். அங்க இதைவிட குழப்பமான கேசெல்லாம் இருக்கு. மறந்துராதீங்க."

"சரி, சரி, உக்காரு லூசு. இந்த மேட்ச் ஃபிக்சிங் கேசுலேர்ந்து தப்பிக்க நிஜமாகவே வழியிருக்கா?"

"ஏன் இல்லாமல? நிறைய இருக்கு. இப்ப சி.பி.ஐ. கிரிக்கெட் போர்டு என்ன சொல்றாங்க? நீங்க காசு வாங்கிட்டு மோசமா ஆடினதாச் சொல்றாங்க அவ்வளவுதானே?"

"ஆமா. அதுக்குச் சரியான பதிலடி கொடுக்கணும். எப்படின்னு சொல்லு லூசு?"

"ரொம்ப சிம்பிள். நான் காசு வாங்கிட்டு



மோசமா ஆடலே. என்னோட விளையாட்டு இயல்பாவே மோசம்தான்னு சொல்லிருங்க"

"உனக்கு லூசுன்னு சரியாத்தான் பேர் வச்சிருக்காங்க. அதுக்கு என்ன ஆதாரம்னு கேட்டாங்கன்னா..."

"நீங்க இப்படிச் சொல்லிருங்க. 'உங்களுக்கு என் மேல சந்தேகம் இருந்துச்சின்னா திருப்பி அதே மேட்சை அதே ஊர்ல அதே கிரவுண்ட்ல, அதே ப்ளேயர்சோட அதே எதிர் டீமோட அதே அம்பயரோட நடத்துங்க. நானும் அதே மாதிரி ஒரு ரன் எடுத்து அவுட் ஆகிக் காமிக்கிறேன்'னு. ஒரு ரன்ல அவுட்டாறதுக்கு உங்களுக்குச் சொல்லியா தரணும்?"

"ஏய் லூசு? நீ லிமிட்டத் தாண்டற. ஜாக்ரதை."

ஆர். ஸ்ரீதரன்

"ஐயையோ கோச்சிக்காதீங்க அசார். உங்களுக்கு இந்த வழி பிடிக்கலேன்னா, விட்ருங்க. உங்க நண்பர் அஜய் ஜடேஜாவோட வழி இருக்கவே இருக்கு."

"அது என்ன அஜய் ஜடேஜாவோட வழி?"

"இப்ப கிரிக்கெட் போர்டுல என்ன கேக்கறாங்க? அந்த புக்கி பேர் என்ன குப்தாவோ யாரோ அவர் உங்க ஹோட்டல் ரூமுக்கு வந்து உங்கள பல முறை பார்த்தாராமே? உங்களோட செல்போன்ல பேசினாராமே?' பணம் கொடுத்தாராமே?' அப்படியெல்லாம் கேக்கறாங்கல்ல?"

"ஆமா. அதுக்கு எப்படி பதில் சொல்றது? அவர் வந்து பார்த்தது, செல் போன்ல பேசினது, பணம் கொடுத்ததுக்கெல்லாம் ஆதாரம், சாட்சியெல்லாம் காமிக்கிறாங்களே?"

"அப்பத்தான் அஜய் ஜடேஜா லைன்ல போயிரணும். சிக்கலேயில்லை. நீங்க என்ன? சொல்லணும்னா 'நான் தங்கியிருந்த ஹோட்டல் ரூமுக்கு அந்த குப்தாங்கறவர் அன்னிக்கு முந்நூறு தரம் வந்துட்டு போனது உண்மைதான். ஆனா அவர் புக்கிங்கறது எனக்குத் தெரியாது. அவர் அந்த ஹோட்டல்ல வேலை பாக்கற ரூம்பாய்னு நினைச்சிட்டேன். அவர் என்னோட செல் போன்ல மணிக்கணக்கில் பேசினதும் நிஜம்தான். ஆனா அவர் புக்கின்னு சத்தியமா நான் நினைக்கவேயில்லை. செல்போன் கம்பெனில இருந்து டெஸ்ட் பண்றாங்கன்னு நினைச்சிட்டேன்."

நறுக்கென்று என் மண்டையில் ஒரு குட்டு விழுந்தது.

"ஏய் அறிவு கெட்ட லூசு, அவர் என்கிட்ட பணம் கொடுத்தார்னு வேற நிரூபிச்சிட்டாங்களே?"

"இங்கதான் நீங்க லூசோட முழுத்திறமையும் பாக்கப் போறீங்க. பணவிஷயத்த உள்ள கொண்டுவந்தாங்கன்னா, டக்குன்னு ப்ளேட்டை மாத்திருங்க."

"எப்படி?"

"அந்தாளை நான் என் ரசிகர்னு நினைச்சிட்டேன். அவர் ஏதோ சின்ன பேப்பர்ல ஆட்டோகிராப் வாங்க வந்தாரு. நான் கையெழுத்துப் போடும் போதுதான் பார்த்தேன். அந்த பேப்பர் வழுவழுன்னு எழுத சுகமா இருந்தது. 'எனக்கு இந்த மாதிரி பேப்பர் நிறைய வேணுமே'ன்னு அவர் கிட்ட சொன்னேன். அந்தாளு உடனே தன்னோட சூட்கேஸைத் திறந்து கத்தை கத்

தையா – சாரி – கட்டுக்கட்டா – அதே மாதிரி பேப்பரை என்கிட்டே கொடுத்தாரு. அவர் போனப்புறம்தான் அதெல்லாம் ரூபாய் நோட்டுன்னு கண்டுபிடிச்சேன். அவர்கிட்ட திருப்பிக் கொடுத்துரலாம்னு பார்த்தா, அந்தாளு எங்க போனார்னு கண்டுபிடிக்கவே முடியலை'ன்னு சொல்லி ருங்க."

"அத விடு ஓாசு. இந்த இன்கம்டாக்ஸ் காரங்க தொல்லைத் தாங்க முடியலை. பத்து கோடி ரூபாய் சொத்து எப்படி வந்ததுன்னு கேக்கறாங்க? அதுக்கு எப்படிப் பதில் சொல்றது?"

"ரொம்ப சிம்பிள். நான் ஒரு பெரிய பணக்காரருக்கு கிரிக்கெட் விளையாடச் சொல்லிக் கொடுத்தேன். அதுக்கு சந்தோஷப்பட்டு அவர் கொடுத்த அன்பளிப்பு தான் அந்தப் பத்து கோடி ரூபாய் சொத்துன்னு சொல்லி கேசை முடிச்சிருங்க."

"சரி, அத வச்சி வருமானவரி ஆளுங்கள சமாளிச்சிடறேன். இந்தக் கிரிக்கெட் போர்டு, பத்திரிகைக்காரங்க ரசிகர்கள் – இவங்க எல்லாம் மாத்தி மாத்தி கேக்கறாங்க. நான் ஏன் சொதப்பலா வெளையாடி னேன்னு. அதுக்கு என்ன பதில் சொல்றது, சொல்லு."

"எல்லாம் மக்களுக்காகவும் நாட்டுக் காகவும்தான்னு சொல்லிருங்க."

"எனக்குப் புரியலையே."

"இப்போ நீங்க ஜெய்ப்பூர் மேட்ச்ல ஒழுங்கா விளையாடியிருந்தா என்ன ஆகியிருக்கும்? இந்தியா நிறைய ரன் எடுத்திருக்கும். அதனால மேட்ச் முடியும் போது ரொம்ப டென்ஷனாகியிருக்கும். கடைசி ஒரு பால்ல ஒரு ரன் அப்படின்னு எல்லாருக்கும் பிபி ஏறும். சில பேருக்கு ஹார்ட் அட்டாக் கூட வந்துரும். அதெல்லாம் வேண்டாம்னு தான் வேணும்னே ஒரு ரன் எடுத்து அவுட் ஆயிட்டேன்னு சொல்லிருங்க. அதனால இந்தியா தோக்கறது நிச்சயமாயிருச்சு. யாருக் கும் டென்ஷன் இல்லை. அது மட்டுமில்லை. அன்னிக்கு நீங்க அவுட் ஆனதுக்கப்புறம் யாருமே மேட்சைப் பார்க்கலை. அதனால லட்சக்கணக்கான பேர் தங்களோட வேலைக்குத் திரும்பிட்டாங்க. அதனால நாட்டுக்கு லட்சக்கணக்கில லாபம்னு வேற சொல்லலாம்."

"ஏய் ஓாசு. நீ நக்கல் பண்றியா சீரியசாச் சொல்றியான்னே தெரியலை."

"சரி, அது பிடிக்கலேன்னா விடுங்க."

"என்கிட்ட அந்த சாட்சி, இந்தப் பேப் பர்னு காமிக்கும் போது என்ன சொல்ற துன்னே தெரியல, ஓாசு."

"அசார்ஜி, அந்த மாதிரி பிரச்னைக்கு ஒரு அமெரிக்க வழி இருக்கு. அதை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரீகன் வெற்றிகரமா கையாண்டாரு. நெருடலான, சிக்கலான விஷயங்களைப் பத்தி கேள்வி கேட்டாங்கன்னா, 'எனக்கு எல்லாமே மறந்து போச்சு. எதுவுமே ஞாபகத்துக்கு வரலேன்னு சொல்லிருங்க. உங்கள ஒண்ணும் பண்ண முடியாது. ரொம்ப கேள்வி கேட்டாங்கன்னா, 'கிரிக்கெட்டா? அது உழவர் சந்தையில கிடைக்குமா? கிலோ என்ன விலை இருக்கும்? ஓ பேட்டா? பேட்னா வௌவால்னுதானே அர்த்தம்? பாலா? ஸ்டம்ப்பா? அந்த மாதிரி எதுவும் கேள்விப்பட்டதேயில்லையே. வர வர எனக்கு அநியாயத்துக்கு மறதி ஜாஸ்தியா யிருச்சி. அப்படின்னு சொல்லிப் பாருங்க. கேக்கறவங்க முடியப் பிச்சிப்பாங்க."

"அப்புறம் என்னைப் பைத்தியம்னே முடிவு கட்டிருவாங்க. ஏதாவது ஒழுங்கா ஐடியா கொடுன்னா, இப்படி சித்திரவதை பண்றியே."

"சரி, அத விடுங்க. நமக்கு அமெரிக்க வழி வேண்டாம். உள்ளூர்லயே ஒரு நல்ல வழி இருக்கே?"

"என்ன அது? சொல்லு, சொல்லு."

"நம்ம சுப்பிரமண்ய சுவாமியோட வழி. முதல்ல ஒரு பிரஸ் மீட்டுக்கு ஏற்பாடு பண் ணுங்க. அங்க ஒரு அதிரடி ஸ்டேட்மென்ட் ஒண்ணு விடுங்க."

"எந்த மாதிரி?"

"'தொண்டர் அணி'ன்னுதான் கேள்விப் பட்டிருக்கேன்; உங்க கட்சியிலே 'தொண்டர் அணி'ன்னு ஒரு அணி இருக்கே... ஏன்?"

"கட்சியோட கொள்கைகளைக் குழி 'தோண்டி'ப் புதைக்கவாம்!"

– தஞ்சை தாமு



"டிசம்பர் மாதம் இருபத்தியெட்டாம் தேதி சி.பி.ஐ. கவுந்துரும்னு எனக்குச் செய்தி கிடைச்சிருக்குன்னு ஒரு போடு போடுங்க. சி.பி.ஐகாரங்க ஆடிப் போயிருவாங்க.

"இதெல்லாம் பலிக்கலைன்னா கடைசியா ஒரு வழியிருக்கு. ஆனா அது ரொம்ப அதிரடி வழி. சொல்லவே பயமா இருக்கு."

"தைரியமாச் சொல்லு."

"தமிழ்நாட்டுல அப்படித்தான் ஒரு பெரிய கட்சித் தலைவி ஒரு நிலத்தை வாங்கினது சம்பந்தமா ஊழல்ல மாட்டிக்கிட்டாங்க. அப்ப என்ன சொன்னாங்க தெரியுமா? நிலம் வாங்கின பத்திரத்துல இருக்கறது என்னோட கையெழுத்து இல்லை. யாரோ ஃபோர்ஜரி பண்ணிட்டாங்கன்னு சொன்னாங்க. நீங்களும் அதே மாதிரி சொல்லிருங்களேன். கேசெல்லாம் பொடிப் பொடியாயிரும்."

'ணங்'கென்று தலையில் கொட்டினார் சங்கீதா பிஜ்லானியின் மணவாளர்.

"உன் மண்டையில ஒண்ணுமே இல்ல. அதான் குட்டும்போது இப்படி சத்தம் வருது. ஏய் லூசு, உங்கத் தலைவி மாட்டிக்கிட்டது கையெழுத்து வெவகாரம். அதனால ஃபோர்ஜரின்னு சொன்னாங்க. இங்க நான் நாள் பூரா கிரிக்கெட் மாட்ச் ஆடினதே ஃப்ராடுன்னு சொல்றாங்க. அதுல எப்படி ஃபோர்ஜரின்னு சொல்ல முடியும்?"

"அங்கதான் விஷயமே இருக்கு. நீங்க ஃபோர்ஜரின்னு சொல்ல வேண்டாம். 'எனக்கு வேண்டாதவங்க நிறைய பேர் இருக்காங்க. அவங்க எல்லாம் சேர்ந்து அமெரிக்காவுல இருக்கற ஒரு விஞ்ஞானிக்கு கோடிக்கணக்குல டாலரைக் கொடுத்து என்னை மாதிரியே ஒரு ஆளைக் க்ளோன் பண்ணச் சொல்லி அந்த க்ளோனை மோசமா விளையாடச் சொல்லி என்னை மாட்டி விட்டாங்கன்னு சொல்லிருங்க. அன்னிக்கு ஜெய்ப்பூர்ல சொதப்பலா வெளையாடினது அசாருதீனா, இல்லை அவரோட க்ளோனான்னு கண்டுபிடிக்கறதுக்குள்ள அம்பது வருஷம் ஆயிரும். இது எப்படி இருக்கு?"

பயங்கரமாகக் கத்துவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அசார் படு சீரியசாக செல்போனை எடுத்துப் பேச ஆரம்பித்தார்.

"யாரு. தாவூத் இப்ராஹிமா? ஏ.கே ஃபார்ட்டி செவனோட ரெண்டு பேரை அவசரமா என் வீட்டுக்கு அனுப்புங்களேன். இங்க ஒரு லூசு லொள்ளு பண்ணிக்கிட்டு இருக்கு. அதப் போட்டுத் தள்ளணும்."


'ஐயோ சாமி. இந்த ஆட்டத்துல நான் இல்லப்பா' என்று நினைத்தபடி, விட்டேன் ஜூட்!



"காங்கிரஸ் மாநாட்டுலே நீங்க எழுதின புத்தகம் ஏராளமா வித்துச்சா?... புத்தகம் பேரு என்ன?"

"கோஷ்டி சண்டையில் வெல்வது எப்படி?"

– தஞ்சை தாமு



"எதுக்குத்தான் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறதுன்னு விவஸ்தை இல்லாமல் போயிடிச்சா?"

"ஆமாம், கா.ம.க. கட்சியினர் கொள்கை பற்றி பேசுகின்றனரே, அது எங்கே இருக்குன்னு சி.பி.ஐ. விசாரிக்கணுமாம்!"

– மங்கை




"என்னைக் கல்யாணம் செஞ்சுகிட்ட பிறகுதான் அவருக்கு டைபிஸ்ட் வேலை கெடச்சுது..."

"அதற்கு முன்னால வேலை இல்லாமல் இருந்தாரா...?"

"இல்லை... ஒரு கம்பெனியில மேனேஜரா இருந்தார்...!"

– டி.எஸ். பாலு



கலைஞர் அரசில்

அறநிலையத்துறையில் அரும்பணிகள்

திருக்கோயில்களில் திருப்பணிகள்



ந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகையில் இல்லாத
நக்கோயில்களில் ஓய்வு பெற்ற கிராமப் புற பூசாரிகளுக்கு ஓய்வூதியம் ரூ.500.

க்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட கோயில் நிலங்கள்
.60 ஏக்கர், 380 மனைகள் .

.365 கோடி எனவிருந்த வருமானம் ரூ.548 கோடி என உயர்வு.

.6.99 முதல் தொடங்கப்பட்ட ஆகம பயிற்சி மையங்கள்
வத் திருமுறை ஆகம பயிற்சி மையங்கள் 20
ணவ திவ்யபிரபந்த பயிற்சி மையங்கள் 7

நப்பணி முடிந்து திருக்குடமுழுக்கு நடைபெற்ற கோயில்கள்-2459
91 முதல் 1996 வரை 828)



12 கோயில்களில் ரூ. 60 கோடி மதிப்பில் திருப்பணி
ற்றும் இதர வேலைகள் நடைபெறுகின்றன.

சிட்னியில்



பயோ-டெக்னாலஜி! இந்த வார்த்தை இப்போது அதிகமாக உச்சரிக்கப் படுகின்றது. இந்த உயிரியல் தொழில்நுட்பத் துறையில் தமிழக அரசும் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் நாம் பல்கலைக் கழக மூத்த விரிவுரையாளர் டாக்டர் ஏ.எஸ். கந்தராஜா அவர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பயோ டெக்னாலஜியில் சர்வதேச அளவில் பெரிதும் மதிக்கப்படுகின்ற முன்னணி விஞ்ஞானிகளில் ஒருவர் இவர். இலக்கிய ஈடுபாடு நிரம்பக் கொண்டவர். இவர் எழுதிய சிறுகதைத் தொகுப்பு 'பாவனை பேசலன்றி' சமீபத்தில் சென்னையில் வெளியிடப்பட்டது. தற்போது ஆஸ்திரேலிய தலைநகர் சிட்னியில் வசித்து வரும் இவர் அங்கு 'தமிழ் முழக்கம்' என்ற பெயரில் பண்பலை வானொலி அலைவரிசை ஒன்றையும் நடத்தி வருகிறார். 'தமிழ் முழக்கம் கந்தராஜா' என்றே இவரைப் பல நேயர்கள் அறிந்திருக்கிறார்கள்.

அறிவியல், எழுத்து, ஒலிபரப்பு என்று மூன்று முகங்களை வெற்றிகரமாகக் கொண்டிருக்கும் கந்தராஜா சமீபத்தில் உகாண்டாவிலிருந்து திரும்பும் வழியில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தாவர இயல் துறைக்கு வருகை தரும் பேராசிரியராக வந்திருந்தார்.

"தங்களது பணி பற்றி...?"

"மேற்கு சிட்னி பல்கலைக் கழகத்தில் உயிரியல் தொழில் நுட்பத் துறையில் மூத்த விரிவுரையாளர்; அத்துறையின் தலைவர். ஆனால் அதிகமாக வெளியில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறேன். உலக வங்கி, ஜெர்மனி அரசின் அமைப்பான ஜி.டி. இஸட், ஆஸ்எய்ட் போன்ற அமைப்புகள் உலகின் பல நாடுகளுக்கும் என்னை அனுப்பி, இளம் விஞ்ஞானிகளுக்கு இத்துறையில் பாடம் எடுக்குமாறு பணிக்கின்றன. அந்த முறையில்தான் இப்போதைய சென்னை முகாம்."

" 'பயோ டெக்னாலஜி' என்பது என்ன?"

"மரபணுக்களை மாற்றுவதன் மூலம் புதிய இனத்தையும், உச்ச அளவு விளைச்சலையும், உற்பத்தியையும் தரக்கூடிய பயிர்களை உருவாக்கக் கூடிய அறிவியல்தான் பயோ டெக்னாலஜி. குளோனிங் கூட ஒரு வகை உயிரியல் தொழில்நுட்பம்தான். புதிய விலங்கினங்களை உருவாக்குவதன் மூலம் பால் உற்பத்தியையும், இறைச்சியின் அளவையும் மிக அதிகமாக்க முடியும். இப்படி பல நல்லதுகளைச் செய்யும் இந்த பயோ டெக்னாலஜிக்கு மறுபக்கமும் உண்டு..."

"அப்படியென்றால்?"

"உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இப்போது அமெரிக்கா சிலவகை விதைகளை உருவாக்கி வருகிறது. விளைச்சல் அமோகமாக இருக்கும். ஆனால் இந்த விதைகளால் புதிய விதைகளை உருவாக்க இயலாது. இன்னொரு வகையில் சொல்வதானால் இந்த விதை வேண்டுமானால் ஒவ்வொரு முறையும் அமெரிக்காவின் கருணையை எதிர்பார்க்க வேண்டும். தனது ஆயுத பலத்தால் மற்ற நாடுகளை இனி அடிமை கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்ட அமெரிக்கா இந்த முறையில் அதைச் சாதிக்க முயலுகிறது. ஏனெனில் இது 'பசி' சார்ந்த விஷயமில்லையா? இப்படி சில எதிர்மறை விளைவுகளும் உண்டுதான்!"

"வருடாவருடம் தென் ஆப்ரிக்கா,

உகாண்டா, கென்யா, இந்தியா என்று சுற்றிக் கொண்டே இருக்கிறீர்கள். ஆப்ரிக்க நாடுகளில் என்ன நிலைமை?"

"தென் ஆப்ரிக்காவைத் தனியாகவும், கென்யா, உகாண்டா நாடுகளைத் தனியாகவும் எடுத்துக் கொண்டு பார்க்க வேண்டும். முக்கியமான வித்தியாசம் என்னவென்றால் தென் ஆப்ரிக்காவில் வெள்ளையர், கறுப்பர், இந்தியர். மற்ற இரண்டு நாடுகளிலும் கறுப்பர், இந்தியர் மட்டுமே.

கென்யாவிலும், உகாண்டாவிலும் இந்தியர்கள் என்றால் ஒரு கசப்புணர்வு இருப்பதாகவே நான் உணர்கிறேன். அதிலும் குறிப்பாக உகாண்டாவில். சர்வாதிகாரி இடி அமீன் அங்கிருந்து இந்தியர்களை வெளியேற்றியபின் அந்நாட்டுப் பொருளாதாரத்தில் பெருத்த பின்னடைவு. முன்பு 80 உகாண்டா ஷில்லிங் தந்தால் ஒரு அமெரிக்க டாலரை வாங்கி விடலாம். இப்போது 1835 ஷில்லிங் தர வேண்டும். இந்தியர்கள் இருந்தவரை வர்த்தகம், தொழில் எல்லாம் அவர்கள் கையில் இருந்தன. அவர்கள் போனதும் வீழ்ச்சி. 'இந்தியன் என்ன அப்படி உசத்தி?' என்று ஓர் எண்ணம். உகாண்டாவில் தற்போது வாழும் இந்தியர்கள் இடி அமீன் காலத்திற்குப் பின்பு மீண்டும் குடியேறியவர்களே. கென்யாவில் அரசுத் துறைகளில் இந்தியர்களுக்கு வேலை இல்லை. அரசு சாராத என்.ஜி.ஓ. அமைப்புகளில்தாம். மற்றபடி பெரிய வர்த்தக நிறுவனங்கள், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களையெல்லாம் இந்தியர்கள் வெற்றிகரமாக நடத்துகிறார்கள். அவர்களின் கீழ் ஏராளமான கறுப்பர்கள் வேலை செய்கிறார்கள்."

"இடி அமீன், உகாண்டா என்றாலே நரமாமிசம் சாப்பிடுபவர்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. இடி அமீன் பற்றிய இத்தகைய செய்திகள் உண்மையா?"

"இல்லை. சுத்த கட்டுக்கதை. அவர்களின் நிறத்தையும் உருவ அமைப்பையும் வைத்து புனையப்பட்டவையே தவிர இதில் எள்ளளவும் உண்மையில்லை."

"தங்களின் கறுப்பு நிறம் பற்றி அவர்களுக்கு ஏதேனும் தாழ்வுணர்ச்சி இருக்கிறதா?"

"இல்லை. ஏன் இருக்க வேண்டும்? கறுப்பு கூட ஒரு நிறம்தானே? ஆனால் நான் பார்த்த வரையில் கறுப்பின பெண்களுக்குத் தங்களுக்கு வாய்த்திருக்கும் சுருள் தலை முடியைப் பிடிக்கவில்லை. சுருட்டை முடி அழகென்று நாம் நினைக்கிறோம். ஆனால் அவர்களோ எதிர்மாறாக நினைக்கிறார்கள். ஸ்பெஷல் கிளைபர் உபயோகித்து அந்த முடியை நீட்டிவிடவும். பிரத்யேக கிரீம்களைப் பயன்படுத்தி முடியின் நெளிவுகளை நீக்கி நம்மைப்போல் உச்சியில் கொண்டை போட்டுவிடவும் தனியாக அழகு நிலையங்களே அங்கு இயங்குகின்றன."

தமிழ் முழக்கம்!

பேராசிரியர் கந்தராஜாவுக்கு இலங்கை வானொலியில் பணியாற்றிய அனுபவமும் உண்டு. எனவேதான் ஆஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்தபோது அந்த ஆர்வம் தலை தூக்கியது. இன்று சிட்னியிலிருந்து சனிக்கிழமை தோறும் இரண்டு மணி நேரம் ஒலிபரப்பாகும் தமிழ் முழக்கம் என்ற பண்பலை அலைவரிசையின் பின்னணி மூளையே கந்தராஜாதான். தமிழ் முழக்கத்துக்காக சென்னையில் அவர் கலைஞர், கமல் ஹாசன், வை.கோ உள்ளிட்ட பல பிரமுகர்களைப் பேட்டி கண்டிருக்கிறார். அதேபோல் சிட்னி போகும் தமிழ்ப் பிரமுகர்களை அங்கேயும் பேட்டி எடுத்துள்ளார். இவற்றையெல்லாம் தொகுத்து 'தமிழ் முழங்கும் வேளையிலே' என்ற புத்தகத்தையும் 'கந்தராஜா சமீபத்தில் சென்னையில் வெளியிட்டார்.

கலைஞரைப் பேட்டி கண்டபோது கந்தராஜாவின் ஒரு கேள்வி: "ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழர்களுக்கு என்ன சொல்கிறீர்கள்?"

கலைஞரின் பதில்: "அங்கேயாவது ஒற்றுமையாக இருங்கள்."

சந்திப்பு: **ராணிமைந்தன்**
படம்: **வெங்கடேஷ்**

உங்களுக்குப் பிடித்த இசையமைப்பாளர் யார் என்று கேட்டு முடிப்பதற்குள், இளையராஜா, ஏ.ஆர். ரகுமான், அனுமாலிக் என்று போட்டி போட்டுக் கொண்டு சொல்லும் கல்லூரி மாணவிகளுக்கு இடையே, 'என் இதயம் கவர்ந்தவர் தியாக பிரம்மம்' என்கிறார் இருபத்தியோரு வயது ஸ்ரீவித்யா ஜகதீஷ்.

மங்களூர் கஸ்தூரிபாய் மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். இரண்டாமாண்டு படித்து வரும் இவர், "எனது இருபத்தைந்தாவது வயதில் சிம்பொனி இசை அமைப்பேன்" என்கிறார். சிம்பொனி என்ன கடைச் சரக்கா? சிம்பொனி இசை அமைக்க உங்களுக்கு என்ன தகுதியிருக்கிறது?'' என்றால், பொறுமையாகப் பதில் சொல்கிறார்.

"பியானோவுடன் எனக்கு பதினைந்து ஆண்டு பரிச்சயம். லண்டன் டிரினிட்டி காலேஜ் ஆஃப் மியூசிக் நடத்தும் பியானோ

விரலிசை வித்யா!

இசைக் கலைஞர் தேர்வில் எட்டாம் நிலைத் தேர்வை எழுதியிருக்கிறேன். அதில் தேர்ச்சி பெற்று முழு நேரக் கலைஞராகலாம். அல்லது இசை ஆசிரியராகலாம். சர்வதேச கம்போஸர் ஆவதுதான் என் லட்சியம். எனது சிம்பொனிக்கான இசைக் குறிப்புகளை இப்போதே நான் எழுதத் தொடங்கி விட்டேன்'' என்று அடக்கமாக சொன்னவரை ஆழம் பார்க்க விரும்பினோம்.

பியானோ வாங்குவது, கற்றுக் கொள்வது இவையெல்லாம் நடுத்தரச் சூழலுக்கு கட்டுப்படியாகிற விஷயமா? உங்களுக்குப் பியானோ எப்படி அறிமுகமாயிற்று?

''பியானோ இங்கே தயாரிக்கப்படுவதில்லை. வாங்க விரும்புபவர்கள் இறக்குமதிதான் செய்தாக வேண்டும். அதன் விலையும் உயரத்தில்தான் இருக்கிறது. ஆனால் பியானோ கற்றுக் கொள்வது இங்கே கட்டுப்படியாகிற விஷயம்தான். பியானோ ஆசிரியர்கள் பெருநகரங்களில் கிடைக்கிறார்கள். பல இசைப் பள்ளிகள் பியானோ பயிற்சி தருகின்றன. எனக்குப் பியானோ அறிமுகமானது கூட பள்ளியில்தான். புதுவை க்ளுனி கான்வென்டில் படித்தேன். அங்கே கட்டாய இசை வகுப்பு உண்டு. பெற்றோர்தான் எனக்கு பியானோவைத் தேர்வு செய்தார்கள். ஆறு வயதில் தொடங்கிய ஆர்வம். இப்போது பியானோ ஒரு நிரந்தரத் தோழியாகி விட்டது."



ஹார்மோனியம், கீ போர்டு, பியானோ என்ன வித்தியாசம்?

பியானோவின் உடலில் உலோகக் கம்பிகள் அமைக்கப்பட்டிருக்கும். அந்தக் கம்பிகளின் மீது சிறு சிறு சுத்தியல்கள் அடிக்கும் போது இசை உண்டாகிறது. சுத்தியல்கள் கட்டைகளோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. ஹார்மோனியத்தில் காற்று செலுத்தப்பட்டு, அது துளைகளின் வழியே செல்லும் போது ஒலி வெளியாகிறது. கீ போர்டில் ரெடிமேடாக உருவாக்கப்பட்ட சாம்பிள் டோன்கள் எலக்ட்ரானிக் சிப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன."



பியானோ வாசிக்கும் போது, அதன் கட்டைகளில் கொடுக்கப்படுகிற அழுத்தம்தான் அந்தப் பியானோ கலைஞரின் திறமையைத் தெரிந்து கொள்ளும் அளவுகோல் என்கிறார்களே!

"பியானோவின் கலை நுணுக்கமே இதுதான். இதைத்தான் நாங்கள் 'டச்' என்று சொல்கிறோம். பியானோவில் ஒரு சுரத்தை (Single note) வாசிக்க விரல்கள் போதும். குறிப்பிட்ட சில சுரங்களை (chords) ஒரே நேரத்தில் தொடர்ந்து வாசிக்கத் தொடங்கினால், மணிக்கட்டு தொடங்கி முழுக் கையையும் அசைத்தாக வேண்டும். இந்த 'தொடுதல் கலை'யில் இரண்டு அளவுகோல்கள்தான் அடிப்படை. இசைப் பிரவாகம் உச்ச நிலையில் இருக்க வேண்டும் என்று விரும்பினால் கட்டைகளில் அதிக அழுத்தம் கொடுத்து வாசிக்க வேண்டும். இசையை மென்மையாக வெளிப்படுத்த வாசிப்பிலும் மென்மை அவசியம். ஆழ்ந்த ஈடுபாட்டுடன் வாசிப்பில் கரைந்து விட வேண்டும். அப்போதுதான் நம் உணர்வுகளை இசையில் வெளிப்படுத்த முடியும்."



ட்ரினிடி காலேஜ் ஆஃப் மியூசிக் நடத்தும் பியானோ தேர்வுகள் பற்றி...

"சர்வதேச அளவில் புகழ்பெற்ற பாரம்பரியம் மிக்க இசைக் கல்லூரி இது. இசைஞானி இளையராஜா உள்ளிட்ட பல இந்திய இசை மேதைகள் படித்த இந்தக் கல்லூரி, லண்டனில் உள்ளது. உலகில் நடைமுறையில் உள்ள எல்லா இசைக் கருவிகளையும் இங்கே சொல்லித் தருகிறார்கள். ஆண்டிற்கு ஒருமுறை தேர்வு நடக்கிறது. தமிழகத்தில் சென்னை, ஊட்டி, ஏற்காடு ஆகிய மூன்று தேர்வு மையங்கள் உண்டு. பியானோ தேர்வில் மொத்தம் எட்டு நிலைகள் உள்ளன. தியரி, கேட்டு வாசித்தல், பார்த்து வாசித்தல், பெர்செப்ஷன், இசையை உருவாக்குதல் போன்ற பல கோணங்களில் தேர்வுகள் நடத்தப்படுகிறது. எட்டாவது நிலையே இறுதி நிலை. இந்த நிலையை அடைய பத்து ஆண்டுகள் தேவைப்படும்."

ஒருபுறம் மருத்துவம் படித்துக் கொண்டிருக்கும் நீங்கள் பியானோவில் என்ன சாதிக்கப் போகிறீர்கள்?



"ஆபீசுலயே அந்த ஆளுதான் சரியான ஜால்ராப் பேர் வழி!"

"அப்படியா?"

"மானேஜரோட பாட்டி சீரியஸ்னு நியூஸ் வந்த உடனே விசும்பி விசும்பி அழறதைப் பாரேன்!"

— அம்பை தேவா

"இசையும், மருத்துவமும் வெவ்வேறு என்று நான் நினைக்கவில்லை. இரண்டுமே குணப்படுத்தக்கூடியவை. படிப்பில் சாதிக்கவும் இசைதான் எனக்கு ஊக்கி. இது தவிர எனக்கான பியானோ மொழியை எட்டிப் பிடிக்கும் நிலையில் இருக்கிறேன். பியானோ மேற்கத்திய பாரம்பரிய இசை என்பதால் இந்திய, ஹாலிவுட் அனிமேஷன் படங்களுக்கு, சிம்பொனி குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு இசையமைக்க விரும்புகிறேன். பல படங்களுக்குப் பணியாற்றிய பிறகு எனது சிம்பொனி இசையைக் கம்போஸ் செய்வேன். தவிர கர்நாடக இசையையும் கற்று வருகிறேன்."

சிம்பொனி இசை பற்றிச் சொல்லுங்களேன்?

"மிகப் பெரிய இசைக் குழுவைக் கொண்டு, எல்லா கருவிகளையும் ஒரே நேரத்தில் வாசிக்கச் செய்து, வெவ்வேறு அசைவுகள், இயக்கங்களையும் உள்ளடக்கிய ஒரு மெகா இசை வடிவமாக உருவாக்கப்படுவதே சிம்பெனி. இது மேற்கத்திய பாரம்பரிய இசை வடிவம். ஆயினும் புதிது புதிதாக வடிவமைக்கப்படும் சிம்பொனிகளுக்கு அதன் பாரம்பரியத் தன்மையிலிருந்து விலகி விடாதபடி இசைக் குறிப்புகள் எழுதப்பட வேண்டும். சிம்பொனி இசையை உருவாக்க விரும்பும் ஒரு கலைஞர், எல்லா இசைக் கருவிகளின் தனித்துவம் பற்றிய அறிவும் அவற்றை ஒரே நேரத்தில் நளினமாக ஒருங்கிணைக்கும் ஆற்றலும் பெற்றிருக்க வேண்டும். சிம்பொனி இசை அமைப்பில் ஸ்ட்டிரிங்ஸ், கிதார், வயலின், உட்வைன்ஸ், புல்லாங்குழல், கிளாரிநெட், ஒபே, சாக்ஸஃபோன், டிரம்ஸ், முக்கியமாக பியானோ ஆகிய இசைக் கருவிகள் அதிக எண்ணிக்கையில் இடம்பெறும்."

உலகின் நம்பர் ஒன் பியானோ கலைஞர் யார்?

"பலரைக் குறிப்பிடலாம். ஆனால் ரிச்சர்டு கிளேடர்மென் போன்ற ஒருசிலரே காலம் கடந்து நிற்கிறார்கள். இசையை முறையாகக் கற்றுக் கொள்ளாத யானி இலக்கணத்திற்குக் கட்டுப்படாத புதிய வடிவங்களை சிம்பொனியின் சாயலோடு உருவாக்கியிருக்கிறார். மிகப் பெரிய கலைஞர்கள் எல்லாம் அவர்களின் இசைக் கற்பனைக்காகவும் உருவாக்கத்திற்காகவும் மதிக்கப்படுகிறார்கள்."


பில்ஹார்மோனிக் ஆர்கெஸ்ட்ராவில் சிம்பொனி அமைத்த இளையராஜா பற்றி...

"ஆசியாவில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இசைக் கலைஞர். சினிமா இசை அவருக்கு பிளாட்ஃபார்ம் மட்டுமே. நல்ல இசையமைப்பாளர் கிடைக்கிற வரை சிம்பொனி இசைப்பதை நிறுத்தி வைத்திருக்கும் பில்ஹார்மோனிக் ஆர்கெஸ்ட்ராவை இயக்கியவர். இளையராஜாவின் சிம்பொனி வடிவம், வியாபார உரிமை என்ற பெயரால் இசையோடு தொடர்பில்லாதவர்களிடம் மாட்டிக் கொண்டு, வெளிவராமல் இருப்பது பெருந்துயரம்."

"பெண்களில் பியானோ கலைஞர்கள் சோபிக்காதது ஏன்?"

"முழு நேரக் கலைஞராகப் பரிமளிக்க குடும்பச் சூழல் இடம் தராததுதான் காரணம். இப்போது நிலைமை மாறியிருக்கிறது. திருமணத்திற்குப் பிறகும் பெண்களின் கலைத் திறமைகளை ஊக்கப்படுத்தும் குடும்பச் சூழல் அதிகரித்திருக்கிறது. பியானோவில் பெண்கள் வளரும் கலைஞர்களாக உருவாகி வருகிறார்கள். இந்திய கலாசார இசைகளில் இருந்து பியானோவில் ஒரு புதிய மொழியை உருவாக்குவோம் என்று நம்புகிறேன்."

சந்திப்பு : **ஜெயன்**
படங்கள் : **எண்ணு**



நகர்வலம்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்." ஒரு பக்தி பழம் கணக்கா சக்கரம் இப்படி பொலம்பிகினே வந்து வண்டியிலே ஒக்காந்துச்சு. இன்னாப்பா எதானா கோயிலுக்கு மாலகில போட்டுகினியான்னு கேட்டேன். "அதெல்லாம் இல்லை மகனே. நம் தாய்த் திருநாட்டில் எங்கெங்கு காணினும் வானளாவிய கோயில் கோபுரங்கள் உயர்ந்து நிற்கின்றன."

"அதுக்கு இப்போ இன்னான்றே?"

"ஆனால் அந்தக் கோவில்களில் பூஜை செய்து, விளக்கேற்றி வைக்கும் பணியாளர்களின் வாழ்க்கை இருண்டு கிடப்பதை யார் அறிவார் செல்வம்?"



"இன்னாப்பா சொல்றே?"

"தமிழக வரலாற்றில் பதினைந்து அம்ச கோரிக்கைகளுக்காக முப்பது வருடமாக போராடிக் கொண்டிருக்கும் சபிக்கப்பட்ட சமூகம் நாங்களாகத்தான் இருப்போம் என்று சொல்கிறார்கள்."

"முதல்லே தப்பு தப்பா தமிளு பேசறத வுட்டுப்புட்டு, அவுங்க கோரிக்கை இன்னான்னு சொல்லு?"

"அத தெரிஞ்சுகலாம்னுதான் அவங்க உண்ணாவிரதம் இருக்கிற சேப்பாக்கம் கெஸ்ட் அவுசுக்கு வண்டியவுடச் சொல்றேன்னு சக்கரம் ரூட் சொன்னதும் ராக்கெட் கணக்காக வண்டியை வுட்டேன். அங்கே போனதும்தான் தெரிஞ்சது. 36,324 கோயில்கள்ளே ஜோலி பாக்குற இவங்களுக்கு பென்சன், பி.எஃப் ரெண்டும் கெடயாதாம். அப்பாலே 1998-ல் கவருமெண்டு ஜி.ஓ. நம்பரு 257-ல சொன்னபடி எழுவது சதவிதம் கோயில் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்காம பெரிய பட்டையாப் போட்டுட்டாங்களாம்.

முப்பது வருஷம் ஓடா ஒழைச்சுப் புட்டு, கடேசி காலத்துல பென்சனு இல்லாம கோயில் பிரசாதத்துக்குக் கையேந்தி நிக்க வேண்டியிருக்குன்னு ஒரு ரிட்டையரு ஆகப்போற குருக்கள் மைக்கு புடிச்சி பேசினப்போ கண்ணு கலங்கி பூட்டுது. சக்கரம்தான் நம்மள சமாதானப்படுத்தி இட்டுகினு வந்துச்சி...



எக்மோரு ஸ்டேஷன்லே ஒரு முழு ரயிலையும் ரிசர்வ் செய்துகிட்டு மக்கள் நல்வாழ்வு சபை ஆளுங்க.. கல்கத்தா வரைக்கும் போயி அங்கே மாநாடு போடுறாங்கப்பான்னு சக்கரம் சொன்னதும் எனக்கு விளங்கிப் போச்சு.

அடிக்கடி நடக்குற ரயில் விபத்து பத்தி

"சோளப்பொரிக் கணக்கா புடுச்சே!"



போராட்டம் நடத்துறாங்களான்னு சக்கரத்துகிட்டே கேட்டு வச்சேன்.

"அட போய்யா... கதையவே தலைகீழா மாத்திப்புட்டியே... நேரா வண்டிய வுடு உனக்கே தெரியும்"ன்னு சொன்னதும் எலக்ட்ரிக் ரயிலு வேகம். ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தா அவுரா மெயிலு நிக்குது. தமிழ்நாட்டுலேர்ந்து நூத்தி அம்பது பேரு கல்கத்தா போறோம்ன்னு டாட்டா காட்டுறாங்க. வண்டி கிளம்பறத்துக்குள்ளே மேட்டரைச் சொல்லுப்பான்னதும், ஹெல்த் விஷயத்துல மத்திய அரசு இன்னாமா டபுள்கேமு ஆடுதுன்னு சொன்னாங்க.

அதாவது வேல்டு பேங்குகிட்டே கடன் வாங்கும்போது அது ஒரு கண்டிஷன் போட்டுது. மக்கள் ஆரோக்கியத்துக்குச் செலவு செய்யுறதைப் படிப்படியா குறைச்சுட்டு, அதைத் தனியாருகிட்டே வுட்டுப்புடணும்ன்னு... சரின்னுட்டு கடனை வாங்கிப்புட்டு நம்ம இந்தியா... அப்பாலே இன்னொரு பக்கம், 2000த்துக்குள்ளே அனைவருக்கும் ஆரோக்கிய வாழ்வு அளிப்போம்ன்னு இந்தியா உள்பட எல்லா உலக நாடும் 1978ல் அல்மா அட்டாவுல நடந்த சர்வதேச மாநாட்டுலே கையெழுத்து போட்டு வாக்குறுதி கொடுத்தாங்க. ஆனா நிறைவேத்தல. அதுக்கு பதிலா உலக வங்கிக்குப் பயந்துகிட்டு ஹெல்த்துக்கு பட்ஜெட்டுல ஒதுக்குன தொகையைக் கொஞ்ச கொஞ்சமா குறைச்சு சோளப்பொறி கணக்கா மூனு சதவிதம் ஆக்கிட்டாங்க. ஆனா நம்ப நாட்டுலே ஹெல்த் நிலமை ரொம்ப மோசம் அதுக்காகத்தான் இந்த கல்கத்தா மாநாடு. ஒவ்வொரு ஸ்டேஷன்லேயும் பிரசாரம் பண்ணுரோம்னு மக்கள் நல்வாழ்வு சபை தமிழ்நாடு தலைவரு வசந்தி தேவி சொல்லி முடிக்கிறதுக்கும் ஸ்டேஷன் மாஸ்டரு பிகிலடிக்குறதுக்கும் சரியா பூட்சிப்பா.

"அடுத்தாப்லே நவீன வசதி கொண்ட ஒரு வெளையாட்டு அரங்கத்துக்குப் போயிட்டு வருவோம்; சோழிங்கநல்லூருக்கு வண்டியை வுடு"ன்னு சக்கரம் சொல்லிச்சு. பழைய மகாபலிபுரம் ரோடு வழியா வண்டியை விட்டா... வழி நெடுக புதுசு புதுசா கம்ப்யூட்டரு கம்பெனிங்க... "சாப்பாட்டுக்கு வழியில்லாம கிராமமெல்லாம் இப்போ சாஃப்ட்டுவேரு கம்பெனியா மாறிப் போச்சு"ன்னு சொன்னதும், நாம போறது ஆசியாவிலேயே பெரிய சாஃப்ட்டுவேர் கம்பெனியா இருக்கிற டாட்டா கன்சல்டன்சி சர்விசஸ்க்குத்தான்"னுது சக்கரம். "அதோ பாரு காம்பௌண்டு!

உள்ளே போனதும் ஒரே கூட்டம். எல்லோரும் சாஃப்ட்டுவேர் எஞ்ஜினியருங்க. இந்தியாவுலேயே மொத மொதலா பல லட்சம் செலவுல ஒரு கம்ப்யூட்டரு கம்பெனி தன்னோட ஊழியருங்களுக்கு உள்/வெளி வெளையாட்டு வசதிகளைக் கொடுக்குதுன்னா அது டிசிஎஸ்தான்னு, அதோட சென்னை வைஸ் பிரசிடண்ட் மகாலிங்கம் சொன்னாரு. அப்பாலே டென்னிஸ் கோர்ட், வாலிபால் கோர்ட், ஸ்குவாஷ் கோர்ட் - வெளையாட்டுத் திடல் அதை இதையெல்லாம் தொறந்து வெச்சவரு பிரபல டென்னிஸ் வீரர் ரமேஷ் கிருஷ்ணன். எல்லா வெளையாட்டு வசதிக்கும் கம்ப்யூட்டர் கட்டுப்பாடு; தனி மின்சார யூனிட்டு, பூங்கான்னு ஒரே அமர்க்களம். இது மட்டுமில்லாம வீட்டுமனை, பூங்கா, வெளையாட்டுத் திடல், ஆரம்பக் கல்வி எல்லாம் உள்ள புது நகரை ஊழியர்களுக்கு இந்த டி.சி.எஸ் உருவாக்கிக் கொடுக்கப் போகுதாம். சிவனேன்னு ஆட்டோ ஓட்டுறதை வுட்டுட்டு, கம்ப்யூட்டரு கத்துகினு இது மாதிரி கலக்கலாம்னு தோணுது. ஆனா சக்கரத்தை வுட்டுட்டு போகத்தான் நெஞ்சிலே மஞ்சா இல்லே.

— மீண்டும் சந்திக்கும் வரை
மீட்டருக்கு மேல் கேட்காத
ஆட்டோ செல்வம்.



அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

குவிஸ் போட்டி — 5

என்ன? தேர்தல் அடையாள அட்டையெல்லாம் தயாரா...? அதிலே உங்கள் பெயரைச் சரியாக அச்சடித்திருக்கிறார்களா? இந்த வார குவிஸ்ஸும் பெயர்கள் தொடர்பானது. பதில்களைச் சுலபமாகக் கண்டுபிடித்துவிடுவீர்கள். கூப்பனில் எழுதி பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். இருபத்தாறு வார போட்டியின் முடிவில் எல்லா கூப்பன்களையும் சேர்த்து அனுப்பலாம்.

மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான விடை எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் – இரண்டாவது பரிசு.

மலேஷியா—சிங்கப்பூர் பயணம் – மூன்றாவது பரிசு.

மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதியிருப்பின் குலுக்கல் முறையில் பரிசு முடிவாகும். பயணப் பரிசு பெறாதவர்கள் அமரர் கல்கியின் நூல்களைப் பரிசாகப் பெறலாம்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி!

குவிஸ் கூப்பன் — 5

1) மியான்மர் என்று இப்போது அழைக்கப்படும் ஆசிய நாட்டின் அதற்கு முந்தைய பெயர் என்ன?

2) மகாபாரதத்தில் வரும் பீஷ்மரின் இயற்பெயர் என்ன?

3) யு.எஸ்.ஸின் தற்போதைய தலைநகரம் வாஷிங்டன் டி.ஸி. அதற்கு முன் அந்த நாட்டின் தலைநகரம் என்னவாக இருந்தது?

4) சினிமாவில் நுழைவதற்கு முன் ரஜினி காந்தின் பெயர் என்னவாக இருந்தது?

5) 63 நாயன்மார்களில் ஒருவரான காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் எது?

6) கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?

விடைகள்:

1)..

2)..

3)..

4)..

5)..

6)..

தமிழ் இலக்கியங்களையும், பல்வேறு அகராதிகளையும் வெளியிட்டு மக்கள் எளிதில் வாங்கிப் படிக்கும் வகையில் சிறப்புச் சலுகைத் திட்டங்களுடன் வெளியிடும் வர்த்தமானன் பதிப்பகம் தற்போது, இந்திய மருத்துவ முறைகளில் ஒன்றான சித்த மருத்துவத்தில், நூல்களை வெளியிடுகிறது. (வழக்கம் போல் சலுகை விலையில்!)

இந்திய மருத்துவத்துக்கு ஆதரவு

இந்தியாவில் மட்டுமன்று, உலகம் முழுவதிலும் பல்வேறு நாடுகளிலும் பழைய மருத்துவமுறைகள் புதிய மரியாதையைப் பெற்று வருகின்றன. உதாரணமாக, விஞ்ஞான வளர்ச்சியில் வான் முகட்டையே தொட்டுவிட்ட பணக்கார நாடாகிய அமெரிக்காவில் 47 சதவீத மக்கள் அலோபதி அல்லாத வேறு மருத்துவ முறைகளையே நாடுவதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இந்தியாவிலும் 60 சதவீத மக்கள், பாரம்பரிய மருத்துவ முறைகளையே நாடுவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து தெரியவருவதாக மத்திய சுற்றுச்சூழல் பாதுகாப்புத்துறை அமைச்சர் டி.ஆர். பாலு சென்னைக் கருத்தரங்கு ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். இதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. முதலாவது

ணம், அலோபதி

சித்த மா

நன்றி : 23.10.2000 தினமணி - தலையங்கம்

உலகில் தற்போது ஆரோக்கியமுள்ள மனிதனைக் காண்பதே அரிதாகிவிட்டது. நோய் - மருத்துவர் - மருந்து போன்றவை மனித வாழ்க்கையோடு ஒன்றிய அம்சங்களாய் மாறி வருகின் றன. இவற்றிகெல்லாம், மாறிவரும் உணவுப் பழக்கங்கள், இயந்திரமயமான வாழ்க்கைமுறை, சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு, ஒவ்வாத மேனாட்டுப் பழக்க வழக்கங்கள், இயற்கையோடு இயைந்து வாழா வாழ்க்கைமுறை ஆகியவைகளும் காரணமாகின்றன.

உடலில் தோன்றும் நோய்களுக்காக அளிக்கப்படும் சில ஆங்கில மருந்துகள் கல்லீரல், சிறுநீரகம் போன்ற பல உள் உறுப்புக்களைப் பாதிக்கக்கூடியவை(பக்க விளைவை ஏற்படுத்து பவை) உடலினுள் அன்றாடம் உறுப்புக்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் இயங்கிய வண்ணமிருக்கும். நாம் நோய்க்காக உட்கொள்ளும் மருந்துப் பொருட்கள் இந்த ஒழுங்கினைக் குலைக்கும் . இதனை, நோயின் தீவிரம் தணிந்தபின் நோயாளிக்கு ஏற்படக்கூடிய உடல்சோர்வு, விருப்பமின்மை, பசியின்மை, தூக்கமின்மை போன்றவைகளால் அறியலாம்.

ஆனால் மூலிகைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் உடலின் ஒழுங்குமுறையைப் பாதிப்பதுமில்லை; உள் உறுப்புக்களைச் சேதப்படுத்துவதுமில்லை. எந்த விதமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாமல் உடலின் (செயல்) தன்மையோடு ஒன்றிச் செயல்பட்டு நோயினைத் தணிக்கின்றன.

நோயைத் தணிக்கும் வகையில் பாரம்பரிய மூலிகை மருத்துவம் சிக்கனமானது, எளிதில் கிடைப்பது; எந்தவிதப்பக்க விளைவுகளையும் உண்டாக்காதது; பாதுகாப்பானது. மேலும், நோய் வந்த பின்பு அதை விரட்ட முயல்வதைக் காட்டிலும், வராமல் தடுக்கவல்ல பல மூலிகைகளைக் கொண்டது சித்த மருத்துவம்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இம் மருத்துவ முறையில் சிறப்பான மூன்று நூல்களை வர்த்தமானன் பதிப்பகம் வெளியிடுகின்றது. அவற்றின் விவரம் :

முக்கிய நோய்களும் மூலிகை மருந்துகளும் ரூ.65

முக்கிய நோய்களை வரிசைப்படுத்தி அவற்றிற்கான மூலிகைமருந்துகளை அனைவரும் எளிதாகப் புரிந்து கொள்ளும்படி விவரிக்கும் நூல் இது. இந்நூலின் கடைசிப் பகுதியில் நோய்களுக்கான மூலிகைச் சிகிச்சைகளை எளிதில் அறிந்து

கொள்ள நோயும் சிகிச்சை அட்டவணையும் இணைக்கப்பட்டுள்ளன. இது வாசகர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

மூலிகைகளின் சொர்க்கம் ரூ.90

இந்நூலில் மூலிகைகளை அறிவியல் பார்வையுடன், பல முக்கிய நோய்களுக்கு மருத்துவக் குறிப்புகள் வினா விடை என்ற முறையில் ஆயிரம் கேள்விகளுக்குப் பதில் தரப்பட்டுள்ளன.

இந்நூலில் அமைக்கப்பட்டுள்ள "உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை" பகுதி மூலம் நோய்களுக்கான மூலிகை நிவாரணம் எந்தக் கேள்வி பதிலில் அமைந்துள்ளது என்பதை உடனடியாக அறியலாம். மேலும், இந்நூலில், மூலிகைகளின் பட்டியல் அகர வரிசைப்படுத்தித் தரப்பட்டுள்ளது. இவை மட்டுமன்று, ஒரு நோய்க்குப் பல மூலிகை மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. சில அதிசயமான மூலிகைகள் பற்றிய செய்திகள் இந்நூலின் சிறப்பு.

சித்தர்களும் நோய்தீர்க்கும் சித்தமருத்துவமும் ரூ.65


பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகம் கண்டிராத காயகற்ப முறைகளை வகுத்துக் கொடுத்த சித்தர்கள் தோன்றிய இடம் தமிழகம் என்றும், சித்தர்கள் மாபெரும் விஞ்ஞானிகள் என்று பெருமைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்றும் மனம் திறந்து பாராட்டியுள்ளார், நோபல் பரிசு பெற்றவரும் மேனாட்டு மருத்துவ ஆராய்ச்சியாளருமாகிய டாக்டர் அலெக்ஸிஸ்காரல்.

இச்சித்தர்களின் இலக்கணம், தமிழகத்தில் சித்தர்கள் முக்தி பெற்ற ஸ்தலங்கள், சித்துகள், சித்த மருத்துவத்தின் சிறப்பு, சித்த மருத்துவத்தின் மெய்ஞ்ஞான நோக்கு, விஞ்ஞான நோக்கு, வர்மக் கலையின் சிறப்பு, காந்தத்தின் பயன்பாடு, இரசவாதக்கலை, காய கல்பம் - பண்டைய அரசர்கள் மருத்துவ வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு - இலக்கியத்தில் மூலிகைகள் - மருத்துவமும் ஜோதிடமும் போன்ற பல்வேறு தலைப்புகளில் பல அரிய செய்திகளை உள்ளடக்கியது இந்நூல்.

மூன்று நூல்களின் மொத்த விலை ரூ. 220

சலுகை விலை ரூ. 155 மட்டுமே

கடிதம் எழுதுக. மூன்று நூல்களையும் V.P.P. யில் அனுப்புகிறோம். சலுகை விலை ரூ. 155, தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.25 சேர்த்து **ரூ.180** மட்டும் தபால்காரரிடம் கொடுத்துப் பார்சலைப் பெற்றுக் கொள்க. M.O/D.D. அனுப்ப வேண்டாம். கடிதம் எழுத வேண்டிய முகவரி: **வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர். காம்பளக்ஸ், 141, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 17. (பனகல் பார்க் அருகில்) ✆ 825 7995. இதே முகவரியில் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.** நேரம் : காலை 9.30 முதல் மாலை 6.30 வரை. ஞாயிறு விடுமுறை.



இம்மூன்று நூல்களின் ஆசிரியரான டாக்டர் A.T. அரசு அவர்கள் சித்த மருத்துவ உலகில் தனக்கெனத் தனியிடம் பெற்றவர் • சித்த மருத்துவம்- மூலிகை ஆராய்ச்சி- தமிழ் இலக்கியம்-இதழியல்- வேதியியல்- ஜோதிடவியல்- வர்மம் போன்ற துறைகளில் வித்தகர் • எழுத்தாற்றல் மிக்க இவரது மருத்துவக் கட்டுரைகள் பல பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன • தமிழக அரசின் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குநர் அலுவலகத்தில் சித்த மருத்துவ நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அனுபவம் இவர் திறமைக்கு ஒரு நற்சான்று.

இச்சலுகை 30.12.2000 வரை மட்டுமே!

ராசீ தங்கதுரை

"உன் மகன் அப்படியே சின்ன வயசுல நீ இருந்தது மாதிரியே இருக்கான்ப்பா. அதே துறுதுறுப்பு. எதையும் ஓடித் தேடித் தெரிஞ்சுக்கணுங்கிற அறிவு. எல்லாமே அச்சு அசலா நீதான்."

தொந்தி மாமா வரும்பொழுதெல்லாம் என் மகனைப் பார்த்துச் சொல்லாமல் சென்றதில்லை. அவர் எங்களுக்கு உறவு இல்லை. அவர்கள் குடும்பமும், எங்கள் குடும்பமும் அவ்வளவு அன்னியோன்யம். சிறு வயதிலிருந்தே என் படிப்படியான வளர்ச்சியைப் பார்த்துச் சந்தோஷப் பட்டவர்.

இன்று வந்திருந்தபோதும் அந்த வார்த்தைகளைச் சொல்வதற்குத் தவறவில்லை.

"அந்தக் காலத்துல நீ உங்க அப்பத்தாவைத் தொயங்கட்டிக்கிட்டுத் திரிவ. இவன் உன்னைத் தொயங்கட்டுறான். நல்லா படிக்க வைப்பா. இப்பக் காலத்துல கம்ப்யூட்டர் அது இதுன்னு சொல்றாங்களே அதெல்லாம் படிக்க வை" சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அப்பொழுதிலிருந்து என் மனத்தைச் சுற்றி அப்பத்தாவும், மகனும், தொந்தி மாமா சொன்ன வார்த்தைகளுமே இசை நாற்காலி விளையாட்டைப் போல் சுற்றிச் சுற்றி வந்தன.

என்ன கம்ப்யூட்டர் காலமாயிருந்து என்ன? சின்ன வயதில் வட்ட நிலா வெளிச்சம் பரப்பிய வீட்டு வாசலில் அப்பத்தாவோடு உட்கார்ந்து கதை கேட்டு வளர்ந்த சுகம் வருமா? இப்பப் பிள்ளைகள் டீ.வியே கதி என்று உட்கார்ந்து விடுகிறார்கள். வாழும் தலைமுறை எவ்வளவுதான் அறிவியலில் முன்னேறினாலும் பயனுள்ள ஏதோ ஒரு இனிமையான ஆசுவாசத்தை இழந்து வருவதாகவே உள்மனசு சொல்லியது.

வெளியில் நின்று வானத்தைப் பார்த்தேன். நிலா குளுமை மனசைப் பிசைந்தது. அப்படியே மொட்டை மாடியிலோ வீட்டு முற்றத்திலோ மனைவி குழந்தை அத்தனை பேரையும் அழைத்து வந்து அமர்த்தி, இன்று வித்தியாசமாக அப்பத்தா சொன்ன கதைகளைச் சொல்லிப் பார்க்கலாமா? எனத் தோன்றியது.

பலமுறை இதைப் பற்றி யோசித்திருக்கிறேன். ஆனால் செயல்படுத்த முடியாமல் தயக்கம் வந்து தடுத்திருக்கிறது. டீ.வியை நிறுத்திவிட்டு வாசலுக்கு வாருங்கள் கதை சொல்கிறேன் என்றால் என் மனைவியே என்னைப் பார்த்து நக்கலாகச் சிரிப்பாளோ? என் குழந்தைகள் என்னை வினோதமாகப் பார்த்துச் சிறிய இடைவெளியைத் தொடர

எத்தனை கதைகள்தான் அவள் மனத்தில் இருக்குமோ? அத்தனையும் 'ராசா' கதைகள்தான். கதையில் யார் நல்லவர்களோ அவர்களை 'நானாக' நான் கற்பனை செய்து கொள்வேன்.





வார்களோ? பலவித யோசனைகள். தடுமாற்றங்கள்.

"அப்பா, ஓடி வாங்க... போட்டாச்சு..." என்றபடி என் மகள் கையைப் பிடித்து வீட்டுக்குள் இழுத்தாள், தினமும் வரும் ஒரு டீ.வி தொடரைப் பார்ப்பதற்கு.

"அப்பா இன்னைக்கு அந்தப் பேயை சாமியார் பிடிச்சிருவானா? இல்ல பேய் அவனைக் கொன்னுருமா?" பயத்தில் என் கைகளுக்குள் அவள் கைகளை நுழைத்து மிக நெருங்கி அமர்ந்தாள்.

என் மகளைப் பார்த்தேன். "ஐயோ பேய் வரப் போகுது" என்ற பய மேலீட்டில் அம்மாவைக் கட்டிக் கொண்டிருந்தாள். மனைவியின் முகத்திலும் பேய்ப்பயம் பூசியிருக்கிறதோ? எனக்கு வெறுப்பாயிருந்தது. மனசுக்குள் ஓடிய இசை நாற்காலியில் அப்பத்தா ஜெயித்து அமர்ந்தாள்.

கிராமத்தில் இரவு உணவுக்குப் பின் வாசலில் கூடுவோம். அப்பத்தாவை நெருங்கியிருப்பேன். அப்பொழுது ஆரம்பிப்பாள். வழக்கம்போல், "ஒரு ஊர்ல ஒரு ராசா இருந்தாரு..." என்று.

எத்தனை கதைகள்தான் அவள் மனத்தில் இருக்குமோ? அத்தனையும் 'ராசா' கதைகள்தான். கதையில் யார் நல்லவர்களோ அவர்களை 'நானாக' நான் கற்பனை செய்து கொள்வேன். ராஜா நல்லவர் என்றால் நான் ராஜா. ராஜா மகன் குதிரையில் சென்றால், நான் ராஜா மகனாக எண்ணிக் கொள்வேன். ஒரே கதையில் இப்படி பலபேரை நானாக எண்ணிக் கொள்வதும் உண்டு.

பின்னாளில் வகுப்பில் ஆசிரியர்கள் வரலாற்றுப் பாடம் நடத்தும் போதும், அசோகரும், ஔரங்கசீப்பும் எனக்கு அப்பத்தா

அப்பத்தாவும் அரசக் கதைகளும்



"நாம ஓடிப் போகப் போறோம்ங்கிற விஷயம் எங்க வீட்டுக்குத் தெரிஞ்சு போச்சுன்னு தோணுது டார்லிங்!"

"எப்படிச் சொல்றேடா?"

"கழுத்துல நான் போட்டிருந்த நாலு பவுன் செயினைக் கழட்டி வாங்கிக்கிட்டாங்களே!"

— சீர்காழி வி. ரேவதி

உருவகித்த ராஜாக்களைப் போலவே மனத்தில் எழுந்து நின்றார்கள்.

அந்த நாட்களில் என்னுடன் படிக்கும் மாணவர்களிடையே நான் பெரிய ஹீரோ போல் இருந்தேன். அப்பத்தா சொன்ன கதைகளைச் சொல்லிச் சொல்லியே எனக்கென ஒரு கூட்டத்தை உருவாக்கியிருந்தேன். பள்ளி செல்லும்போதும் பள்ளி விட்டு வரும்போதும் பலர் காத்துக்கிடந்து கதை கேட்டனர்.

அப்பத்தா சொல்லும் ஒவ்வொரு கதையிலும் நல்லவர்கள் வருவார்கள். நல்லவர்கள் வாழ்வார்கள். வாழ்க்கையின் கடினமான முடிச்சுகளை எல்லாம் அவிழ்ப்பதற்கான அனுபவ முத்திரையைத் தருவதாக இருந்தன. இறுதியில் வழங்கப்படும் நீதி வாழ்க்கையின் தத்துவமாய் இருந்தது.

விலங்குகள் பேசும். கதைகளுக்குள் கதைகள் சொல்லும். மனிதனுக்கு உற்ற தோழனாய் வரும். அரசர்களையும் காப்பாற்றும். நீதியும் வழங்கும். அப்பத்தா நரிக் கதையெல்லாம் சொன்னாளென்றால் அவ்வளவு இனிமையாக இருக்கும். அந்த நரியாக நாம் இருந்தால் எப்படி இருக்கும் என்ற கனவுலகிற்கே செல்ல நேரிடும்.

அப்பத்தா இப்படிக் கதை சொல்லும் நேரங்கள் எங்களுக்குள் பாசத்தை வளர்த்தது. குடும்பமாக அமர்ந்து சிரித்துப் பேசும் அந்தத் தருணங்கள் ஒருவர் மேல் ஒருவருக்குப் பிரியத்தைக் கூட்டியது. நெருக்கத்தை அதிகரித்தது. பெரியவர்களைப் பொக்கிஷமாக நினைக்கும் மனப்பான்மை வளர்ந்தது. அவர்களின் வார்த்தைகள் எங்களின் கால்களுக்கு வெளிச்சமாய் இருந்தது. விட்டுக் கொடுத்தலின் அவசியத்தைப் புரிய வைத்தது.

இன்றும் என் மகனுக்கு அப்பத்தா உண்டு, தாத்தா உண்டு. ஆனால் படிப்பிற்கு 'டவுன்' தேவை என நானும், எங்களின் முதுமைக்குக் கிராமமே வடிகால் என அவர்களும் நினைத்துவிட்டதில் எனக்கும் அவர்களுக்குமே இடைவெளி. இதற்கிடையில் எப்பொழுதாவது தாத்தா பாட்டி இங்கு வரும்போதும், திருவிழாவிற்கு நாங்கள் கிராமத்திற்குச் செல்லும் போதும் கிடைக்கும் நேரங்கள் அப்பத்தாவின் அருமையை என் பிள்ளைகளுக்குப் புரிய வைக்கப் போதுமானதாக இல்லை.

"அப்பா, வீட்டுக்குள்ளேயே பேய் வந்திருச்சுப்பா. என்னப்பா ஆகும்?" என்னை ஒரு ஆட்டு ஆட்டிக் கேட்டான், மகன். டீவியைப் பார்த்தேன். இடைவேளைக்குப் பிறகு எனப் போட்டு விளம்பரங்கள் வந்து கொண்டிருந்தன.

'முழுமையான சுகத்திற்கு...' என ஆரம்பிக்கும் 'காண்டம்' பற்றிய விளம்பரத்திற்காக, அரை குறை ஆடையுடன் ஆணும், பெண்ணும் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

எழுந்து வெளியில் வந்தேன். நிலா இடம் மாறி நின்றிருந்தது. ஏற்கெனவே நிலா நின்றிருந்த இடம் எது? என்ற அடையாளத்தை வைத்துக் கொள்ளாமல் அண்டவெளி வியாபித்திருந்தது.

தூரத்தில் சிறு கூட்ட மேகம் நிலவைப் பார்த்து வாய் பிளப்பதாய்ப் பட்டது. நிலவை உற்றுப் பார்த்தேன். இனி அப்பத்தாக்களையும், அவர்களின் கதைகளையும் நிலவில் கொண்டு போய்ப் புதைத்ததைப் போல் அங்கு ஒரு அப்பத்தா காட்சிப் பொருளாக்கப்பட்டிருப்பதாய் உணர்ந்தேன்.

உள்ளேயிருந்து என் பிள்ளைகளின் கூச்சல் கேட்டது. பேய் ஒன்று வருவதற்கான அறிகுறி இசை என் காதை நாராசமாய் வந்து அடைத்தது.

"அப்பா... ஓடி வாங்கப்பா... எனக்குப் பயமாயிருக்கு.... ஓடி வாங்கப்பா...." என்றவன், என் கையைப் பிடித்து இழுத்துப் போனான். மீண்டும் கேட்டான், "இனி எப்பப்பா அந்தப் பேய் வீட்டை விட்டுப் போகும்...?"

அவனுக்குச் சொல்ல என்னிடம் பதில் இல்லை. ஆனால் நல்ல நல்ல கதைகள் இருக்கத்தான் செய்கின்றன. எனினும் 'இந்த இடத்தில் உட்கார். உனக்கு நான் கதை சொல்கிறேன்' எனச் சொல்வதற்கு என்னால் இயலவில்லை.

அவன் இழுத்த இழுவைக்கு விருப்பமில்லாமலேயே நகர்ந்த நான், மெல்லத் திரும்பி நிலவைப் பார்த்தேன். அதை அந்த மேகம் மூடிக் கொண்டிருந்தது. அப்பத்தாவையும் சேர்த்து!

ஆறு தலைமுறையாக வக்கீல் பணியில்...



ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆறு தலைமுறைகளாகத் தொடர்ந்து வக்கிலாக இருந்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் திருச்சியிலேயே பணிபுரிந்தும் வந்திருக்கிறார்கள்.

முதல் தலைமுறை ப்ளீடர் ஆக இருந்தவர் சிங்க ஐயங்கார். இரண்டாவது தலைமுறை அவரது மகன் ஸ்ரீனிவாச ஐயங்கார். மூன்றாவது தலைமுறை எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார். இந்த மூன்று தலைமுறையினரும் இப்போது உயிருடன் இல்லை.

நான்காவது தலைமுறை கே. ராஜகோபாலாச்சாரி 1924ல் தம் தந்தை எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரிடம் பயிற்சி பெற்று திருச்சி கோர்ட்டில் ப்ளீடராக பணி புரிந்து வந்துள்ளார். ஏறத்தாழ எழுபத்தைந்து ஆண்டுகள் வக்கீல் பணியில் தொடர்ந்து இருந்துள்ள 'பஞ்சக் கிடங்கு வக்கீல்' என பொது மக்களால் அடைமொழி கொடுத்து அழைக்கப்பட்ட கே. ராஜகோபாலாச்சாரிக்கு இப்பொழுது வயது நூறு. அவரது மகன் ஐந்தாவது தலைமுறையான ஆர். கண்ணன் ஆறாவது தலைமுறையினரான கே. கோவிந்தன் மற்றும் கே. ஸ்ரீராம் ஆகியோரும் திருச்சியில் வக்கீல்களே!



அதிலும் குறிப்பாக, 1986 முதல் 1994 வரையிலான எட்டு ஆண்டுகள் தாத்தா கே. ராஜகோபாலாச்சாரி, மகன் ஆர். கண்ணன், பேரன் கே. கோவிந்தன் ஆகிய மூன்று தலைமுறையினரும் இணைந்து ஒருசேர திருச்சி கோர்ட்டுகளில் வக்கீல்களாகச் செயல்பட்டுள்ளார்கள்.

சுதந்தரம் அடைவதற்கு முன்னர் கிராமப் பகுதிகளிலிருந்து வழக்கு நடத்துவதற்கென்று வருபவர் கட்டுச் சாதம் கட்டிக் கொண்டு வக்கீல் ராஜகோபாலாச்சாரி வீட்டுக்கு வந்து தங்குவார்களாம். இப்பொழுது அலுவலக அறையாக இருக்குமிடம் அப்போது பெரிய திண்ணையாக இருந்துள்ளது. இரவு படுத்திருந்துவிட்டு மறுநாள் காலையில் எழுந்து அவர்களது ஊருக்குச் சென்று விடுவார்களாம். செல்லும்போது அவர்களில் யாருக்கேனும் போக்குவரத்துச் செலவுக்குப் பணம் தேவைப்பட்டால் மனம் கோணாமல் கொடுத்து அனுப்புவாராம் ராஜகோபாலாச்சாரி.

அவரது சர்வீஸில் ஒரு முஸ்லீம் தாய் தமக்கு ஜீவனாம்சம் கேட்டுத் தன் மகன் மீது தொடர்ந்த வழக்கு திருச்சி கோர்ட்டில் தோற்றுப் போய் விடுகிறது. உடல் நலிவுற்று வறுமையில் உழன்ற அந்த இஸ்லாமியப் பெண்ணுக்காக தம் சொந்த செலவில் சென்னை ஹைகோர்ட்டில் வழக்கைக் கொண்டு சென்று அங்கு வாதாடி அவருக்கு மகனிடமிருந்து ஜீவனாம்சம் பெற்றுத் தந்ததைக் குறிப்பிட்டுச் சொல்கிறார் ராஜகோபாலாச்சாரியின் மகன் ஆர். கண்ணன்.

சென்னை ஹைகோர்ட் தலைமை நீதிபதி என்.கே. ஜெயின், நீதிபதி சம்பத் மற்றும் நீதித்துறையைச் சார்ந்த பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ள, சமீபத்தில் கே. ராஜகோபாலாச்சாரிக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு ஜகாத்(தர்மம்) சேலைகள் குறைந்த விலையில் கிடைக்கும். சூட்டிங், சர்டிங், கட்பீஸ் மற்றும் எண்ணற்ற புதியரக ரெடிமேட் ஆடைகளின் சங்கமம்

காஞ்சிபுர முகூர்த்தப் பட்டுப் புடவைகள் மலிவான விலையில் வாங்க சிறந்த ஒரே இடம்.



ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ்

27, ரங்கநாதன் தெரு
(மாம்பலம் ரெயில் நிலையம் அருகில்)
தி.நகர். சென்னை – 600 017.
போன்: 4339971 / 4334660

ஞாயிறும் விற்பனை உண்டு



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED
#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org



நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

மீண்டும் கொள்ளிடக் கரை!

கொள்ளிடத்தின் வட கரையிலுள்ள திருநாரையூர் என்னும் கிராமத்தில் நம்பியாண்டார் நம்பி என்னும் சைவப் பெரியாரின் மடாலயம் இருந்தது. அதன் வாசலில் அரண்மனைப் பல்லக்கு ஒன்றும் பல்லக்குத் தூக்கிகளும் காவல் வீரர்களும் நின்றனர். இவர்களைத் தவிர கிராமவாசிகள் சிறிது தூரத்தில் கூட்டம் கூடி நின்றார்கள். அந்தக் கூட்டத்துக்கு மத்தியில் இரண்டு பேருக்குள் ஏதோ கடுமையான விவாதம் நடந்தது போலவும், அதை அக்கூட்டத்தார் உற்சாகத்துடன் கவனித்துக்கொண்டு வந்ததாகவும் தோன்றியது.

ஜனக்கூட்டத்தைச் சற்று விலக்கிக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தோமானால், நமக்கு முன்னே பழக்கமான இருவர்தான் அங்கே நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிய வரும். அவர்களில் ஒருவன் திருமலை என்ற ஆழ்வார்க்கடியான் நம்பி. மற்றொருவர், நம் கதையில் ஆரம்பத்திலேயே அவனுடன் படகில் விவாதம் தொடுத்த வீர சைவர்; நம்பியாண்டார் நம்பியின் சைவ மடாலயத்தில் பிரதான காரியக்காரர்.

நம்பி ஆண்டாரைப் பார்ப்பதற்காக வந்திருந்த பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி அந்த மகானுடனே ஏதோ தனிமையில் பேச விரும்புகிறார் என்பதை அறிந்துகொண்டதும் மேற்கூறிய

அமரர் கல்கி

வீர சைவப் பெரியார் வெளியேறி வந்தார். ஆழ்வார்க்கடியானைப் பார்த்ததும் அவருக்கு இயற்கையாகவே ஆத்திரம் பொங்கி வந்தது. முன்னொரு தடவை அந்த வீர வைஷ்ணவ சிகாமணியிடம் விவாதத்தில் தோல்வியடைந்து விட்டோம் என்கிற எண்ணம் அந்த ஆத்திரத்தை மூட்டியது.

"அடே! நாமத்தைப் போட்டு ஊரை ஏமாற்றும் வேஷதாரி வைஷ்ணவனே! இங்கே எங்கு வந்தாய்? எங்கேயாவது பொங்கல் - புளியோதரை கிடைக்குமிடம் பார்த்துக்கொண்டு போவதுதானே?" என்றார்.

"பொங்கல் - புளியோதரை வேண்டிய மட்டும் சாப்பிட்டு விட்டுத்தான் வருகிறேன். இங்கேயுள்ள சைவ மடத்தில் நீங்கள் எல்லாரும் சாம்பலைத் தின்று உடம்பு வீங்கிப் போய்க்கிடக்கிறீர்கள் என்று அறிந்து வந்தேன். பாவம்! நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் சிவபெருமான் சாப்பிட அன்னம் கிடைக்காத காரணத்தினாலேதான் விஷத்தை உண்டார்? அப்போது மட்டும் எங்கள் நாராயண மூர்த்தியின் சகோதரி பார்வதி கழுத்தைப் பிடிக்காமலிருந்தால் உங்கள் சிவனுடைய கதி யாதாகியிருக்கும்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அடே வீர வைஷ்ணவனே! நிறுத்து உன் கதையை! உயர உயரப் பறக்காதே! உங்கள் பெருமாள் உயர உயரப் பறந்தும் எங்கள் சிவபெருமானுடைய முடியைக் காண முடியாமல் திரும்பி வந்தாரில்லையா?"

"அது என்ன ஐயா கதை? எங்கள் மகாவிஷ்ணு வாமனாவதாரம் எடுத்து வந்து பூமியை ஒரு அடியினாலும் வானத்தை இன்னொரு அடியினாலும் அளந்தபோது, உங்கள் சிவனுடைய முடி அந்த அடிக்குக் கீழேதானே இருந்திருக்க வேண்டும்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"உங்கள் மகாவிஷ்ணு பத்துத் தடவை பூலோகத்தில் பிறந்ததிலிருந்து அவருடைய வண்டவாளம் வெளியாகவில்லையா? அதிலும், எப்படிப்பட்ட பிறவிகள்? மீனாகவும், ஆமையாகவும் பிறந்தாரே?" என்றார் வீர சைவர்.

"உமக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! பகவான் மீனாகப் பிறந்தது எதற்காக? கடலில் மூழ்கிப் போன நாலு வேதங்களையும் திருப்பிக் கொண்டு வருவதற்கல்லவோ? ஆகையினாலேதான் எங்கள் ஆழ்வாரும்,

'ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்
தேனார் பூஞ்சோலை திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் தவமுறையேனா வேனே!'

என்று பாடியிருக்கிறார்.

"அப்பனே! உங்கள் ஆழ்வார்கள் பன்னிரண்டு பேர்தான்! எங்கள் நாயன்மார்கள் அறுபத்து மூன்று பேர்! அதை ஞாபகம் வைத்துக்கொள்!"

"ஓகோ! இப்படி வேறே ஒரு பெருமையா? பஞ்ச பாண்டவர்கள் ஐந்து பேர்தான்; துரியோதனாதியர் நூறு பேர் என்று பெருமையடித்துக் கொள்வீர் போலிருக்கிறதே!"

"அதிகப்பிரசங்கி! எங்கள் நாயன்மார்களைத் துரியோதனன் கூட்டத்தோடு ஒப்பிடுகிறாயா? உங்கள் ஆழ்வார்களிலேதான் பேயாழ்வார், பூதத்தாழ்வார் எல்லாரும் உண்டு."

"உங்கள் சிவபெருமானுடைய கணங்களே பூதகணங்கள்தானே? அதை மறந்து விட்டீராங்காணும்...?"

இப்படி வீர வைஷ்ணவரும் வீர சைவரும் வாதப் போர் நடத்திக்கொண்டிருந்தபோது இரு தரப்பிலும் சிரத்தையுள்ளவர்கள் இடையிடையே ஆரவாரித்து உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில் மடாலயத்துக்குள்ளிருந்து சிவஞான கண்டராதித்தரின் திருத் தேவியான செம்பியன் மாதேவியும் அவரை வழி அனுப்புவதற்காக நம்பியாண்டார் நம்பியும் வெளியே வருவதைக் கண்டு, அக் கூட்டத்தில் நிச்சப்தம் நிலவியது.

மழவரையன் மகளார் நம்பியாண்



டாரிடம் விடைபெற்றுக் கொண்டு வந்து ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "திருமலை! இங்கேகூட உன் சண்டையை ஆரம்பித்து விட்டாயா?" என்றார்.

"இல்லை, தேவி! நாங்கள் மற்போர் நடத்தவில்லை; சொற்போர்தான் நடத்தினோம். இந்த வீர சைவ சிகாமணிதான் முதலிலே போரை ஆரம்பித்தார்! எங்கள் சொற்போர் இங்கே கூடியிருப்பவர்களுக்கெல்லாம் மிக்க உற்சாகத்தை அளித்தது. அதனாலேதான் மடாலயத்துக்குள்ளே பிரவேசியாமலிருந்தார்கள்" என்றான் திருமலை.

"அப்பனே! தெய்வங்களுக்குள்ளே உயர்வு, தாழ்வு சொல்லி வேடிக்கையாகக் கூட விவாதம் செய்யக் கூடாது. அதனால், சாதாரண ஜனங்களின் உள்ளம் குழப்பத்துக்கு உள்ளாகும்! என் மாமனாராகிய பராந்தக தேவர் தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொற் கூரை வேய்ந்தார். அம்மாதிரியே வீர நாராயணபுரத்திலுள்ள அனந்தீசுவரர் கோயிலுக்கும் திருப்பணி செய்து மான்யம் அளித்தார். அவர் காட்டிய வழியிலேயே நாம் அனைவரும் நடக்க வேண்டும்!" என்று கூறினார் செம்பியன்மாதேவி.

பின்னர், தேவியார் சிவிகையில் ஏறிக் கொள்ளவும், சிவிகை மேற்கு நோக்கிச் சென்றது. காவற்காரர்கள் முன்னும் பின்னும் தொடர்ந்தனர். ஆழ்வார்க்கடியான் செம்பியன்மாதேவியின் சிவிகைக்குச் சமீபமாக நடந்து சென்றான்.

சிறிது தூரம் சிவிகை போன பிறகு ஆழ்வார்க்கடியான் பெரிய பிராட்டியைப் பார்த்து, "தேவி! நம்பியாண்டாரை நம்பி வந்த காரியம் என்ன ஆயிற்று?" என்று கேட்டான். "என் மனம் கலக்கம் நீங்கித் தெளிவு அடைந்துவிட்டது, திருமலை! மதுராந்தகன் சிங்காதனம் ஏறுவதை வேறு வழியில் தடுக்க முடியாவிட்டால், உலகம் அறிய உண்மையைச் சொல்லி விடுவதே முறை என்று நம்பியாண்டார் சொல்லிவிட்டார். நானும் அதை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு உறுதி அடைந்து விட்டேன்!" என்றார் செம்பியன்மாதேவி.

"நம்பியாண்டார் அவ்விதம் கூறுவார் என்றுதான் முதன்மந்திரியும் எதிர்பார்த்தார். ஆயினும் தாங்கள் இந்தப் பிரயாணம் வந்தது மிக நல்லதாய்ப் போயிற்று.

தாயே! தாங்கள் இந்த விஷயமாக உடனே முடிவு செய்வதற்கு இன்னும் அதிகமான அவசியம் நேர்ந்திருக்கிறது. கடம்பூரிலிருந்து மிகப் பயங்கரமான செய்தி வந்திருக்கிறது. அது இன்னும் இந்த ஊரில் உள்ளவர்களுக்குத் தெரியாது. தெரிந்தால் இங்கு ஒருவரும் இருந்திருக்க மாட்டார்கள். எல்லாரும் இளவரசரின் இறுதி ஊர்வலத்தைப் பார்ப்பதற்குப் போயிருப்பார்கள்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''திருமலை! இது என்ன சொல்லுகிறாய்? என்ன பயங்கரமான வார்த்தை! எந்த இளவரசர்? என்ன இறுதி ஊர்வலம்!'' என்று தேவி கேட்டார்.

''மன்னிக்க வேண்டும், தாயே! சோழ குலத்தில் இதுவரை இம்மாதிரி துர்ச்சம்பவம் நடந்ததில்லை. கடம்பூர் அரண்மனையில் ஆதித்த கரிகாலர் காலமானார். துர்மரணம் என்று சொல்லுகிறார்கள். யாரால் நேர்ந்தது, எப்படி நேர்ந்தது என்று மட்டும் தெரியவில்லை. பலர் பலவாறு சொல்லுகிறார்கள். ஆதித்த கரிகாலர் அகால மரணமடைந்த பிறகு கடம்பூர் அரண்மனை முழுவதும் தீப்பட்டு எரிந்துவிட்டதாம். இளவரசரின் சடலத்தைத் தஞ்சைக்கு ஊர்வலமாக எடுத்து வருகிறார்களாம். திருக்கோவலூர் மலையமான் கடம்பூர் சம்புவரையரையும் அவருடைய குடும்பத்தையும் சிறைப்படுத்தி அழைத்து வருகிறாராம். ஊர்வலத்தில் ஒரு லட்சம் ஜனங்களுக்கு மேல் முன்னும் பின்னும் வருகிறார்களாம்! அவர்கள் கொள்ளிடக் கரைக்கு வருவதற்குள் நாம் அந்த நதியைக் கடந்து விட வேண்டும்!''

''திருமலை! நீ சொல்லுவது உண்மையிலேயே பயங்கரமான செய்திதான்! வானத்தில் தூமகேது தோன்றியதன் காரணமாக ஜனங்கள் எதிர்பார்த்த விபரீதம் நேர்ந்துவிட்டது! ஆகா! அந்த அஸகாய சூரனின் கதி இப்படியா முடிய வேண்டும்? ஐயோ! சுந்தர சோழருக்கு இது தெரியும்போது என்ன பாடுபடுவார்? நோய்ப்பட்டிருக்கும் சக்கரவர்த்திக்கும் இந்தச் செய்தியினால் ஏதாவது நேராமலிருக்க வேண்டுமே என்று எனக்குக் கவலையாயிருக்கிறது. கருணைக் கடலான சிவபெருமான்தான் சோழ குலத்தைக் காப்பாற்ற வேண்டும்!'' என்றார் மழவரையர் மகளார்.

''தாயே! சோழ குலத்துக்கு நேர்ந்திருக்கும் ஆபத்து ஒருபுறமிருக்கட்டும். இந்தத் துர் நிகழ்ச்சியினால் சோழ சாம்ராஜ்யமே சின்னாபின்னமாகிவிடலாம் என்று எனக்குப் பயம் உண்டாகிறது.''

''அது ஏன் அந்த எண்ணம் உனக்கு உண்டாயிற்று, திருமலை?''

''சோழ நாட்டுத் தலைவர்கள் - சிற்றரசர்களுக்குள்ளே பெரும் சண்டை மூளலாம். இவ்வாறு சோழ நாட்டில் உள் சண்டையினால் இரத்த வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கும்போது வெளிநாட்டுப் பகைவர்கள் தைரியம் கொண்டு படையெடுக்கத் தொடங்கி விடுவார்கள்! அதன் விளைவுகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமா, தாயே!''

''திருமலை! சிற்றரசர்கள் - தலைவர்களுக்குள்ளே ஏன் சண்டை மூளும் என்று சொல்லுகிறாய்?''

''தங்களுக்குத் தெரிந்த காரணந்தான். தாயே! சிலர் தங்கள் திருக்குமாரரான மதுராந்தகர் அடுத்தபடி பட்டத்துக்கு வர வேண்டும் என்பார்கள். மற்றும் சிலர் அருள்மொழிவர்மர்தான் சிம்மாசனம் ஏற வேண்டும் என்பார்கள். ஏற்கெனவே, கொடும்பாளூர் வேளாரின் படைகள் தஞ்சைக் கோட்டையைச் சுற்றி முற்றுகை இட்டிருக்கின்றன. இளவரசரின் சடலத்துடன் மலையமான் தஞ்சையை நோக்கிப் போகிறார். பழுவேட்டரையரைச் சேர்ந்த சிற்றரசர்கள் சைன்யம் திரட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், தஞ்சையிலும் தஞ்சையைச் சுற்றிலும் சோழ நாட்டு வீரர்கள் ஒருவரையொருவர் கொன்று கொண்டு இரத்த வெள்ளம் பெருக்கப் போகிறார்கள். காவேரி முதலிய ஐந்து ஆறுகளிலும் தண்ணீர் வெள்ளத்துக்குப் பதிலாக இரத்த வெள்ளம் ஓடப் போகிறது! மகா அறிவாளியான முதன் மந்திரி அநிருத்தரே கலக்கம் அடைந்திருக்கிறார். விஜயாலயரும் ஆதித்தரும் பராந்தகரும் தங்கள் திருக்

கணவரான கண்டராதித்தரும் நிலை நாட்டி அரசு புரிந்த சோழப் பேரரசு நம் நாளில் அழிந்து போய் விடலாம் என்றே பயப்படுகிறார். இதைத் தடுப்பதற்கு அநிருத்தருக்கே வழி ஒன்றும் தோன்றவில்லை!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''திருமலை! இறைவன் அருளால் இந்த மாபெரும் சாம்ராஜ்யத்துக்கு அத்தகைய விபத்து நேராமல் நான் தடுப்பேன். அதற்கு வழியை நான் அறிவேன். அந்த வழியைக் கடைப்பிடிக்கலாமா என்று என் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு போகத்தான் நம்பியாண்டாரிடம் வந்தேன். மதுராந்தகனுக்கும் அருள்மொழிவர்மனுக்கும் சிங்காதனப் போட்டி ஏற்பட்டால் தானே உள்நாட்டுச் சண்டை மூளும் என்று சொல்கிறாய்?''

''ஆம், தாயே! அத்தகைய சண்டை மூளாமல் எப்படித் தடுக்க முடியும்? ஆதித்த கரிகாலர் பிராயத்தில் சிறிது மூத்தவர் என்ற காரணமாவது இது வரையில் சொல்லக் கூடியதாயிருந்தது! இப்போது அவரும் போய்விட்டார். தங்கள் திருப்புதல்வரைக் காட்டிலும் அருள்மொழிவர்மர் இளையவர். ஆனால் மலையமானும் வேளாரும் சோழ நாட்டு மக்களும் இனி அருள்மொழி வர்மருக்கே பட்டம் என்று வற்புறுத்தப் போகிறார்கள். பழுவேட்டரையர்கள் அதை ஒத்துக் கொள்ளப் போவதில்லை...''

''திருமலை! யார் ஒத்துக் கொண்டாலும் சரி, ஒத்துக் கொள்ளாவிட்டாலும் சரி, மதுராந்தகன் சிங்காதனம் ஏற மாட்டான். அதை நான் பார்த்துக்



கொள்வேன். மகா புருஷராகிய என்னுடைய பதியின் விருப்பத்தை நான் நிறைவேற்றுவேன். மதுராந்தகனுக்குப் பட்டம் இல்லையென்று முடிவானால், உள்நாட்டுச் சண்டையும் இல்லைதானே?''

''ஆம், அன்னையே! சோழ சாம்ராஜ்யம் சர்வநாசம் அடையாமல் இச்சமயம் தாங்கள் காப்பாற்றினால்தான் உண்டு; வேறு வழியே கிடையாது!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''என்னால் ஆவது ஒன்றுமில்லை; மாதொரு பாகனாகிய மகேசுவரன் எனக்கு அத்தகைய சக்தியை அருள வேண்டும்'' என்றார் பெரிய பிராட்டியார்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாகச் சென்றார்கள். கொள்ளிடத்தின் ஓடத்துறை சற்றுத் தூரத்தில் தெரிந்தது.

''திருமலை! சற்று முன் ஒரு பயங்கரமான செய்தியைக் கூறினாய். ஆதித்த கரிகாலன் உயிர் இழந்தான் என்றாய். மூன்று உலகையும் ஆள வேண்டிய அந்த வீராதி வீரன் இறந்ததே விபரீதமான செய்திதான். இளவரசன் துர் மரணம் அடைந்ததாகக் கூறினாயே? அது எப்படி? தன் உயிரைத் தானே போக்கிக் கொண்டானா? அல்லது யாராவது அவனைக் கொன்றுவிட்டதாகச் சொல்கிறார்களா?'' என்று பெரிய பிராட்டி வினவினார்.

''தேவி! அதைப் பற்றிப் பலவிதப் பேச்சுகள் பரவி வருகின்றன. சம்புவரையர் வீட்டில் இது நடந்தபடியால் அவர் மீது சந்தேகப்பட்டு அவரையும் அவர் குடும்பத்தார் அத்தனை பேரையும் மலையமான் சிறைப்படுத்திக் கொண்டு வருகிறார். சம்புவரையர் மகன் கந்தமாறன் மட்டும் தப்பிச் சென்று விட்டானாம்...''

''சம்புவரையரால் இது நேர்ந்திருக்கும் என்று உண்மையில் எனக்கு நம்பிக்கைப் படவில்லை. எவ்வளவுதான் விரோதமிருந்தாலும், அவருடைய இல்லத்துக்கு விருந்தாளியாக வந்திருந்த சக்கரவர்த்தித் திருமகனைக் கொல்லுவதற்கு யாருக்குத்தான் மனம் வரும்? சம்புவரையர் அப்படிச் செய்திருக்க முடியாது. அவர் இதைப் பற்றி என்ன சொல்லுகிறாராம்? இளவரசர் கரிகாலரின் மரணம் எப்படி நேர்ந்திருக்கும் என்று சொல்லுகிறாராம்?''

''தேவி! பழையாறைக்கு முன்னொரு சமயம் வாணர் குலத்து வீர வாலிபன் ஒருவன் வந்திருந்தானே, நினைவிருக்கிறதா? அவனைக் குந்தவை பிராட்டியார் ஈழ நாட்டுக்குக் கூட ஓலையுடன் அனுப்பி வைக்கவில்லையா?''

''ஆம், ஆம்; ஞாபகம் இருக்கிறது. அவனைப் பற்றி என்ன?''

''இளவரசரின் உயிரற்ற சடலத்துக்கு அருகில் அந்த வாலிபன்தான் இருந்தானாம். ஆகையால் அவனேதான் கொன்றிருக்க வேண்டும் என்று சம்புவரையர் சொல்கிறாராம்...''

''திருமலை! அப்படி ஒரு நாளும் நேர்ந்திராது. அந்தப் பிள்ளையைப் பார்த்த ஞாபகம் எனக்கு இருக்கிறது...''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன், தாயே! ஆனால் சந்தர்ப்பங்களும் சாட்சியங்களும் வந்தியத்தேவனுக்கு எதிராயிருக்கின்றன!''

''ஐயோ! பாவம்! இளையபிராட்டி அந்த வாலிபனிடம் ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தாள். இந்தச் செய்தி தெரிந்தால் அவள் துடிதுடித்துப் போவாள்!''


''தாயே! தங்களிடம் அதைப் பற்றிக் கேட்டுக்கொள்ளலாம் என்று நினைத்தேன். தாங்கள் குடந்தைக்குச் சென்றதும் இளையபிராட்டியைச் சந்தித்துத் தஞ்சைக்கு அழைத்துக்கொண்டு போவது நல்லது...''

''அதுதான் என் உத்தேசம். இளைய பிராட்டி, எனக்காக அங்கே காத்துக் கொண்டிருக்கிறாள்...''

''மற்றவர்கள் மூலம் பராபரியாக இளையபிராட்டிக்குச் செய்தி தெரிவதற்கு முன்னால் தாங்களே சொல்லிவிடுவதுதான் நல்லது...''

''அப்படியானால் இப்போது நீ என்னுடன் வரப் போவதில்லையா, திருமலை?''

''தேவி! தாங்கள் அநுமதி கொடுத்தால் கொள்ளிடத்தின் தென்கரையில் தங்



களிடம் விடை பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்...''

"எங்கே போகப் போகிறாய்?''

"இளவரசர் கரிகாலரின் மரணத்தில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது. அதைக் கண்டு பிடித்து 'வருவதற்காகப் போக விரும்புகிறேன்.''

"எப்படிக் கண்டுபிடிப்பாய்?''

"தேவி! பாண்டிய நாட்டுச் சதிகாரர் களைப் பற்றித் தங்களுக்கு முன்னமே ஒரு முறை சொல்லியிருக்கிறேன். அச்சதி காரர்களில் ஒருவனைக் கொள்ளிடத்தின் தென்கரையில் நாம் வரும்போது பார்த் தேன்...'' என்றான் திருமலை.

"உடனே நீ ஏன் அவனைப் பின் தொடர்ந்து செல்லவில்லை?''

"கொள்ளிடத்தின் வடகரைக்கு வந்த பிறகுதான் கரிகாலர் மரணத்தைப் பற்றிச் செய்தி தெரிந்தது. அரசி! எனக்கு விடை கொடுங்கள்! சதிகாரர்கள் சாதாரண மாகக் கூடிப் பேசுகிற இடம் எனக்குத் தெரியும்...''

"சரி, போய் வா! இளையபிராட்டி குந்தவையிடம் என்ன சொல்லட்டும்? அவளை நினைத்தால் எனக்குப் பெருங் கவலையாயிருக்கிறது.''

"வந்தியத்தேவன் மீது குற்றம் சாட்டப் பட்டால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். உண் மைக் குற்றவாளியை நான் எப்படியும் கண்டுபிடித்துக் கொண்டு வருவேன் என்று சொல்லுங்கள்!''

"இறைவன் அருளினால் நீ போகும் காரியம் வெற்றி அடையட்டும்!'' என்றார் சிவபக்தியில் சிறந்த பெண்மணியான செம்பியன் மாதேவி.

இதற்குள் கொள்ளிடக் கரை வந்து விட்டது. பெரிய பிராட்டி செம்பியன் மாதேவியும் பரிவாரங்களும் ஏறிச் செல் வதற்காகப் படகுகள் காத்திருந்தன.

ஆழ்வார்க்கடியான் வேறொரு சிறிய படகு பிடித்துக்கொண்டு அவர்களுக்கு முன்னால் விரைந்து படகைச் செலுத்தச் சொல்லி, அங்கிருந்து சென்றான்.

நாற்பத்து நான்காம் அத்தியாயம்

மலைக் குகையில்!

கொள்ளிடத்தின் தென் கரையை அடைந் ததும் ஆழ்வார்க் கடியான் மேற் திசையை நோக்கிப் போனான். கொள்ளிடத்தின் உடைப் பினால் எங்கும் வெள்ளக் காடாக இருந் ததைப் பார்த்தான். ஆயினும் கொள் ளிடத்தில் தண்ணீர் மட்டம் குறைந்து வந்ததைப் போல் உடைப்பினால் தண் ணீர் பரவியிருந்த இடங்களிலும் வேக மாகத் தண்ணீர் வடிந்துகொண்டு வந்தது. கடைசியாகத் திருப்புறம்பயத்தை அடைந்தான். அந்த ஊர் மட்டும் அவ் வளவு வெள்ளத்தினாலும் பாதிக்கப் படாமல் இருந்ததைப் பார்த்து வியந் தான். ஆதி காலத்தில் உலகமே பிரள யத்தில் ஆழ்ந்தபோது திருப்புறம்பயம் மட்டும் தண்ணீரில் முழுகாமலிருந்தது என்னும் வரலாறு இதனாலேதான் ஏற் பட்டது போலும் என்று எண்ணிக் கொண்டு பள்ளிப்படைக் காட்டை நெருங்கினான். அங்கே புயலினால் பல மரங்கள் சாய்ந்து விழுந்திருந்த போதிலும் அவன் ஒளிந்து பார்ப்பதற்கு வேண்டிய அடர்த்தியில்லாமற் போக வில்லை. அவ்விதம் பார்த்தபோது, பள்ளிப்படைக்கோவில் வாசலில் ஆண் கள் மூவரும் ஒரு ஸ்திரீயும் நின்று பேசு வது தெரிந்தது. நன்றாய் உற்றுப் பார்த்த போது, எல்லாரும் அவனுக்கு முன் னாலே தெரிந்தவர்கள் என்று அறிந்தான். அதே பள்ளிப்படைக் காட்டில் முதன் முதலில் சதியாலோசனைக்காகக் கூடிய

வர்களில் இந்த மூன்று ஆண் பிள்ளைகளும் இருந்தார்கள். ஒருவன் சோமன் சாம்பவன், இன்னொருவன் கிரமவித்தன், மூன்றாவது ஆள் இடும்பன்காரி, ஸ்திரீ, படகோட்டி முருகய்யனுடைய மனைவி. அவர்களில் இடும்பன்காரி மற்றவர்களுக்கு ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான்.' அச் செய்தி அவர்களுக்கு உற்சாகத்தை அளித்ததாகத் தெரிந்தது. "சரி! அப்படியானால் நாமும்



பச்சை மலை அடிவாரத்துக்கு உடனே புறப்படலாம். போய்ச் சேர இரண்டு நாட்கள் பிடிக்கும்'' என்று சோமன் சாம்பவன் கூறியது ஆழ்வார்க்கடியான் காதில் விழுந்தது.

இவர்களுக்கு முன்னால் தான் அங்கிருந்து புறப்பட்டு விடலாம் என்று எண்ணி ஆழ்வார்க்கடியான் திரும்பினான். அவனுடைய மார்புக்கு நேரே சிறிய கத்தியைக் கண்டு திடுக்கிட்டான். அதைப் பிடித்திருந்த கை பூங்குழலியின் கை என்று தெரிந்ததும் திகைப்பு நீங்கியது. இருவரும் ஒருவரையொருவர் தெரிந்து கொண்டதும் புன்னகையினால் தங்களின் வியப்பைத் தெரிவித்துக்கொண்டார்கள். சமிக்ஞையின் மூலமாக வாய் பேசாமல் சிறிது நேரம் காத்திருக்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்திக்கொண்டார்கள்.

சதிகாரர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள் என்று தெரிந்த பிறகு ஆழ்வார்க்கடியான். "பூங்குழலி! தஞ்சாவூரிலிருந்து நீ எப்படி இங்கே வந்தாய்? எதற்காக வந்தாய்?'' என்று கேட்டான்.

"பழி வாங்குவதற்காக வந்தேன்'' என்றாள் பூங்குழலி.

"என்ன பழி? எதற்காக?''

"இவர்களிலே ஒருவன் என் அத்தையைக் கொன்றுவிட்டு ஓடி வந்த பாதகன். அப் பாதகனை விடாமல் பின் தொடர்ந்து இவ்விடத்தில் வந்து பிடித்தேன். இங்கே இன்னும் மூன்று பேர் அவனுக்கு முன்னால் வந்திருந்தார்கள். அதிலும் என் அண்ணன் மனைவியை அவர்களுடன் பார்த்ததும் திகைத்துப் போனேன்! அதற்குள் நீ ஒருவன் வந்து குறுக்கிட்டாய்! இப்போது என்ன செய்யலாம்? நீ எனக்கு உதவி செய்வதாயிருந்தால் இவர்களை விடாமல் தொடர்ந்து போய் என் அத்தையைக் கொன்றவனைக் கொன்று விட்டு வருவேன்!'' என்றாள்.

"ஐயோ! பாவம்! உன் அத்தை என்றால், அந்த ஊமை ராணி மந்தாகினி தானே? அவளை எதற்காக இவர்களில் ஒருவன் கொன்றான்?'' என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"அத்தையைக் கொல்ல வேண்டும் என்று நினைத்துக்கொல்லவில்லை. சக்கரவர்த்தியைக் கொல்ல நினைத்து அவர் மேல் எறிந்த வேலை என் அத்தை தாங்கிக்கொண்டாள்!'' என்றாள்.

"ஓகோ! அப்படியா? ஊமை ராணி தன் உயிரைக் கொடுத்துச் சக்கரவர்த்தியைக் காப்பாற்றினாளா? இதெல்லாம் எப்படி நடந்தது? சற்று விவரமாகச் சொல், கேட்கலாம்!''

"விவரமாகச் சொல்லுவதற்கு இது தானா சமயம்? அவர்கள் தப்பித்துக் கொண்டுபோய் விடுவார்களே?''

"பூங்குழலி! அவர்கள் போகுமிடம் எனக்குத் தெரியும். எதற்காக யாரைச் சந்திப்பதற்காகப் போகிறார்கள் என்றும் ஊகித்துக்கொண்டேன், வழியிலே அவர்களைத் தடை செய்யாமலிருப்பதே நல்லது. அவர்கள் போகுமிடத்துக்கு நாமும் போகலாம். அங்கே நான் தெரிந்து கொள்ள விரும்புவதைத் தெரிந்து கொண்ட பிறகு நீ உன் பழியை முடித்துக் கொள்ளலாம்'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அப்படியானால் புறப்படு! போகும் போதே தஞ்சாவூரில் நடந்ததையெல்லாம் உனக்கு விவரமாகச் சொல்கிறேன்!'' என்றாள் பூங்குழலி.

இருவரும் கொள்ளிடத்தைப் படகின் மூலமாகக் கடந்து அக்கரை அடைந்தார்கள். வடமேற்குத் திசையை நோக்கிப் பிரயாணம் செய்தார்கள். மூன்று தினங்கள் இரவும் பகலும் பிரயாணம் செய்த பின்னர், பச்சை மலையின் அடிவாரத்தை அடைந்தார்கள். அந்த அடிவாரத்தில் அடர்ந்த காடு மண்டிக் கிடந்தபடியால் இவர்கள் தேடிச் சென்றவர்கள் எங்கே இருக்கக்கூடும் என்பதை இலேசில் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வளவு பிரயாசையுடன் பிரயாணம் செய்து வந்தது வீணாகி விடுமோ என்று மனச்சோர்வு அடைந்தார்கள்.

திடீர் என்று ஆந்தையின் குரல் ஒன்று கேட்டது. பதிலுக்கு மற்றொரு குரல் அதேமாதிரி கேட்டது. ஆழ்வார்க்கடியானுடைய முகம் மலர்ந்தது. பூங்குழலிக்குச் சமிக்ஞை மூலமாகப் பேசாமல் தன்னுடன் வரும்படி தெரிவித்தான். ஆந்தை

களின் குரல் கேட்ட இடத்தில் இடை வெளி தென்பட்டது. அங்கே ஏழெட்டுப் பேர் இருந்தார்கள். சிலர் நெருப்பு மூட்டிச் சமையல் செய்துகொண்டிருந்தார்கள். முன்னமே அங்கு இருந்தவர்களும் புதிதாக வந்து சேர்ந்தவர்களும் ஒருவருக்கொருவர் ஏதோ வியப்பான செய்தி சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்று தெரிந்தது.

முன்னமே அங்கிருந்தவர்களில் ரவிதாஸனும் ஒருவன். அவன் அப்போது புதிதாக அங்கே வந்து சேர்ந்தவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த மலைக் குகையொன்றைச் சுட்டிக்காட்டி ஏதோ தெரிவித்துக்கொண்டிருந்தான். மெல்லிய குரலில், "பூங்குழலி! நான் தேடி வந்தவர்கள் அந்த குகைக்குள்ளேதான் இருக்க வேண்டும். நான் மெள்ளக் குகைக்குள்ளே நுழைந்து பார்க்கிறேன். இவர்களில் யாராவது குகையை நெருங்கி வந்தால் நீ ஒரு குரல் கொடு!" என்றான்.

"ஆந்தை கத்துவதுபோல் என்னால் கத்த முடியாது. குயில் கூவுவதுபோலக் கூவுகிறேன்!" என்றாள் பூங்குழலி.

மலைக்குகைக்குள்ளே காற்றும் வெளிச்சமும் நுழைவதற்காகச் சில பெரிய துவாரங்கள் செய்யப்பட்டிருந்தன. ஆகையால் உள்ளே நன்றாக வெளிச்சம் வந்துகொண்டிருந்தது.

அந்த வெளிச்சத்தில் ஆழ்வார்க்கடியான் ஓர் அபூர்வமான காட்சியைக் கண்டான். பெரிய பழுவேட்டரையர் காளாமுகச் சாமியார்களைப் போல் புலித்தோல் உடை தரித்திருந்தார். அவர் பக்கத்தில் மண்டை ஓட்டு மாலை ஒன்று கிடந்தது. அவர் உடம்பிலிருந்து இரத்தம் மிகச் சேதமாகியிருக்க வேண்டும் என்று அவர் முகம் வெளுத்துப் போயிருந்ததிலிருந்து ஊகிக்கும்படியிருந்தது. தரையிலே படுத்திருந்தவர் அப்போதுதான் சுய நினைவு பெற்று எழுந்து உட்கார முயன்றதாகத் தோன்றியது. ஏதோ பயங்கரமான சொப்பன உலகிலிருந்து அப்போதுதான் விழித்தெழுந்தவர்போல் காணப்பட்டார். அவருடைய கண்கள் திருதிருவென்று விழித்தன.

அவர் பக்கத்தில் நந்தினி இருந்தாள். அவள் ஆபரண அலங்காரங்கள் கலையப் பெற்றுத் தலைவிரி கோலமாக இருந்தாள். ஆயினும் அவளுடைய வசீகர சௌந்தரியம் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பிரகாசித்தது. அன்பும் ஆதரவும் பரிதாபமும் பச்சாத்தாபமும் ததும்பிய குரலில், "ஐயா! இந்தக் கஞ்சியை அருந்துங்கள்!" என்று கூறிக்கொண்டே ஒரு மண் பாத்திரத்தை அவரிடம் நீட்டிக் கொண்டிருந்தாள்.

பழுவேட்டரையர் அவளைத் திரும்பிப் பார்த்தார். அவர் முகத்தில் ஒருகண நேரம் எல்லையற்ற இன்பத்துக்கு அறிகுறியான புன்னகை மலர்ந்தது.

"நந்தினி! என் பேரரசி! நீதானா இப்போது பேசினாய்? உன் குரல்தானா இது? நாம் இப்போது எங்கே இருக்கிறோம்? மரணத்தின் வாசலுக்குச் சென்றிருந்த என்னை நீயா திரும்பக்கொண்டு வந்து சேர்த்தாய்? அன்று சாவித்திரி சத்தியவானுக்குச் செய்ததை இன்று நீ எனக்குச் செய்தாயா? எனக்கு நினைவு வந்த போது உன்னுடைய மலர்க் கையினால் என்னுடைய மார்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியதே! அது உண்மையா? மூன்று ஆண்டு காலமாக என்னைத் தொடவும் மறுத்தவள் கடைசியாக மனமிரங்கி விட்டாயா? எங்கே? கொடு! கஞ்சியைக் கொடு! உன் கையினால் கஞ்சி கொடுத்தால் அதுவே எனக்குத் தேவாமிர்தமாகும்!" என்றார்.

இவ்விதம் சொல்லிக்கொண்டே நந்தினியின் கையிலிருந்த மண்பாண்டத்தை வாங்கிக்கொண்டவர் திடீரென்று அவளை வெறித்துப் பார்க்கத் தொடங்கினார்! அடியோடு மாறிப் போன பயங்கரமான குரலில், "அடி பாதகி! ராட்சஸி! நீதானா? என்னைத் தொடுவதற்கு உனக்குத் தைரியம் வந்ததா? என் நெஞ்சில் கத்தியால் குத்தப் பார்த்தாயா? அப்போது நான் விழித்துக்கொண்டேனா? இந்தப் பாத்திரத்தில் இருப்பது உண்மையில் கஞ்சிதானா? அல்லது என்னைக் கொல்லுவதற்கான நஞ்சா? உன் கையால் கொடுப்பது தேவாமிர்தமானாலும் எனக்கு அது விஷமல்லவோ?" என்று கூறிவிட்டு அம்மண் பாண்டத்தை வீசி எறிந்தார். அது தடாலென்று குகைச் சுவரில் மோதிச் சுக்கு நூறாகிச் சிதறி விழுந்தது.

(தொடரும்)

கல்கி — ரமணி Vs ரமணி இணைந்து வழங்கும் 'தம்பதி தமாஷ்' தீபாவளிப் பரிசுப் போட்டியில் இரண்டாம் பரிசாக ரூ. 7000 மதிப்புள்ள வாஷிங்மெஷின் பெறும் அனுபவக் கட்டுரை:

கதை நேரம்

எஸ். மாலதி

இது ஒரு 'நான்-ஸ்டாப்' காமெடி எக்ஸ்பீரியன்ஸ்!

அந்த சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்வதாகக் கூறிய என் பிடிவாதத்தைக் கணவரால் தளர்த்த முடியவில்லை! 'ஆல் தி பெஸ்ட்' சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொள்ளப் பார்த்தவரை வம்புக்கிழுத்தேன்.

"நாலு குயர் பேப்பர் வாங்கிட்டு வாங்க."

"ஏதேது புகளூர் காகித ஆலைக்கே ஒரு நடை போயிட்டு வரச் சொல்வே போலிருக்கு."

"சொல்றதை செய்ங்க."

"ஒன்சைடுதான் எழுதணும் தெரியும்ல?"

"கதை எழுதறதுன்னு வந்துட்டா அதுல ஒன் சைடு என் சைடுன்னெலாம் பாக்க முடியுமா...?"

"அட மண்டு. நான் சொல்றது அதில்ல. தாளின் ஒரு பக்கத்துல எழுதணும்ங்கற அடிப்படை விதிய..."

"இது என்னோட கன்னி முயற்சிங்க. ஒரு எழுத்தாளினிய உருவாக்க உங்களால ஆனதைச் செய்யுங்க."

"கன்னி முயற்சியா? யப்பங்கப்பா. நமக்கு நண்டும் சிண்டுமா மூணு புள்ளைங்க. அதுங்களுக்கு நீ ஒரே அம்மா. அத மறந்துட்டீங்களே கன்னி அம்மா?"

"மறக்க முடியுமா? அவங்களதான் உங்க அருமைத் தங்கை வீட்டுல கொண்டு போய் சம்மர் லீவுக்கு டெலிவரி பண்ணிட்டு வந்தேனே. ஆனாலும் உங்க தங்கை ரொம்ப மோசம்ங்க."

"இந்த மாலதியின் 'கதை நேர'த்துல அவளை ஏன் சீனுக்குள்ள கொண்டு வர்றே?"

"அட... லீவுக்கு வந்துருக்கோமேன்னு உங்க தங்கைகிட்டே பக்கத்துல சுத்தி பாக்குற மாதிரி எதுவும் இடங்கள் இருக்கான்னு கேட்டேன். அதுக்கு ராட்சஸி என்ன சொன்னா தெரியுமா?"

"சொன்னாத்தானே தெரியும்?"

"நவக்கிரக கோயில் ஒண்ணு இருக்கு. போயி புள்ளைங்களோட சுத்திட்டு வாங்க அண்ணி. கை மேல் பலன் கெடைக்கும்ங்கறா."

"நீங்க ரெண்டு பேரும் எப்பவுமே எலியும் பூனையுமா தான பழகுவீங்க. அதனால இதுல ஆச்சரியம் ஒண்ணும் இல்ல."

"நீங்க பூனைன்னு சொன்னதும்தான் நினைவுக்கு வருது. நான் சொந்தப் பெயர்ல எழுதறதை விட 'பூனை பெயர்'ல எழுதலாம்னுருக்கேன். என்ன பெயர் வெச்சுக்கட்டும்?"

"பூனை பெயரா... அப்ப 'மியாவ்'னு வெச்சிக்கோயேன்."


"விளையாடாதீங்க. நா சொல்றது பு-னை-பெயர்!"

"பொய், புனை சுருட்டுனா தெரியும். புனை பெயர்ங்கறியே... மாலா... காஞ்சனா... உம் பேரு ப்ளஸ் நம்ம பொண்ணு பேரு... நல்லா மிக்ஸ் பண்ணிப் பாரு..."

"காஞ்சனமாலா... ஓ.கே. கம் டு த நெக்ஸ்ட் பாய்ண்ட். ரெண்டு நாளைக்கு நீங்க சார்ஜ் எடுத்துக்கணும். கெட் ரெடி."

"ஹி... ஹி... பீரோ சாவிய என்ட தரப் போறியா? கொடும்மா கண்ணு!"

"க்கும். கதை எழுதி முடிக்கிற வரைக்கும்



நான் கரண்டி பிடிக்க மாட்டேன். அத நான் கியாரண்டியா சொல்றேன்...''

''ஐயோ!''

''இந்தக் கணவர் குலமே இப்படித்தான் ஒரு இலக்கியவாதி உருவாக ஒத்துழைக்கவே மாட்டாங்க!'' – ஒட்டுமொத்த ஆண் குலத்தையே சபித்தேன்!

''ஆகட்டும் அம்மணி.''

– வேறு வழியின்றி அவர் சம்மதித்தார்.

''பை த பை. எனக்கு எழுதறதுக்குனு மயான அமைதி நிலவற இடம் வேணுமே.''

''அப்ப நீ சுடுகாட்டுக்குத்தான் போகணும்!''

''ஷட் அப்! நான் கதை விடப் போற... ச்சே, எழுதப் போற இந்த ரூம் கதவைத் தட்டி யாரும் டிஸ்டர்ப் பண்ண நெனைக்காதீங்க. அப்படி எதுவும் செஞ்சீங்க அதுவே பேராபத்தில் முடியும்!''

''ஒண்ணு பண்ணலாம். பேசாம கதவை எடுத்துட்டு சுவர் வச்சு நிரந்தரமாப் பூசிரலாமா?''

''ஸாரி டியர். உயிரோட எனக்குச் சமாதி எழுப்பிடலாம்னு பகல் கனவு காணாதீங்க.''

''ஓ.கே. நீ இருக்கிற தெசைல தலை வச்சுக் கூட படுக்க மாட்டோம். ப்ராமிஸ்.''

ப்ளாஸ்க்குகளில் டீ நிரப்பிக் கொடுப்பதும் சமையல் பண்ணி வீடு பெருக்கிக் குடும்ப நிர்வாகத்தைத் திறம்படச் செய்வது அவருக்குப் பழகிவிட்டது.

ஒருவழியாக அந்த வாரம் கதை தயார் பண்ணி அனுப்பி வைத்து விட்டேன்!

அன்று காலை பத்து மணி.

''உங்களுக்கு ஒரு ரிஜிஸ்தர் தபால் வந்திருக்கு'' தபால்காரர் சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

அரையடி உயரத்துக்குத் துள்ளிக் குதித்தேன் நான். அவரும் அப்போது வீட்டில் தானிருந்தார்.

''பாத்தீங்களா நா ஜெயிச்சுட்டேன்!''

''மேடம்... தபால் சாருக்கு'' என்றதும் எனக்கு ஒன்றும் புரியவில்லை. சாருக்கா?

அவர் கையெழுத்துப் போட்டு கவரை வாங்கிப் பிரித்துப் படிக்க... சிறுகதைப் போட்டியில் கணவருக்கு முதல் பரிசு!

''அப்படி பாக்காத மாலா. நீ கதை எழுதத் தயாரான அனுபவத்தை நான் ரொம்பவே ரசிச்சேன். கதை க்ளிக் ஆயிடுச்சு. அனுப்பிச்சேன்'' என்றவர் தொடர்ந்தார். ''இது என் தனிப்பட்ட வெற்றி இல்லை. நீ பாதி, நான் பாதி!'' என்று புன்னகைக்க நான் அவரது கைகளைக் குலுக்கி, 'கங்கிராட்ஸ்' சொன்னேன்.

நடக்குமென்பார்,

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்களோட மதிப்பும் மரியாதையும் விலைவாசி லெவலுக்கு உயரப் போகுது. எதிர்ல வர்றவங்களெல்லாம் சலாம் போடுவாங்க. அதுக்காக ரொம்ப குனிர்ந்து போயிடாதீங்க. பண விஷயத்துல பஞ்சமில்லை. எப்பவும் நிரம்பி இருக்கும். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரப் போகுது. புனிதமான காரியங்கள்ல கலந்துக்கற சந்தர்ப்பம் வரும். இவ்வளவு நாளும் டபாய்ச்சிட்டு இருந்த விஷயங்கள் இப்ப பட்டுனு நிறைவேறிடும். அதுக்காக பர்ஸ் கொஞ்சம் எகிறும். உஷார்.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசிரிஷம் 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் உங்களுக்கு 'எடக்குமடக்'கான சம்பவங்கள் நடக்கும். நேரம் அப்படி இருக்கு. பெரியவங்க சொல்றதைக் கேட்கறது நல்லது. புதுசா வர்றவங்ககிட்ட எச்சரிக்கையா பழகுங்க. அனாவசியமா யார்ட்டயும் வாய் வுடாதீங்க. வெளியூர் பயணம் போனா எச்சரிக்கையா இருங்க. பிக்பாக்கெட் பார்ட்டிகள் உங்களை நெருங்குற நேரம் இது. புதிய முயற்சிகள் எதிலயும் இப்ப இறங்க வேண்டாம். அவசரத்தை விட்டுட்டு நிதானத்தைக் கடைபிடிச்சா கைமேல் பலன் உண்டு.

மிதுனம் : *(மிருகசிரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

இந்த வாரம் வர்ற எதிர்ப்புகளைப் பார்த்து மனசு ஒடிஞ்சு போயிடாதீங்க. கொஞ்சம் கவனமா இருந்தா அதை ஈஸியா சமாளிச்சிடலாம். கவர்ன்மென்ட்ல வேலை பார்க்கறவங்களுக்குப் பதவி உயர்வு, டிரான்ஸ்பர் கிடைக்க வாய்ப்பிருக்கு. அலைச்சல் கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கு. பயனுள்ள அலைச்சல்தான். வெளியூர் பயணத்தைத் தள்ளிப் போடறது நல்லது. உங்களுக்கு ரொம்ப பிடிச்சவங்களைப் பிரியப் போறீங்க. மனசைத் தேத்திக்குங்க. கணவன் மனைவிக்குள்ள சின்னச் சின்ன சண்டை வர வாய்ப்பிருக்கு. வாயை அடக்கினா பெரிய பிரச்னையிலிருந்து தப்பிக்கலாம்.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

இந்த வாரம் கிரக சஞ்சாரம் உங்களை உச்சிக்குத் தூக்கிக்கிட்டுப் போகுது. எந்த காரியத்தையும் சிரமமில்லாம முடிச்சிடுவீங்க. இதுவரை டென்ஷன் ஆக்கிக்கிட்டிருந்த பிரச்னைகள் இப்ப புஸ்வாணமாயிடும். மனசுல சின்ன சின்னக் குழப்பம் வந்துட்டே இருக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இந்த வாரம் முன்னேற்றம்தான். பெண்கள்கிட்ட பழகும்போது கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க. பிரச்னைகள் வரலாம்.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

என்னைக்கும் இல்லாத அதிசயமா உங்க முகம் பளிச்னு இருக்கும். அடிக்கடி கண்ணாடி பார்ப்பீங்க. ரொம்ப நாளா எதிர்பார்த்திட்டிருந்த நல்ல செய்தி ஒண்ணு இப்ப வந்து உங்களைத் திக்குமுக்காட வைக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புதிய பொறுப்புகள் வந்து ஆச்சரியப்பட வைக்கும். எதிர்பார்த்து இருங்க. பண நடமாட்டத்துக்குப் பஞ்சமிருக்காது. வெளிநாட்டுல இருந்து உங்களை மகிழ்ச்சியாக்குகிற தகவல் வரப் போகுது. புதியவங்ககிட்ட பழகும்போது மட்டும் எச்சரிக்கையா இருங்க.

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

சத்ய சாய்பாபாவோட அருள் உங்களை எங்கயோ கொண்டு போகப் போவுது. உங்களோட பேச்சுத் திறமை செயல்பாடுகள் எல்லாம் பளிச்சிடும். திறமைக்கும் உழைப்புக்கும் எதிர்பார்த்த பலன் கிடைக்கப் போகுது. மாணவர்கள் அரட்டையை விட்டுட்டு படிப்புல கவனம் வைக்கணும். பார்ட்டி, விருந்துன்னு சுத்தறதுக்கு வாய்ப்பிருக்கு. சுத்தற ஜோர்ல பர்ஸையும் கொஞ்சம் பார்த்துக்குங்க. செலவு பிச்சி புடுங்கும். வண்டி ஓட்டும்போது கவனமா ஓட்டுங்க.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

எல்லாரும் பாராட்டும்படியான காரியங்களைச் செய்யப் போறீங்க. அந்த மகிழ்ச்சியில வீட்டு நலன்ல கவனம் இல்லாம விட்டுடாதீங்க. வீண் சண்டை சச்சரவு நடந்

ததுன்னா தலையைக் குனிஞ்சுகிட்டு தூரப் போறது நல்லது. எல்லார்ட்டயும் அமைதியா பழகுங்க. டென்ஷன் ஆகாதீங்க. அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கு சான்ஸ் இருக்கு. திடீர்னு ஆன்மிகம் பக்கம் மனசு அதிகமா இழுக்கும். கோயில், குளம்னு சுத்தப் போறீங்க. பண விஷயத்துல எச்சரிக்கையா இருக்கறது நல்லது.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

இதுவரை ஒதுங்கியிருந்த பெரிய மனுஷங்க இப்ப உங்களுக்கு உதவ வருவாங்க. அதனால எந்தக் காரியத்தையும் சிரமமில்லாம முடிப்பீங்க. இராணுவம், சட்டம், காவல் துறை கள்ல வேலை பார்க்கறவங்களுக்கு உற்சாக மான சூழ்நிலை ஏற்படும். கணவன் மனை விக்குள்ள இதுவரை இருந்த சண்டை சச்சரவு இப்ப காணாம போயி ராசி ஆயிடுவீங்க. மேலதிகாரிங்க பாராட்டு


நடக்கும்!

உங்களை மகிழ்ச்சி சமுத்திரத் துல கொண்டு போய் விடும். வீட்ல விஷேச காரியம் நடக்க சந்தர்ப்பம் வரப் போகுது. எதிர்பார்த்துக் காத்திருங்க.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

ஆஞ்சநேயருடைய அருள் பார்வை உங்களை நோக்கி இருக் கறதால கவலைகளுக்கு குட்பை சொல்லிடுங்க. இதுவரை லேட்டாகிட்டு இருந்த காரியங்கள் லாம் இப்ப சீக்கிரம் முடிஞ்சிடும். முக்கியமான திட்டம் இப்போ நிறைவேறுகிற நேரம். போட் டிகள்ல ஜெயிக்கிற வாய்ப்பிருக்கு. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமா தீர்ப்பு வரப் போகுது. நண்பர்களால சின்ன சின்னப் பிரச்னைகள் வரலாம். கவனமா சமாளிங்க.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்களோட திறமையை எல் லோரும் பாராட்டப் போறாங்க. அதுக்காக தலை கால் புரியாம அலையாதீங்க. அரசியல் வாதிகளோட புகழ் ஜில்லுனு ஏறப் போகுது. பாராட்டுக் கூட்டங்கள் நடக்கலாம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கெல்லாம் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். புகழ், பாராட்டுக்குப் பஞ்சம் இருக்காது. வெளி நாட்டுல இருந்து நல்ல செய்தி வரப் போகுது. எதிர்ப்புகள் இருக்காது.




கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

திருச்செந்தூர் முருகன் அருள் இருக்கறதால உங்களோட புத்திசாலித்தனம்,

விருச்சிக ராசிக்காரரான கமலி ஸ்ரீபாலுக்கு இந்த வாரம் வீட்ல விசேஷமாம்!



ஆற்றல் எல்லாம் வெளிப்படும். அரசு பணிகள்ல இருக்கிறவங்களுக்குப் பதவி உயர்வு டிரான்ஸ்பர் கிடைக்க வாய்ப் பிருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவங் களுக்குப் புகழ், பாராட்டு கூடும். வெளி நாட்டுல இருந்து நல்ல தகவல் வரும். சட் டம், காவல், இராணுவம் போன்ற துறை கள்ல வேலை பார்க்கறவங்களுக்கு இந்த நேரம் 'சோதனை மேல் சோதனை'ன்னு பாட வைக்கும். எச்சரிக்கையா இருங்க. சகோ தரிகளிடம் விட்டுக் கொடுத்துப் பழகறது நல்லது. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்குச் சான்ஸ் இருக்கு. அதுக்காக இப்பவே லாட்டரி கடை பக்கம் போய் நிற்காதீங்க.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

இதுவரை இருந்து வந்த சின்ன சின்னப் பிரச்னைகள் எல்லாம் காணாம போயிடும். குடும்பம் மொத்தமும் மகிழ்ச்சியில துள் ளும். பொருளாதாரப் பிரச்னை இருக்காது. உடல் நலன்ல கவனம் வையுங்க. வியாதிகள் தாக்குவதற்கும் சந்தர்ப்பம் இருக்கு. கணவன் மனைவிக்குள்ள உரசல் வர வாய்ப்பிருக்கு. கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் பழகுங்க. வெளியூர் பயணம் போனா எச்சரிக்கையா இருங்க. எல்லார்ட்டயும் சுமுகமா பழகறது நல்லது. ●

டிசம்பர் 6 முதல் 12 வரை



திருப்பம்!

வாச்வுமன் கூட அழகாக இருக்கும் மகளிர்க் கல்லூரி ஹாஸ்டலில் ஒரு கொலை. கொலை செய்யப்பட்டது ஓர் ஆண்! ஜோதிகா, ஷப்ராணி முகர்ஜி இருவர் மீதும் தபு தலைமையிலான போலீஸ் டீமுக்குச் சந்தேகம். உ.பி.சகள் இருவரும் போலீஸ்

சிநேகிதியே...

கஸ்டடிக்கு கல்தா கொடுத்துவிட்டுத் தப்பிக்க, தபு படை துரத்த, இறுதியில் எதிர்பாராத திருப்பம்!

திக்திக்!

துரத்தல்களுக்கு இடையிடையே திரையில் தோன்றுகிற ஒவ்வொரு கேரக்டர் மீதும் இவர்தான் கொலையாளியோ என்று சந்தேகம் பரவ, ரசிகர்கள் மண்டையைப் பிய்த்துக் கொள்கிறார்கள்.

அப்பாடா!

நல்லவேளையாக இரண்டரை மணி நேரத்தில் படத்தை முடித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக, டைரக்டர் ஒரு முடிவுக்கு வந்து விடுகிறார்!

எங்கே ஆக்ஸிஜன்?

ப்ளீச் மாஸ்க் தடவிக் கொண்டு, லேடீஸ் ப்யூட்டி பார்லரில் ஒரு ஆண்? கொலையைத் துப்புத் துலக்க வரும் சிபிஐ அதிகாரியை முன்பே தெரிந்திருந்தும் தபுவுக்கு அவரை அடையாளம் தெரியவில்லை. முகர்ஜியின் அத்தையாக வரும் லட்சுமி கொலை செய்யப்படும் காட்சியை அடுத்து, ஒழுகும் ரத்தத்தை டவலில் துடைப்பது என்று டெம்போவுக்காக சேர்க்கப்பட்டவை லாஜிக் பிராண வாயு இன்றித் தவிக்கின்றன.

மூச்சுவிட நேரமில்லை!

ஆனாலும் ப்ரியதர்ஷனின் ஷார்ப்பான திரைக்கதையும், என். கோபாலகிருஷ்ணனின் எக்ஸ்பிரஸ் வேக எடிட்டிங்கும் லாஜிக் பற்றி

யோசிக்க ரசிகர்களுக்கு வாய்ப்பு தராதது பெரிய ப்ளஸ்.

ஜோதிகாவா?

ஜோதிகாவை மெழுகு பொம்மையாகக் காட்டி கலை சேவை செய்து வரும் இயக்குனர்கள், 'சிநேகிதியே' ஜோதிகாவைக் கொஞ்சம் கவனிக்கவும். சந்தோஷம், குறும்பு, சோகம், அதிர்ச்சி, அவசரம், ஆக்ஷன் என்று காட்சிக்குக் காட்சி தூள் பரத்துகிறது அவரின் முகம்.

சபாஷ் ராணி!

முதல் படம் என்று நம்ப முடியாதபடி ஜோதிகாவுக்கு ஈடுகொடுத்திருக்கிறார் ஷப்ராணி முகர்ஜி. கல்யாண ஏற்பாட்டிலிருந்து தப்பிக்க, கற்பனையாக உருவாக்கிய ரமேஷ் நிஜமாக போனில் பேசுகிற போது, முகர்ஜிக்கு ஏற்படும் திகைப்பும், படபடப்பும் ரியல்.

சீனியர்னா சீனியர்!

சில காட்சிகளே என்றாலும் மனோரமா, லட்சுமி இருவருமே நிறைவு. ஆனால் எல்லோரையும் ஓரங்கட்டி விடுகிறார் தபு! கல்லூரிக்குச் சிறப்பு விருந்தினராக வரும்போதாகட்டும், அதிரடி போலீஸ் ஆபரேஷன்களாகட்டும், தங்கையோடு உருகுகிறபோதாகட்டும், இறுதியில் எல்லோரையும் உருக்குகிறபோதாகட்டும் கச்சிதமாய்ப் பொருந்துகிறார்.

ஆறு அற்புதங்கள்!

வித்யாசாகரின் இசையில் ஆறு பாடல்களும் அதிரடி இனிமை. ஒன்ஸ்மோர் போட மாட்டார்களா என்று நினைக்கும்படி பாடல்களைப் படமாக்கியிருக்கிறார் இயக்குனர்.

பூம்பூம்!

என்னதான் உயிர்த் தோழி என்றாலும் ஜோதிகாவின் ஐடியாக்களுக்கு 'பூம் பூம்' என்று முகர்ஜி தலையாட்டி வைப்பது கொஞ்சம் நெருடல்.

பாதை மாறி...!

வேகமாக முன்னேறும் படத்தில் 'ஒத்தையடிப் பாதையிலே' பாடல் செயற்கையான செருகல்.

— விஷுவல்தாசன்

சூப்பர் ஸ்டார் ரஜினிக்கு ஏற்குமா?

"ஒரு நாள் மதியம் நான் வீட்டிலிருந்தபடி, எதிரே இருந்த மைதானத்தில் சில ஆடுகள் துள்ளி விளையாடி மேய்ந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். சே! இந்த சாதுப் பிராணிகளையா நாம் தினமும் தின்று கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு என்னை வதைக்க ஆரம்பித்தது. அந்த நிமிடத்திலிருந்து நான் சைவமாக மாறி விட்டேன்" என்கிறார் சர் பால் மகார்ட்னி.

அறுபதுகளில் உலகை ஆட்கொண்ட பீடில்ஸ் இசைக் குழுவில் ஒருவர் மகார்ட்னி. ஆட்டுக்குட்டிக்கு அவர் புட்டிப்பால் புகட்டிக்கொண்டிருப்பது போல படம் பிடித்து போஸ்டர் வெளியிட்டிருக்கிறது 'பீடா' அமைப்பு. சர்வதேச அமைப்பான பீடாவின் (PETA People for Ethical Treatment of Animals) பிரசாரம் இந்தியாவை இப்போது குறி வைத்துள்ளது - இங்கே அசைவ உணவுப் பழக்கமும், மிருக வதையும் அதிகரித்து வருவதால்.

அடுத்த விளம்பரத்தில் அச்சடிக்க, சைவத்துக்கு மாறிய இந்தியசூப்பர் ஸ்டார் ஒருவரைத் தேடுகிறது பீடா.

என்ன ரஜினி சார்...
காதில் விழுகிறதா?





• திருச்சி மகளிர் காவல் நிலைய உதவிக்கரம்



• திரிபாதி

ஹெல்ப் 1020

முசிறி அருகே உள்ள ஒரு கிராமத்து இளைஞர் அவர். அதே கிராமத்து மங்கை ஒருவரிடம் முனைப்பான காதல் மூன்றாண்டுகளாய். எல்லாம் எதுவரையில் என்கிறீர்கள்? வேலை ஏதுமின்றி ஊரைச் சுற்றி வந்த வரைக்கும்தான். கட்டுமஸ்தான அந்த இளைஞருக்கு இராணுவத்தில் வேலை கிடைத்து தேசத்தின் எல்லைக்குச் சென்று விடுகிறார். நல்ல உத்தியோகம், கை நிறையச் சம்பளம், நிழல்போல் பின்தொடரும் வசதிகள் போன்றவற்றைப் பெற்றோர்கள் அந்த இளைஞரிடம் எடுத்துச் சொல்கிறார்கள். 'உன் காதலை மூட்டை கட்டி தூக்கியெறி. உன் வருகைக்காக வரதட்சணை மூட்டையுடன் உறவிலே பெண் தருவதற்குத் தயாராய் உள்ளார்கள். இந்த விடுமுறையில் உனக்குத் திருமணம்!" என்று சொல்லி மனத்தை மாற்றி விடுகிறார்கள். டௌரி பெறும் ஆசையில்தான் காதலித்த கௌரியை அந்த இளைஞர் தவிர்த்து விடுகிறார். அந்த கிராமத்துப் பெண் உதவிக்கரம் 1020ஐ நாட இரு சாராரையும் அழைத்து விசாரிக்கிறார்கள். பெற்றோர்களின் தூண்டுதலால் டௌரியா கௌரியா என்று குழம்பிப்போன இராணுவ இளைஞர் விசாரணையில் தெளிவடைகிறார். வரதட்சணை எதுவும் இன்றி தான் காதலித்த பெண்ணையே காவல் நிலையத்தின் அருகிலிருக்கும் ஒரு கோயிலில் இரு வீட்டார் சம்மதத்துடன் தாலிகட்டி மனைவியாக ஏற்றுக் கொள்கிறார். இது போல பல பெண்கள் பிரச்னைகள் தினமும் தீர்க்கப்படுகின்றன. பெண்கள் மீதான வன்செயல்கள் எங்கெங்கு நடக்கிறதோ, அது ஒரு தினத்தின் எந்த நேரமாக இருந்தாலும் சரி, கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்ட 1020என்ற விசேஷ அவசரத் தொலைபேசி எண்ணுடன் கூடிய சேவை மையம் ஒன்று திருச்சி, கன்டோன்மென்ட் மகளிர் காவல் நிலையத்தில் இயங்கி வருகின்றது.

''வன்செயல்களுக்கு உள்ளாகும் பெண்களுக்கு மட்டுமே இங்கே நிவாரணம் கிடைக்கும் என்றில்லை. பிறந்து இரண்டே நாளான பெண் குழந்தை ஒன்றிற்கும்கூட உதவிக்கரம் வாயிலாக புதுவாழ்வு கிட்டியுள்ளது'' என்கிறார் மகளிர் சட்ட உதவி மைய வழக்கறிஞர் உ. நிர்மலா ராணி.

திருச்சி மாவட்ட எக்ஸ்னோரா அமைப்பின் தலைவியும், உதவிக்கரம் சேவை மையத்திற்காகச் செயல்பட்டு வருபவருமான மைதிலி ஸ்ரீராம் சொல்கிறார்: "சமூகத்தில் பெண்களின் மீதான கொடுமைகளைக் களைய 1020 என்கிற தனிப்பட்ட தொலைபேசி எண் திருச்சி மாவட்டத்தில் மட்டுமே செயல்பட்டு வருகின்றது. தமிழகத்தின் இதர மாவட்ட மகளிர் காவல் நிலைய உதவிக்கரம் அமைப்புகளுக்கும் அந்த எண் கிடைக்க வேண்டும்."

திருச்சி சரக டி.ஐ.ஜியும், மாநகர போலீஸ் கமிஷனருமான ஜே.கே. திரிபாதி அவர்களைச் சந்தித்தோம். "இந்த அமைப்பு இங்கு சிறப்பாகச் செயல்படக் காரணம் காவல் துறையுடன் ஒத்துழைத்து ஆலோசனைகள் தந்து வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், பெண்கள் நல அமைப்புகளும், மகளிர் சட்ட உதவி மையமும்தான். தமிழகத்தின் இதர மாவட்ட மகளிர் காவல் நிலையங்களில் உதவிக்கரம் அமைப்பு செயல்பட்டு வருகின்றது. ஆனால், திருச்சி மாவட்ட டெலிகாம் துறையினரால் இந்த மாவட்டத்திற்கென்று தனி தொலைபேசி எண்ணாக உதவிக்கரம் 1020 எனத் தரப்பட்டிருப்பது தனிச்சிறப்பு!" என்கிறார் அவர்.

— திருவரசு

மூட்டுவலியை முறியடித்த முறையான முயற்சி !

மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களில் மிக அதிகமான நோய்களில் மிக அதிகமான அளவில் சிரமம் ஏற்படுத்துவது மூட்டு வலிகள் என்று கூறப்படும் ஆர்த்தரிட்டிஸ் ஆகும். உடலில் தோன்றும் மூட்டு வியாதிகள் பல உண்டு. அதை பெரும்பாலும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அதில் கைமூட்டுகளை மட்டுமே பாதிக்கக் கூடியவைகளை (Mono Arthititis) மோனோ ஆர்த்தரை ட்டிஸ் என்றும் எல்லா மூட்டுகளையும் பாதிக்கக் கூடியவை களை (Poloy Arthiritis) பாலிஆர்த்ரைட்டிடஸ் என்றும் கூறுகிறோம்.

உடலில் உள்ள பல மூட்டுகளை தாக்குகின்ற வியாதிகள் பல உண்டு. அவற்றில் முக்கியமானவை ருமாட்டஸ்டு ஆர்த்தரிட்டிஸ், முதியவர்களின் எலும்பு தேய்மானத்தால் வரும் ருமாட்டிக் ஜ ரத்துடன் உடலிலுள்ள எல்லா மூட்டுகளின் வலி, குழந்தைகளுக்கு வரும் மூட்டுவலி, பால் வினை நோயால் வரும் மூட்டுவலி, இரத்தத்தில் யூரியா மிகுதியால் வரும் மூட்டுவலி, புற்றுநோய்க் கட்டிகளுடன் சேர்த்து வரும் மூட்டுவலி, பரம்பரையாக வரும் மூட்டுவலி, காரணமே இல்லாமல் வரும் மூட்டுவலி, எலும்பு வளர்ச்சியின் காரணமாக கழுத்துப் பகுதியில் ஏற்படும் மூட்டுவலி, விபத்துகளில் அடிபடுவதால் ஏற்படும் வலி இப்படி பல விதமான மூட்டு வலிகள் உள்ளன.



D. ராணி

இந்த நோய்கள் வந்தால் கழுத்துவலி உள்ளவர்களுக்கு எப்போதும் கழுத்து வலித்துக்கொண்டே இருக்கும். தலையில் நாலு கிலோ வெயிட் வைத்து அதை கழுத்து தாங்கிக்கொண்டிருப்பது போன்ற உணர்வு இருந்துகொண்டே இருக்கும். அடிக்கடி கழுத்து சொடக்குவிடச் சொல் வேண்டும் போல் இருக்கும். கழுத்து வலியைத் தொடர்ந்து எந்தப்பக்கம் அதிக வலி இருக்கிறன்றதோ அந்தப்பக்கத்து தோள்பட்டை முதல் கை வரையில் வலி தாங்க முடியாமல் இருக்கும். இடுப்பு வலி உள்ளவர்களுக்கு தாங்க முடியாத குத்தல் குடைச்சல் வலி இருக்கும். இவர்கள் குனிந்து நிமிர்வதைப் பார்த்தாலே மிகவும் பரிதாபமாக இருக்கும் குனிந்தால் நிமிர முடியாது. நிமிர்ந்தால் குனிய இயலாது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் ஒரு பயங்கர மூட்டுவலி இருக்கிறது. இதை சியாடிகா என்று (Sciatica) கூறுவார்கள். இது இடுப்புப் பகுதியில் ஆரம்பித்து உள்ளாகவே சென்று பாதம் வரை சென்று சித்ரவதை கொடுக்கும். அது ஷாக் அடிப்பது போல் திடீர் வலியும் ஏற்படும். 40 வயது அடைந்தவர்களுக்கு இது போன்ற பிரச்சனைகள் ஏற்படும் காரணம் நாம் உட்கொள்ளும் உணவு முறை பழக்கத்தினாலும், சத்து நிறைந்த ஆகாரத்தை தேர்ந்தெடுத்து சாப்பிடாத தாலும் ஆகும்.

பெண்களில் சிலருக்கு மாத விலக்கு நின்ற பின் இந்நோய் ஏற்படுவதுண்டு. கர்ப்பப் பையை எடுத்தவர்களுக்கு உடற்பருமன் ஏற்படுவதோடு இந்நோயும் ஏற்படுகிறது.

மேற்கூறிய பல காரணங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டு அவதிப்பட்ட சிலரின் அனுபவங்கள். ராணி, எம்.வி.என். நகர், திருமங்கலம், அண்ணாநகர் மேற்கு சென்னை 40, தனக்கு சுமார் 5 வருடங்களை இருந்து வந்த தாங்கமுடியாத மூட்டுவலியை குணப்படுத்த பல மருத்துவமனை ஏறி இறங்கியும் சரியாகாமல் பின்னர் ரப்பானி வைத்யசாலா சென்று குறுகிய காலத்தில் பரிபூரண குணம் அடைந்ததாக கூறுகிறார். மேலும் சென்னை சாலிக்கிராமத்தை சேர்ந்த வசந்தா என்ற பெண்மணிக்கும் இந்த குறை இருந்து மிகவும் கஷ்டப்பட்டு பின் ரப்பானி வைத்யசாலாவில் காண்பித்து குணம் அடைந்துள்ளார்.



வசந்தா

மேலும், கிட்னி பெய்லியர், குழந்தையின்மை, அல்சர், ஆண்மை குறை சோரியாசிஸ் ஆஸ்துமா, காகாய் வலிப்பு மற்றும் சகல வியாதிகளுக்கும் இங்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. திங்கள், புதன் கிழமைகளில் காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரையிலும், வெள்ளிக்கிழமைகளில் காலை 9.30 மணி முதல் 10.00 மணி வரையிலும் டாக்டரின் பேட்டியை Vijay TV-ல் காண தவறாதீர்கள்.

இவரை அணுகவேண்டிய முகவரி.
டாக்டர். ஹக்கீம் சையத் சத்தார்
ரப்பானி வைத்யசாலா
73/1, டாக்டர் பெசன்ட் ரோடு,
மீர்சாகிப்பேட்டை மார்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை-14.
போன். 8510969, 8410874
(டாக்டர். சையத் சத்தாரின் யுனானி மருத்துவ மாத இதழ் கடைகளில் கேட்டுவாங்குங்கள்)

பா. ராகவன்

19

இருள் மிக அழகானது. பூசி மெழுகிய கருமையினிடையே அபூர்வமாக மனம் உணரும் வெள்ளிக் கோடுகளுக்காகவே அடிக்கடி கண்களை இறுக்க மூடி இருளில் கரைய விரும்புவாள் உமாதேவி.

எப்போதும் ரசிக்கத் தருந்தது இருள். அதேசமயம் மனத்தின் மாயப் பள்ளங்களில் அது நிரம்பிப் படருவது சகிக்கவொண்ணாத வேதனை தரக்கூடியது. இட்சிணியின் இரும்புக்கரம் போல் அது செயலைப் பிடித்து அழுத்தி முடங்கச் செய்துவிடுகிறது. எப்படியோ.

புவியின் பாறை மிகுந்த அடியாழங்களைக் கால் நகங்களால் குடைந்து கொண்டே அருள்தாஸ் இறங்கிப் போகிறான் என்று நீலுப்பாட்டி தன் கனவில் கண்டு சொன்னபோது எத்தனை கோபம் உண்டானது தனக்கு என்று எண்ணிப் பார்த்தாள்.

பாறைகளின் ஆழங்களில் அவன் ஏன் களை தேடிப் போகக் கூடாது என்று பெரிய புத்திசாலி போலத் தனக்குத் தானே கூறிக் கொண்ட சமாதானம் இப்போது போன இடம் தெரியவில்லை. மயக்கத்தில் மனம் இருண்டு போயிருந்தது பற்றிய வெட்கம் மிகுந்து கட்டெரித்தது.

நியாயத் தீர்ப்பு வழங்கும் தினத்து தேவ கன்னிகை போல மனத் தடங்கலற்று, ஒரு செய்தி வாசிப்பாளரின் உணர்ச்சியில் பொழிந்து கொண்டிருந்தாள் அற்புதமேரி.

"என் பளைய அண்ணன் செத்தே போச்சி உமா" என்று அவள் கரங்களைப் பற்றிக்கொண்டு அழுதாள் அற்புதமேரி.

"கேட்டேன், என்னத்துக்கு இந்தப் பாடுன்னா. உனக்குக் கல்யாணமாவ வேணாவா, நா ஒரு லாஞ்சி வாங்க வேணாவா, மேலா சோறு பொங்கித் தின்ன வேண்ணாவாங்கான். பிச்சியெடுத்துத் திங்கலான்னேன். போடி சரி தான்னுட்டான்..."

உயிரை வளர்த்துக் கொண்டிருந்த அவன் படகு, இல்லாமலான கஷ்டத்தை ஒருகணம் உமா எண்ணிப்பார்த்தாள். மிகப் பெரிய சோகந்தான்; சந்தேகமில்லை. இரு கரங்களைப் பிய்த்து எறிந்தாற் போலத்தான் இருக்கும். ராமேஸ்வரத்துத் தீர்த்தங்கள் வற்றிப் போனால் தன் தந்தையின் பிழைப்பு என்னாகும்? தன் குடும்பம் என்னாகும்? அப்படித்தானாகியிருக்கிறது அவனுக்கு.

படகு போனாலென்ன? கரங்களில்லை? துடுப்பில்லை? தூண்டிலில்லை? மீனை விட்டால் வேறு பிழைப்பில்லை?

கடவுளே, என்னவெல்லாம் எண்ணியிருந்தோம்! கடை போட்டு அவன் அமர்ந்தால் சைக்கிளில்தான் சென்று சரக்கு வாங்கி வந்து அடுக்கி, உதவலாம் என்பது வரை அவள் தன் பொழுதுகளுக்குக் கற்பனையைத் தின்னக் கொடுத்திருந்தாள்.

உமாவுக்கு இன்னமும் நம்பத்தான் முடியவில்லை. 'பாடு அம்புட மாட்டேங்கு உமா' என்று ஒரு சிறுவனைப் போல் சிணுங்கிப் பேசும் அருள்தாஸைத்தான்



அவள் அறிவாள். நடுக்கடலில் அவனாலும் டீசல் கடத்த முடியுமா? வீட்டிலொரு கைத் துப்பாக்கி பார்சலைப் பார்த்துத்தான் சந்தேகம் வந்ததாக அற்புதமேரி சொன்னாள்.

மனச்சிக்கல்களற்று இனித் தன்னால் அவன் கையைப் பற்ற முடியுமா?

“அம்மை கேக்கா, தப்பென்ன இது லண்ணு. மீனுக்காரப் பயலுக ஆரு செய் யலை இங்கண்ணு கேக்கா உமா! மீனுக் காரனா இருந்தா என்ன? அய்யமாரா இருந்தா என்ன? தப்பு செஞ்சா தப்பு, தப்புதானே?”

பொட்டிலடித்தாற் போலிருந்தது அவளுக்கு. புரோகிதம் தொழிலென்றாலும் பணத்தின் பொருட்டுத் தன் தந்தை செய்து வரும் பல தவறுகளை அவள் அறிவாள். தவறு என்று தோன்றுமே தவிர, குற்றமென்று ஏன் உறைத்ததில்லை?

தீவுக்கே இயல்பாகி விட்டதா குற்றம்? திரும்பத் திரும்பச் செய்யப்படுவதன் மூலம் குற்றங்களும் வெறும் செயலாகி விடுவது இயற்கையின் எழுதப்படாத நியதிகளுள் ஒன்றென ஆகிவிட்டதா என்ன?

ஆனால், அப்பாவின் சாஸ்திரக் கபடங்களுக்குக் கடவுள் கூலி கொடுத்தால்தான் உண்டு. காவல் துறை தலையிடும் அபாயம் இதில் இல்லாததால்தான், தான் பெரிதாகக் கருதாமலிருக்கிறோமோ என்று தோன்றியது அவளுக்கு.

எத்தனை வருடங்கள்! நகரில் ஒரு தொழில் இல்லை. தொழிற்சாலை இல்லை. கல்லூரி இல்லை. சரியான உணவகங்கள் இல்லை; தகவல் தொடர்பு வளரவில்லை. சாலைகள் இல்லை. பிழைப்புக்கு இரண்டே வழி. பிராமணனாகப் பிறந்தால் புரோகிதம் பார்த்தேயாக வேண்டும். மீனவனாயிருந்தால் கடலை அண்டிக் கிடக்க வேண்டும்.

வேறு யாராவது எதையாவது இங்கே செய்கிறார்களா என்ன? செய்யத்தான் வேறு வழியுண்டா?

கொக்கரித்துச் சிரிப்பது போலப் புழுதி இறைத்துச் சென்றது கடல் காற்று. கண்ணுக்கெட்டிய தூரம் வரைப் பரந்து குவிந்து கிடந்த மணற் பரப்பு இப்போது ஒரு சுடுகாடு போலத் தென்பட்டது அவளுக்கு.

“எனக்கு என்னஞ் செய்யறதுன்னே புரியல உமா. நீ அண்ணங்கிட்டப் பேசிப் பாக்கியா? பாம்பன் மரிச்சாமி கிட்டப் போயி சோளி போட்டுப் பாத்துக் கேட்டேன். அவரு சொல்லுதாக, அண்ணனுக்கு நேரஞ் செரியில்லண்ணு. ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிப் போனா நாந் தரிக்க மாட்டேன் உமா.”

அலை உறங்கும் கடல்



அற்புதமேரியைப் போல் தனக்கேன் குமுறிக் குமுறி அழத் தோன்றவில்லை என்று நினைத்தாள் உமா. விண்ணென்று இழுத்துக் கட்டிய நாணின் நடுவே ஒரு வெட்டு விழுந்தாற் போலிருந்தது. மனத்தில் ஒரு ஓரத்தில் சுருக்கொண்டிருந்த வலி ஏனோ இன்னும் தேகமெங்கும் படரா திருப்பதாக உணர்ந்தாள் அவள்.

ஒருகணம், உடனே அருள்தாஸைச் சந்தித்துப் பேச வேண்டும் போலிருந்தது. உடனே, அவனை இனி சந்திக்கவே வேண்டாம் என்றும் தோன்றியது.

இனி முடியுமா அது? மனத்தின் சம்மதம் கோராமலேயே தான் அவனை விலக்கி விட முடிவு செய்து விட்டோமோ என்கிற ஐயம்

எழுந்தது அவளுக்கு. அவளால் சற்றும் புரிந்து கொள்ள முடியாத, ஒரு பாதுகாப்பு அரண் தேடிக் கொண்டே இருக்கிற தன் வாழ்க்கை முறைதான் இதற்குக் காரணமாயிருக்க முடியுமென்று நினைத்தாள்.

கடல் குறித்த தன் அச்சங்களை அவள் விவரித்தபோது, "நீ கொஞ்ச நாள் தயிர் சாதம் சாப்பிடறதை நிப்பாட்டு, சொல்லுதேன். பொறவு சரியாப் போவும். எறங்கி நீச்சப் போடுவமான்னு நீயே கேப்ப அப்ப!" என்று பதில் சொன்னான் அருள்தாஸ்.

உண்மையாகவுமிருக்கக் கூடுமென்று இப்போது நினைத்தாள் உமா. உணவும்கூட அல்லவா மனத்தின் தன்மையை நிர்ணயிக்கும் காரணிகளுள் ஒன்றாயிருக்கிறது!

"சொல்லு உமா! நீ அண்ணங்கிட்டப் பேசுதியா? நீ எடுத்துச் சொன்னா கேப்பான்னு நினைக்கேன். வூட்டுல அம்மையுஞ் செரியில்லாம நாம்படுத மனப்பாடு உனக்கு விளங்கும்னு நினைக்கேண்டி. சொல்லு, பேசுதியா நீயி? இப்பம் போட்ஜெட்டியாண்ட இருப்பான். வாரியா போவம்?"

அலை ஏந்தியெடுத்து வந்த காற்றின் குழலொலி இப்போது நாராசமாக ஒலிப்பது போலிருந்தது அவளுக்கு.

மேரி வலியால் துடிபடுவாள் என்பதை நன்கு உணர்ந்தும் தீர்மானமாக மறுத்துத் தலையாட்டினாள் உமா.

"அதிர்ச்சி அடங்கலை மேரி. புரிஞ்சிக்கோ. இந்த க்ஷணம் எனக்கு அவனைப் பார்க்கப் பிடிக்கலை. ஆனா நான் பேசுவேன். நிச்சயமா பேசுவேன். எப்ப தெரியுமா? என் காதலுக்குக் குறைஞ்சபட்ச கௌரவம்கூடத் தான் குடுக்கலைன்னு அவன் உணரும்போது பேசுவேன். வரேன்!"

பதிலுக்குக் காத்திராமல் திரும்பி நடந்தாள்.



"போன வாரம் இந்த பக்கமா ஒரு திருடன் ஓடி வந்தானா?"

"உடனே கேட்காம இப்ப வந்து கேட்டா எப்படி?"

"ஒரு வாரமா நான் உங்களைப் பார்க்கவே இல்லையே! பார்க்கிற போது தானே கேட்க முடியும்?"

- பர்வதவர்த்தினி

"எங்கேடி போயிட்டே?" என்று நீலுப் பாட்டி கேட்டாள்.

"வராத பொண்ணும் மாப்பிள்ளையும் வந்திருக்கா. எனக்கென்னமோ வீடே லக்ஷ்மிகரமாயிட்ட மாதிரி இருக்கு. இருந்து பேசிண்டிருப்பியான்னா, சொல்லாம போயிட்டியே?"

வாசலில் போகிற வருகிறவர்களையெல்லாம் அழைத்து வந்து அப்பா பழைய கசப்புகளையும் புதிய பரவசத்தையும் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கக் கண்டவள், பத்து நிமிடங்கள் அவரைத் தனியே அழைத்துப் போய்ப் பேச வேண்டுமென்று நினைத்தாள்.

பேச விரும்பிய விஷயத்தின் சாரத்தைச் சில வரிகளில் சுருக்கி வடித்து, மனத்துக்குள் ஒருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

மனிதர்கள், உணர்ச்சியின் பனி நீர்ப் பெருக்கில் திளைத்துக் குளிர்ந்திருக்கும் தருணங்கள் மிக அபூர்வமானவை. வாழ்வில் எப்போதாவது மட்டுமே நேரும் அத்தகைய தேவகணம் இப்போது நிகழ்ந்திருப்பதாக அவள் நம்பினாள்.

ஓர் உறுதியுடன் அவரை அணுகி, "அப்பா" என்று மெதுவாகக் கூப்பிட்டாள்.

"ம்?" என்றார் அப்புசாமி.

"கொஞ்சம் வரியா என்னோட?"

"எங்க?" என்று கேட்டார்.

"வெளி வாசலுக்கோ, கொல்லைக்கோ, உன் அக்னி தீர்த்தத்துக்கோ. எங்கேயாவது ரெண்டு நிமிஷம் ரொம்ப முக்கியமா தனியா பேசணும்."

"என்ன நீ சொல்றே? மாப்ள வந்திருக்கான் ஆத்துக்கு."

"தெரியும். நீ இப்ப வந்தே ஆகணும்."

வாழ்வில் இதுகாறும் உமா தன்னுடன் இப்படிப் பேச விரும்பியதே இல்லை என்பதை எண்ணிப் பார்த்தவர், குழப்பமுடன், "வா" என்று வாசற்படி இறங்கி, "தோ வரேன் அஞ்சு நிமிஷத்துல" என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்து விட்டு, "சொல்லு இங்கியே?" என்று சொன்னார்.

தன் முன் தீர்மானத்தின்படியே சொல்ல ஆரம்பித்தாள்: "நீ கற்பனையே பண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு சம்பாதிக்க ஒரு வழி வந்திருக்கு."

ரகசியமும் பரவசமும் கலந்த குரலில், வெளிப்பட்டன அவளது சொற்கள்.

அப்புசாமி, ராமநாதனை மறந்தார்.

அகிலாவை மறந்தார். மகளும் மருமகனும் எதிர்பாராமல் வந்ததனால் விளைந்த குதூகலமும் பின்னுக்குத் தள்ளப்பட்டு, பரவச நிலையின் மிக உச்சபட்ச சாத்தியத்தைத் தன் மனம் தொடுவதை உணர்ந்தார்.

"என்ன சொல்றே நீ? யாராணா கோமடல் வர யாத்ரிகா வந்திருக்காளா? உனக்கெப் படித் தெரிஞ்சது? யார் சொன்னா?"

கேள்விகள் துள்ளிக் கொண்டு வந்தன, அவரிடமிருந்து.

"என்னது?"

"அகிலாவோட மெட்ராஸ் போறேன். இன்னிக்கே. நீ தடுத்தாலும் நிக்கறதா இல்லை."

"எதுக்கு? ஏன் போட்டுக் குழப்பறே?" என்றார் அப்புசாமி.

"குழப்பம் ஒண்ணுமேயில்லை. ஒரு நாலு நாள் நீ தெளிவா யோசி. நான் சொன்ன நிரந்தர வருமானத்தையும் இப்ப நான் திடுதிப்புனு கிளப்பிப் போறேங்கறதையும் சேர்த்து யோசி. நல்லபடியா முடியட்டும். வந்து சொல்றேன்" என்று சொல்லிவிட்டுச் சட்டென்று வீட்டுக்குள் நுழையத் திரும்பியவனைத் தடுத்தார் அப்புசாமி.

"நீயும் வேலைக்கு எங்கியாவது போக அவ மூலமா முயற்சி பண்றேங்கறியா?"

"இல்லே."

"பின்னே?"

"நீ புரோகிதம் பார்த்தது போதும். உட்கார்ந்து ஒரு தொழில் பண்ணுங்கறேன்."

"தொழிலா?"

"ஆமா. தொழில்தான். சட்டை போட்டுண்டு, முதலாளி ஆயிடு. ஜம்முனு இருக்கும். அப்ப இந்தக் குடுமி வேண்டாம். கிராப் வெச்சுக்கோ. மீசை வெச்சுண்டாக் கூட நன்னாத்தான் இருக்கும். அதை அப்புறம் யோசிக்கலாம்" என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு உள்ளே ஓடியவனைக் குழப்பமுடன் பார்த்தார் அப்புசாமி. 'பைத்தியம், பைத்தியம்' என்று அவர் உதடுகள் முணுமுணுத்தன.

ஆனால் என்ன சொல்லியும் கேளாமல், இரவு அகிலா கிளம்பும்போது, அவன் தன் துணிகளையும் ஒரு பையில் அடைத்துக் கொண்டு காரில் ஏறி உட்கார்ந்தபோது 'ஜாக்கிரதை' என்றுதான் சொல்ல முடிந்தது அவரால்.

புயலடித்து ஓய்ந்தாற்போல வீடு நிசப்தமாகி விட்டது. பிறகு நீலுப்பாட்டியும் அப்புசாமியும் மட்டும் எதிரேதிரே அமர்ந்து பேச எவ்வளவோ இருந்தும் ஒன்றுமில்லா



"அந்த ஆஸ்பத்திரி கேம்பஸ்லேயே ஏன் பிரிண்டிங் பிரஸ் வச்சிருக்காங்க?"

"உத்திரகிரியைப் பத்திரிகை அடிக்கத்தான்!"

- புளியரை கணேசன்

தது போல மௌனத்தை உற்பத்தி செய்து கொண்டிருந்தார்கள்.

சற்று நேரம் பொறுத்துவிட்டு, "நான் படுத்துக்கறேன்" என்று உட்கார்ந்த இடத்திலேயே சாய்ந்து விட்டாள் நீலுப்பாட்டி.

நீண்ட நேரம் அசையாமல் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தார் அப்புசாமி.

புலப்படாத விடையைத் தேடி சூனியத்தில் பயணித்துக் கொண்டிருந்தது அவர் மனம். அடுத்த வருஷத்துக்குள்ளாவது உமாவின் திருமணத்தை எப்படியும் முடித்துவிட வேண்டும் என்று தீர்மானமாகத் தோன்றியது.

கண்கள் தன்னையறியாமல் சொருகத் தொடங்க, அவரும் படுக்க முனைந்தபோது, புலிக்கு அடியிலிருந்தொரு பெருவிசை பிடித்துத் தள்ளினாற போல நீலுப்பாட்டி உறக்கத்திலிருந்து சடாரென்று விழித்தெழுந்து அமர்ந்தாள். அவள் உதடுகள் வேக வேகமாக முணுமுணுக்கத் தொடங்கின.

"அப்புச்சா! அப்புச்சா! இங்கேருந்து கிளம்பிடணும்டா. இந்த ஊர் இனிமே வேண்டாம். நாஞ் சொல்றேன். நீ எழுந்திரு இப்பவே. அந்தகாரம் சூழ ஆரம்பிச்சுடுத்து. என் பயம் பலிக்கப் போற வேளை வந்தாச்சு. போயிடலாம்டா! இப்பவே கிளம்பு! ஒரு க்ஷணம் கூட இனிமே இங்க இருக்க வேண்டாம். வரா பார் சூர்ப்பனகை! வாள் வெச்சிருக்காடா! வெட்டரிவாள் தெரியறது பார். எழுந்திருடா! எழுந்திரேன்! ஐயோ!"

கண்களை இறுக மூடி, இரு காதுகளில் கரம் புதைத்து அவள் எழுப்பிய ஓலக் கூச்சலில் சுவர்கள் அதிர்வது போலிருந்தன அவருக்கு.

முதல்முறையாக அச்சம் மிகுந்து, "அத்தே?" என்று மெள்ளக் கூப்பிட்டபடி அவள் அருகே சென்றார் அப்புசாமி.

(தொடரும்)

ஒரே கல்லில்...





நம் நாட்டில் தொழிற் கல்விக்கு ஏகப்பட்ட டிமாண்ட். முக்கியமாக பொறியியல் கல்லூரிகள் நிரம்பி வழிகின்றன. ஆனால் பல நாடுகளில் அப்படியல்ல. பல விதங்களில் கவர்ச்சி அம்சங்களைச் சேர்த்துக் கொண்டு "எங்களிடம் பயில வாருங்கள்" என்று அழைப்பு விடுக்கின்றன பல்கலைக் கழகங்கள். அதற்கான சமீபத்திய உதாரணம் 'ஏஷியா பஸிபிக்.'

சிங்கப்பூரில் உள்ள தேசிய பல்கலைக் கழகமும், அமெரிக்காவில் உள்ள ஜார்ஜியா தொழில் நுட்ப மையமும் இணைந்து மேற்படி அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

1998 நவம்பரில் உருவான இந்தக் கல்வியமைப்பு மூன்று செமஸ்டர்களுக்கான (பதினெட்டு மாதங்கள்) கல்வித் திட்டம் ஒன்றை அளிக்கிறது. அதில் சேர்ந்து தேர்ச்சி பெறுபவர்களுக்கு இரட்டை லாபம். அதாவது மேலே குறிப்பிட்ட அமெரிக்க மற்றும் சிங்கப்பூர் பல்கலைக்கழகங்கள் இரண்டிலிருந்தும் லாஜிஸ்டிக்ஸ் பிரிவில் இரண்டு பட்ட மேற்படிப்பு சான்றிதழ்களைப் பெறலாம்.

இந்த ஒன்றரை வருடக் கல்வியின் போது நடைமுறை பிரச்னைகளை அனுபவ பூர்வமாகவே அறிந்து கொள்ள வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. ஒரு செமஸ்டர் சிங்கப்பூரிலும், அடுத்த செமஸ்டரை ஜார்ஜியாவிலும் படித்துவிட்டு மூன்றாவது செமஸ்டரின்போது பிராஜக்ட் செய்ய வேண்டும். வகுப்புகள் தொடங்குவது ஜூலை 2001ல்.

இந்தக் கல்வித் திட்டத்துக்கு சிங்கப்பூரின் தேசிய அறிவியல் தொழில்நுட்பக் குழுமமும், அந்த நாட்டின் பொருளாதார முன்னேற்ற அமைப்பும், வேறு சில தனியார் நிறுவனங்களும் மாணவர்களுக்குப் பல்வேறு உதவித் தொகைகளை அளிக்கிறார்கள். (டியூஷன் பீஸ் மட்டுமே சுமார் 19,000 சிங்கப்பூர் டாலர்கள்)

இந்தியா, சீனா போன்ற நாடுகளில் உள்ள தலைசிறந்த அறிவியல் மற்றும் பொறியியல் பட்டதாரிகள் இதில் சேர்வார்கள் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறது ஏஷியா பஸிபிக்.

அதுசரி, இந்தக் கல்விக்குத் தனியார் நிறுவனங்கள் எதற்காக பெரிய அளவில் உதவி செய்ய முன் வர வேண்டும் என்பது வெகு நியாயமான கேள்வி. மாணவர்களின் தகுதிகளைப் பரிசீலித்துவிட்டு "இன்ன மாணவர்களை நாங்கள் ஸ்பான்சர் செய்கிறோம்" என்று சிங்கப்பூர் நிறுவனங்கள் தீர்மானம் செய்ய, அதற்கு ஒப்புக் கொள்ளும் மாணவன், படிப்பு முடிந்த பிறகு மூன்று வருடங்களுக்கு அந்த நிறுவனத்தில் வேலை செய்ய வேண்டியது (ஊதியத்துக்குத்தான்) கட்டாயம். அதானே!

- குல்லூ

ஒரு படம் வெற்றி பெற்று விட்டால், அந்தப் படத்தின் தலைப்பில் பாதியையும், கதையில் ஒரு பகுதியையும் உல்டா செய்து கொண்டு ப(ட)டமெடுப்பது தமிழ் சினிமாவுக்குக் கைவந்த கலை. காதல்கோட்டையில் பிடித்த காதல் ஜுரம் இப்போது ஓடிக் கொண்டிருக்கும் 'அன்புடன்' படம் வரையிலும் அடித்துக் கொண்டிருப்பதே இதற்கு உதாரணம். இந்த சீசனல் ரேஸில் இப்போது அம்மன் படங்களும் அடக்கம். 'பாளையத்து அம்மன்' வெற்றியைத் தொடர்ந்து, 'தாலிகாத்த காளிஅம்மன்', 'பொட்டு அம்மன்' என்று அரைடஜன் படங்கள் அறுவடைக்குத் தயார். வியாபார நோக்கத்தை மட்டுமே பின்னணியாகக் கொண்ட இந்தப் படங்களுக்கு ரசிகர்களின் அமோக ஆதரவு எப்படி? இதோ நமது தியேட்டர் விசிட்.



அம்மன் படங்களின் அறுவடை!

சென்னை தி.நகரில் உள்ள கிருஷ்ணவேணி தியேட்டர். தினசரி மூன்று காட்சிகளாக 'பாளையத்து அம்மன்' படம். மாலைக்காட்சி பார்ப்பதற்காக பெண்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. அதற்கு இணையாக ஆண்கள் கூட்டம்.

பிளாஸ்டர் ஆஃப் பாரிசில் செய்யப்பட்ட அம்மன் உருவம் ஒன்று தியேட்டரின் நுழைவாயிலில் நடுநாயகமாக வைக்கப்பட்டிருந்தது. அம்மன் உருவத்தின்மீது சீரியல் அலங்கார விளக்குகள். தவிர இரண்டு அகல்விளக்குகள், எரிந்து கொண்டிருந்தன. அம்மனுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த ஒரு தட்டில் குங்குமம், திருநீறு வைக்கப்பட்டிருந்தன. டிக்கெட் கொடுக்கப்பட சில மணித்துளிகளே மிச்சமிருந்த இடைவெளி. தியேட்டரில் கூடிய ரசிகர்களில் பலரும் தட்டில் சில்லறைகளைக் காணிக்கையாகப் போட்டுவிட்டு, திருநீறு, குங்குமம் நெற்றியில் பூசிக் கொண்டார்கள். பெண்கள் செலுத்திய காணிக்கையில் தட்டு நிறைந்துவிட்டது. இதற்குள் டிக்கெட் கொடுப்பதற்கான மணி அடித்ததும், கூட்டம் அடித்து பிடித்துக் கொண்டு கௌண்டரை நோக்கி ஓடியதால்... நாமும் இரண்டு டிக்கெட்டை வாங்கிக்



• லட்சுமி



• கலா



• கவிதா

(கவனிக்க, பால்கனி டிக்கெட் ரூபாய் பதினைந்து மட்டுமே) கொண்டு தியேட்டருக்குள் நுழைந்தோம்.

ஆறுமணி நாற்பது நிமிடத்திற்கு படம் தொடங்கியது. திவ்யா உண்ணியும், ராம்கியும் ஆதர்ச தம்பதிகள். கர்ப்பமாக இருக்கும் திவ்யா உண்ணி டாக்டரிடம் சென்று ஸ்கேன் செய்து பார்க்க, வயிற்றில் சூலவடிவில் பெண் குழந்தை இருக்கிறது! (கிராபிக்ஸ் உபயம் - டிராட்ஸ்கி மருது) சாத்தான் சக்தியை அழிக்க அம்மனின் பிரதிநிதியாகப் பிறக்கப்போகிறது அந்தக் குழந்தை. சாத்தான்களின் பாஸ் சரண்ராஜ். குழந்தை பிறந்ததும் அதைக் கொல்ல பல வகையிலும் முயன்று தோற்றுப் போகிறார். ஒவ்வொரு முறையும் அதிரடி விஜயம் செய்து குழந்தையை அம்மன் காப்பாற்றிவிடுகிறது.

இப்படிப் போய்க் கொண்டிருக்கும் கதையில், அடிக்கடி அம்மன் அலைய வேண்டியிருக்கிறதே என்று இயக்குனர் நினைத்தாரோ என்னவோ, இந்தியாவில் எந்தக் கோயிலிலும் இல்லாத ஒரு புது காணிக்கை முறையை உருவாக்கி அம்மனுக்கு ஓய்வு கொடுக்க நினைக்கிறார். அதாவது 'குழந்தை நல்லபடியாக பிறந்தால் உன் கோயில் உண்டியலில் என் தாலியைக் காணிக்கையா போடறேன்' என்று வேண்டிக் கொண்ட திவ்யா உண்ணி, குழந்தை, கணவர் சகிதம் பாளையத்து அம்மன் கோவிலுக்கு வருகிறார். உண்டியலில் குழந்தையின் கையால் தனது தாலியைப் போட முயற்சிக்கும்போது, குழந்தை தவறி உண்டியலுக்குள் விழுந்துவிடுகிறது. உண்டியலில் விழுந்த அனைத்தும் அம்மனுக்கே சொந்தம் என்பது அந்தக் கோவிலின் சட்டம். அதையும் மீறி குழந்தையோடு வீட்டுக்கு வந்துவிட, அம்மன் நேருக்கு நேர் பக்தையோடு மோதுகிறது! காணிக்கையைக் கொடுக்கும்படி விவாதம் செய்கிறது. இடையிடையே பாடல்காட்சிகள் வரும்போதெல்லாம் தியேட்டருக்குள் 'ஊ... ஊ... ஊ..' என்று பக்தி கலந்த குலவை சப்தம். என்னவென்று எட்டிப் பார்த்தால் வெவ்வேறு ஏரியாக்களில் நான்கு பெண்கள் சாமியாடிக் கொண்டிருக்கிறார்கள்! அவர்களைப் பிடித்து அடக்கிக் கொண்டு இரண்டு பேர்... சுற்றி இருப்பவர்களுக்குப் பரவசம். நல்ல வேளையாக பால்கனியில் யாருக்கும்

• இன்ஸ்டன்ட் கோவில்



சாமி வரவில்லை.

ஒரு வழியாக அம்மன் பக்தையை ஜெயித்து, குழந்தையைக் காணிக்கையாக வாங்கிக் கொண்டு, குழந்தையை அழிக்க வரும் சாத்தனிஸ்ட்டை சூரசம்காரம் செய்வதோடு படம் முடிந்தது!

சாமியாடிய நான்கு பேரில் ஒருத்தரையாவது பிடித்து விடலாம் என்று அவசர அவசரமாக ஓடினோம். மாட்டிக் கொண்டவர் தனலட்சுமி. கண்ணம்மாபேட்டையைச் சேர்ந்த இவர் நான்காவது முறையாக இந்தப் படத்தைப் பார்க்கிறாராம்.

"மாரியம்மாதான் எங்களுக்குக் குலதெய்வம். எனக்கு அஞ்சு வயசுலேர்ந்து சக்தி வரும்." என்றவரிடம் "பாம்பு குழந்தைக்கு மாலை போடுவதையெல்லாம் நம்புறீங்களா?" என்றோம். "அய்யோ... அய்யோ" என்று வாயில் அடித்துக் கொண்டவர், "இப்படியெல்லாம் பேசாதீங்க" என்றார் அச்சத்தோடு.

"மீனாவுக்கு அம்மன் வேஷம் பொருத்தமாத்தான் இருக்கு. இதே படத்துல அம்மன் கரகம் எடுத்து கவர்ச்சியா ஆடுறமாதிரி காட்டுறாங்க. அதப்பாக்கத்தான் கொஞ்சம் ஒரு மாதிரி இருக்கு'' என்கிறார், அம்மா, சகோதரி சகிதம் தியேட்டருக்கு வந்திருந்த கலா.

"ரம்யா கிருஷ்ணனுக்குத்தான் அம்மன் வேஷம் பொருத்தமாயிருக்கு'' என்ற லட்சுமியிடம், "ரம்யா கிருஷ்ணன், ரோஜா போன்ற நடிகைகள் எல்லாம் கிளாமராக நடித்தவர்கள்தானே? அவர்களை எப்படி அம்மன் வேடத்தில் ஒத்துக்கறீங்க?'' என்று மடக்கினோம்.



• தனலட்சுமி

"அது வந்து, அது வந்து'' என்று இரண்டு முறை இழுத்துவிட்டு "தப்புதான்'' என்று ஒப்புக் கொண்டார்.

பிளஸ்டு வரை படித்திருக்கும் கவிதாவின் பார்வை வேறு மாதிரி இருக்கிறது. "கிராபிக்ஸ் காட்சிகள் ரொம்ப நல்லா இருக்குன்னு பக்கத்துவீட்டு அக்கா சொன்னாங்க. அதான் அம்மாவோடு படத்துக்கு வந்தோம். இதுமாதிரி பக்தி படங்கள்லே நல்ல விஷயங்கள் இருந்தா அதை ஒத்துக்கறது தப்பில்லை. இப்போ இதே படத்துல, நவரத்தின ராசிக் கற்கள், வாஸ்து சாஸ்திரம் பற்றியெல்லாம் கிண்டல் அடிச்சுருக்காங்க. மற்றபடி பக்தியான விஷயங்கள் படத்துல நிறைய இருக்கு. இதையெல்லாம் சீரியசாக எடுத்துக்கிற ஏழை ஜனங்க நிறைய இருக்காங்கன்னு தியேட்டரிலே சாமியாடுறதைப் பார்த்தாலே தெரியுதே'' என்றார்.

தியேட்டர் மேனேஜர் சோமசுந்தரம் சொல்கிறார். "இங்கே பகல்காட்சி 'புரட்சிக்காரன்' போட்டிருக்கோம். அது சாமி இல்லேன்னு சொல்ற படம். மற்ற மூணு காட்சியும் பாளையத்து அம்மன். இரண்டு படத்தையும் ரசிகர்கள் பார்க்கிறாங்க. ஆனா லோக்கல் ஆடியன்ஸ் அதிகம் வர்ற தியேட்டர்களுக்குத்தான் பக்திப் படங்கள் கைகொடுக்குது. காரணம் இங்கே டிக்கெட் விலை குறைவு. அதே மாதிரி பி, சி, சென்டர்களிலும் தியேட்டர்களைக் காப்பாத்துற படங்களிலே பக்தி படம் முக்கியமானது. இப்போ பக்திப் படங்களுக்கு ஆதரவு கொஞ்சம் அதிகமா இருக்கிறதுக்குக் காரணம் கிராபிக்ஸ்தான். முன்னாடி இருந்த ஆப்டிகல் முறை காட்சிகளுக்குச் செலவு அதிகம். இப்போ குறைந்த செலவில், ரொம்ப இயற்கையாக காட்சிக்குக் காட்சி கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் வைக்க முடியுது. அக்டோபர் தொடங்கி ஜனவரி வரைக்கும் மாலை போடுற சீசன்கிறதாலே நல்ல கூட்டம் வரும்.

"பக்திப் படங்கள் அதிகமா எடுக்கிறதுக்கு குறைந்த பட்ஜெட்டும் ஒரு காரணம். ஹீரோ தேவையில்லை. அம்மன் கேரக்டருக்கு மார்க்கெட் போன ஹீரோயின் கிடைச்சாலே போதும்'' என்கிறார்.

அதிரடியாக டாபிகல் படமெடுக்கும் ஆர்.கே. செல்வமணி போன்றவர்களும் அம்மன் படம் எடுக்க வந்திருப்பதற்கு இதுதான் காரணமோ?

- **சக்கரத்தாழ்வார்**

படங்கள் : **வெங்கடேஷ்**



“கேண்டிப்பா அந்த லெட்டர் உனக்குத்தான்... நீதான் மக்கு. மரமண்டை; நீயா எதுவும் ‘ப்ரொஸீட்’ பண்ணாததால, அவனே தன் மனசுல இருக்கறதைச் சொல்லிட்டான்.”

கேதாரி சொல்ல, ப்ரீதி சிலையாய் நிற்கிறாள். அவள் அறிந்தவரையில, அஜய், வெகு யதார்த்தமானவன். இதை, எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவள் கவனித்திருக்கிறாள். ‘ஏதுடா’ இப்படிச் சொல்கிறோமே, கேட்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்றெல்லாம் யோசிக்க மாட்டான். சொல்வதைச் சொல்லிவிட்டு, இவள் பக்கம் திரும்பி, ‘நான் என்ன தப்பாச் சொல்லிட்டேன்.. மனசுல பட்டதைத்தானே சொன்னேன்,’ என்று இயல்பாகக் கேட்பான்.

இவளிடமே இதுபோல எத்தனையோ முறை கூறியிருக்கிறான்.

“ப்ரீதி, இந்த உன்னிமேரிகிட்ட சொல்லி அவனோட லிப்ஸ்டிக் ஷேடை மாத்தச் சொல்லேன். கிட்ட பார்க்கறச்சே பயமா இருக்கு...”

“நல்லா இருக்கு, இதப்போய் நான்

அனுராதா ரமணன்

சொல்ல முடியுமா? இதெல்லாம் அவங்க பர்ஸனல் மேட்டர். நாம தலையிட முடியாது.''

"எது பர்ஸனல் மேட்டர். உன்னிமேரிக்கு அந்தக் கலர் லிப்ஸ்டிக் பிடிச்சிருந்தா, விட்டுல போட்டுக்கட்டும். ஆபீஸ்ல, ரிசப்ஷன் ஹால்ல, இந்தக் கலர்ல ஸ்நோஸம் போட்டா, இந்தக் கலர்ல ஸ்க்ரீன்ஸ் போடணும். தரையில பதிக்கற ஸ்பார்டக் அதுக்கு பொருத்தமா இருக்கணும். மேஜை, நாற்காலியோட கலர் இப்படித்தான் இருக்கணும். அப்பத்தான் வரவங்களுக்கு ஒரு ரம்யமான சூழ்நிலையை உண்டாக்கும், அப்படீன்னு நாம தீர்மானிக்கறதில்லையா? இதுவே உன் வீட்டு ரிசப்ஷன் ஹால் உனக்குப் பிடிச்ச மாதிரி இருக்கலாம். ஹாலுக்கு நடுவுல நீ ஒரு பெரிய வெந்நீர் அண்டாவையே கொண்டு வைக்கலாம். யாரும் வந்து எதுவும் சொல்ல முடியாது. அப்படித்தான் வேலைக்கு வர்றவங்களுடைய உடையும், அலங்காரமும். அது கௌரவமாக இருக்கணும். பொருத்தமாக இருக்கணும். உனக்குச்



இனிமேல் ஆரம்பம்

சொல்லத் தயக்கமா இருந்தாச் சொல்லு, நான் சொல்றேன்."

– இப்படி கிளப்பி விடுவான். அது போலவே சீனிவாசராகவனிடம், அலுவலக நேரத்தில் வெற்றிலை பாக்கு போடக் கூடாது என்றும், கேஷியர் துரைசாமியிடம், முழுக்கைச் சட்டை போட்டு வர வேண்டும் என்றும், உஷாவிடம் தொலைபேசியில் பேசும் பொழுது இன்னும் கொஞ்சம் குரலில் மென்மையும், பதவிசும் வேண்டும் என்றும், சாஃப்ட்வேர் அனலிஸ்ட் பிரபாவிடம் மத்தியானம் லஞ்சுக்குக் கொண்டு வரும் மசாலா அயிட்டங்களை கம்ப்யூட்டர் அறைக்குள் உட்கார்ந்து சாப்பிட வேண்டாம் என்றும் நேரிடையாகவே சொல்லியிருக்கிறான்.

ஆதலால், 'உன்னை நான் காதலிக்கிறேன்' என்று சொல்ல அஜய் கூச்சப்படுவான் என்று ப்ரீதிக்கு தோன்றவில்லை. இதை அவள் கேதாரியிடம் சொன்ன போது, காதலில் கரை கண்ட அம்பிகாபதியின் ஒன்றுவிட்ட கொள்ளுப் பேரன் போல குதிக்கிறார்.

"சரிதான் போ... எதைத்தான் முகத்துக்கு நேரா சொல்றதுன்னு ஒரு விவஸ்தை வேண்டாமா... ஒண்ணுமே இல்லை, நேத்திக்கு நடந்த பிறந்தநாள் விழாவுல ஈஸ்வரனோட சம்பந்தி – இந்தக் கம்பெனியோட பாஸ் – பாதாம்கீர் பிரமாதம், பிரமாதம்னு... ஐந்தாறு தடவை சொல்லிட்டார். நானும் அவரோட மனசறிஞ்சு என் கையாலேயே நாலு தம்ளர் பாதாம்கீர் கொடுத்தேன். அவரோ பெரிய மனுஷர், இன்னொரு தம்ளர் பாதாம்கீர் வேணும்னு நேரிடையா சொன்னா நாம, வெள்ளிக் குடத்துலயே கொண்டு வச்சுட மாட்டோமோ... கேக்கறதுக்கு அவருக்குக் கூச்சம். புத்தி சாலியா இருக்கறவா இதையெல்லாம் விரல் சொடுக்கற நேரத்துல புரிஞ்சுண்டு செயல்படணும்."

– இப்படிச் சொன்னவர், மகளை 'தர தர'வென இழுத்துப் போய், தன்னெதிரில்

சோபாவில் உட்கார வைத்துக் கொண்டு, எல்.கே.ஜி. குழந்தைக்குச் சொல்லித் தருவதை போல சொல்லித் தருகிறார்.

"நீ என்ன பண்றே... நாளைக்கு ஆபீசுக்குப் போனவுடனே, அவன் எங்கே எந்த மீட்டிங்ல இருந்தாலும் செல்லுலார்ல கூப்பிடறே. கூப்பிட்டு, மிஸ்டர் அஜய், நீங்க கொடுத்த லெட்டர்ஸுக்கு நடுவுல ஒரு பேப்பர்ல 'அன்புள்ள கண்ணம்மாவுக்கு' அப்படீன்னு ஆரம்பிச்ச ஒரு லெட்டர் இருக்கே... அடிச்சு, திருத்தி, ஏகப்பட்ட குளறுபடியா இருக்கு அந்த லெட்டர். நான் அதை எடிட் பண்ணி எந்த அட்ரஸுக்கு அனுப்பணும்? தபால்லயா, கூரியர்லயா, அல்லது ஈமெயில்ல அனுப்பவா? – அப்படீன்னு கேளு. அப்போ அவனே சொல்லுவான்."

– இப்படிச் சொன்ன கேதாரி, ஒரு முறைக்கு பலமுறை இந்தக் கடிதத்தை வாசித்து பார்க்கிறார். ப்ரீதி, அவரைச் செல்லமாய்த் தலையில் குட்டி அதட்டினாள்.

"சாதாரணமா, ஒருத்தருக்கு வந்த லெட்டரையே படிக்கக் கூடாது. இது உங்க பொண்ணுக்குத்தான் வந்ததா இல்லை வேற யாருக்கானும் வந்ததான்னு தெரியாது. இதைப் போய் எத்தனை தடவை படிப்பேள்? வயசுக்கு ஏத்தபடி நடந்துக்கோங்கோ..."

"அம்மாடி... உடம்புல பொட்டுத் துணி கூட இல்லாம சின்ன குழந்தை தவழ்ந்து வர அழகை... ஒரு பெண் நிலைப்படியில சாய்ஞ்சு நிக்கற அழகை... கேசத்தை விரிச்சுப் போட்டு ஒரு யுவதி நிலைக் கண்ணாடியைப் பார்த்து வகிடு எடுக்கற அழகை... அதே போல குளிச்சு முடிச்சு ஈரக்கூந்தல் பிரிப்பிரியா தொங்க, இடுப்புல குடத்தோட ஆத்துலேர்ந்து தண்ணி எடுத்து வரும் அழகை பார்க்கிற எவனும் மனசை பறிகொடுத்து மறுபடி மறுபடி பார்ப்பான்னு காளிதாஸன் சொல்லியிருக்கான்... அவன், இன்னைக்கு இருந்திருந்தா ஒரு வாலிபன் ஒரு வாலிபிக்கு பயத்தோட, படபடப்போட நாலு வரி எழுதி, அதுல மூணு வரியை அடிச்சு, தன் மனசுல இருக்கற காதல கடிதமா வெளிப்படுத்தறான் பாரு. அதுவும் ஒரு அழகுதான். அதைத் திரும்பத் திரும்ப படிக்கறது இருக்கு பாரு, அதுவும் ஒரு சுகம் தான் – அப்படீன்னு சேர்த்திருப்பான்."

"போங்கப்பா..."

– இப்படிச் சொல்லி, அவர் கையில் இருந்த கடிதத்தை 'வெடுக்'கென்று பிடுங்கிக் கொண்டு தனது அறைக்குள் போய்ப் புகுந்து கொண்ட மகளை, இமைக்காமல் பார்த்தார் கேதாரி.

மனசுக்கு அந்தக் கணமே, மகளைப் புத்தாடை உடுத்தி, மாலையும், கழுத்துமாய் மணவறைக்கு அனுப்புவது போன்ற பிரமை.

ப்ரீதி, இன்னவென்று சொல்ல முடியாத அவஸ்தையிலிருந்தாள். ஏதோ கனவுலகத்தில் மிதந்து கொண்டிருப்பது போல, ஓரிடத்தில் நிற்காமல் நடந்து கொண்டிருந்தாள்.

சீனிவாச ராகவன் அவளிடம் அக்கறையாகக் கேட்டார்.

"ஏம்மா, கண்ணெல்லாம் சிவந்திருக்கு. ராத்திரி முழுக்க தூங்கலையா?" அவள் இந்தக் கேள்விக்கு சரியான பதிலைச் சொல்லாவிட்டாலும் முகத்தில் பரவிக் கிடந்த நாணப் பூச்சே பதிலளிப்பது போல...

அவள் அவரிடமிருந்து நழுவி, உஷாவிடம் போய் நின்றாள். "மிஸ்டர் அஜய் எங்கிருந்தாவது போன் பண்ணினாரா என்ன?"

"பார்க் ஷெராடன்ல ஒரு மீட்டிங்ல இருக்கறதா ஃபோன் வந்தது. லஞ்ச் டயத்துல உங்க கூட பேசறதாச் சொன்னார்."

ப்ரீதி, முள் மேல் நின்றாள். எந்த வேலையை எடுத்தாலும் ஏதாவது ஒரு தப்பு செய்தாள். உன்னிமேரி கூட அவளருகில் வந்து, 'உடம்பு சரியில்லையா என்ன' என்று நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

சீனிவாசராகவன், ஒரு மேஜையிலிருந்து இன்னொரு மேஜைக்கு நகர்ந்து கொண்டே, அடித் தொண்டையில், 'பாலும் கசந்ததடி



"எங்க வீட்ல நான் பெரியவளா, என்னோட மாமியார் பெரியவளான்னே தெரியாம ஒரே குழப்பமா இருக்கு!"

"ஏன்?"

"எங்களோட ஒவ்வொரு சண்டையும் டிராவுல முடிஞ்சுடுது!

– கொங்கணாபுரம் வே. செந்தில்

சலியே படுக்கை நொந்ததடி' என்று கர்ண கடூரமாய் முணுமுணுத்தார். துரைசாமியைப் பார்த்துக் கண்சிமிட்டினார்.

மதியம், உணவு இடைவேளையின் பொழுது ப்ரீதி எதிர்பார்த்தபடியே, அஜய் யிடமிருந்து போன்...

அவன் இட்ட கட்டளைகள் எல்லா வற்றையும் உன்னிப்பாய்க் கேட்டுக் கொள் கிறாள் ப்ரீதி. ஜெர்மனிக்கு அனுப்ப வேண் டிய பார்சல், திருச்சியில் இருக்கும் ஞான சம்பந்தம் என்பவருக்கு அனுப்ப வேண்டிய கூரியர்... அலுவலகத்தின் தண்ணீர்த் தொட்டி கசிவைத் தடுப்பதற்காக ஆளை வரச் சொல்லி பழுதுபார்க்க வேண்டிய அவசியம், முதல் நாள் வந்து போன அப் பாவின் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் நன்றி நவின்று கடிதங்கள்; தற்போது இந்தியா வந்திருக்கும் இந்த நிறுவனத்தின் வெளிநாட்டு அதிகாரிகள் சுற்றுலா போவ தற்கு கார் வசதி ஏற்பாடு செய்து தருவது.... இப்படிப் பல விஷயங்களுக்குப் பிறகு நிதானமாய்க் கேட்டான்.

"ப்ரீதி... அந்த லெட்டரையெல்லாம் அனுப்பிட்டியா?"

"ம்... அந்த ஒரே ஒரு லெட்டரைத் தவிர..."

"எது...?"

"அதான், அட்ரஸே இல்லாம கண்ணம் மான்னு ஆரம்பிச்சு..."

எதிர்முனையில், சின்னதாய் திகைப்பு. பின் 'கடகட'வெனச் சிரிப்பு...

"கடவுளே... அந்த லெட்டர் உங்கிட்ட மாட்டிடுச்சா... என் டேபிள்ல வச்சுடு. நேரே ஈமெயில்லேயே அனுப்பியிருப்பேன். ஆனா வார்த்தைகளை எப்படிப் போடறதுன்னு தெரியாத சங்கடம்... அதான்..."

ப்ரீதியின் முகத்தில் இன்னும் கொஞ்சம் சிவப்பு. அவள் குரலில் வீணையின் மீட் டல்.


"ஸோவாட்? ஒருவிதமா உங்க மனசுல இருக்கறதைச் சொல்லியிருக்கீங்க. நான் வேணுமானா எடிட் பண்ணி அனுப்பிட றேன். மெயில் அட்ரஸ் சொன்னா போதும்."

"அய்யோ... வேணாம்... நானே அனுப் பிடறேன்."

அவன் சிரிக்க, அவள் குழம்புகிறாள்.

'விஷயத்ததான் ஒருவிதமா சொல்லி யாச்சே, அப்புறம் மெயில் எதுக்கு... என்ன சம்பிரதாயம்... ஒருவேளை அந்த லெட்டர் எனக்கில்லையா?' குப்பென அவள் தலை சூடாவது போல..

(தொடரும்)



''பல பேர் சாதியின் பெயரில் கட்சி ஆரம்பிக்கிறாங்க... ஆனா நம்ம தலைவர் வித்தியாசமானவர்...''

''எப்படி...?''

''புதுசா ஒரு சாதியே ஆரம்பிக்கிறாராம்!''

– சரோஜினி ஜெயச்சந்திரன்



''என் மனைவியும் மகனும் சீரியல் பார்க்கணும்னாங்க; நானும் என் பையனும் கிரிக்கெட் மாட்ச்தான் பார்க்கணும்னு சொன் னோம்.''

''சரி... சீரியல் நல்லா இருந்துச்சா...?''



''கஷ்டப்பட்டு சம்பாதிச்சதையெல்லாம் இப்படி ஈஸியா அள்ளிக்கிட்டுப் போறி யேப்பா...?''

''எல்லா தொகையும் எனக்குதான்னு நினைச்சிடாதீங்க சார். இதுல பாதிக்குமேல மாமூல் போயிடும்!''

– சீர்காழி வி. ரேவதி



சுஷ்மிதா உலக அழகியா? நம்பமுடியவில்லை!

— சத்யா சரண்

சென்னையில் நடந்த கூந்தல் அலங்காரப் போட்டிக்கு ஃபெமினா பத்திரிகை ஆசிரியர் சத்யா சரண் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். இவரும் கூந்தல் அழகி என்பதால் நல்ல பொருத்தம்!

சத்யா சரண் பிறந்தது சென்னையில். அப்பாவுக்கு எல்.ஐ.சி.யில் உத்தியோகம் என்பதால், கௌஹாத்தி வரை பல ஊர்களில் படிக்க வேண்டிய சூழ்நிலை.

“ஹதாவதா’ என்ற பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தேன். குழந்தைகளுக்கான நாலு பக்க இணைப்புக்கு நான்தான் முழுப் பொறுப்பு. வாரம் முழுக்க, நானே ஓயாமல் ஒழியாமல், பல்வேறு புனை பெயர்களிலும் பல்வேறு விஷயங்களை எழுதி, பக்கங்களை நிரப்புவேன். ஆரம்பக் கட்டத்தில் ரொம்ப சிரமப்பட்டாலும், பின்னர் ரொம்பப் பிடித்து விட்டது” என்று சிரித்தார்.

ஃப்ரீலான்ஸராக பெமினா இதழுக்கு எழுத ஆரம்பித்து நிருபராகி, இப்போது சத்யா சரண் அதன் ஆசிரியர். இருபதாண்டு கால ஃபெமீனா அனுபவத்தில் மறக்க முடியாத விஷயம் சுஷ்மிதா சென் உலக அழகியாகத் தேர்வானதுதானாம்.

“அப்போது கோவாவில், ஒரு மாடல் அழகியை வைத்துப் பிரத்யேக புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தோம். என் கணவரிடமிருந்து டெலிபோன். ‘விஷயம் தெரியுமா? சுஷ்மிதா, உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாள்’ என்றார். என் கணவரைத் தவிர, வேறு யார் இந்தத் தகவலைச் சொல்லியிருந்தாலும், நான் நம்பியிருக்கவே மாட்டேன். உடனே ஓடிச் சென்று, குன்றின் மீது நின்று கொண்டிருந்த மாடல் மற்றும் போட்டோகிராபருக்கு உரத்த குரலில், ரொம்ப எமோஷனலாக விஷயத்தைச் சொல்ல, அவர்களுக்கு நான் என்ன சொல்கிறேன் என்று புரியாமல், எனக்கு ஏதோ ஆகிவிட்டது என நினைத்து, குன்றின் மேலிருந்து பதற்றத்தோடு கடகடவென்று ஓடி வந்தது நல்ல காமெடி. இன்னும் ஞாபகமிருக்கிறது.”

“இந்தியப் பெண்கள், அதிக அளவில் உலக அழகிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதன் பின்னணி என்ன?”

“இந்திய அழகிக்கான போட்டியில் பங்கேற்க வரும் பெண்களே, தங்களை நன்றாகத் தயார்ப்படுத்திக் கொண்டுதான் வருகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அழகிக்குப் பலவிதமான பயிற்சிகளை நாங்கள் அளிக்கிறோம். இன்றைய இந்தியாவின் இளம்பெண்களுக்குத் தன்னம்பிக்கை அதிகமாக உள்ளது என்பதும் முக்கியமான ஒரு காரணம். அழகு, அறிவு, தன்னம்பிக்கை, சமயோஜிதம், முறையான பயிற்சி என்று எல்லாம் சேர்ந்துதான், உலக அளவில அங்கீகாரம் பெற்றுத் தருகின்றன.”



• ப்ரியங்கா சோப்ரா

"மேற்கத்திய நாடுகள், தங்கள் அழகு சாதனப் பொருட்களை இந்தியாவில் விற்பதற்கான ஒரு தந்திரம்தான், இந்தியப் பெண்களை, உலக அழகிகளாகத் தேர்ந்தெடுப்பது என்கிறார்களே!"

பதிகளை, விலை கொடுத்து வாங்கி, இந்தியப் பெண்களைத் தேர்ந்தெடுக்கச் செய்ய முடியும் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. வியாபாரம்தான் உன் நோக்கம் என்றால், இந்தியாவை விட, சீனா பெரிய மார்க்கெட் ஆயிற்றே! ஆனால் சீனப் பெண்கள், உலக அழகிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லையே!"

சத்யா சரணின் உயரம் ஐந்து அடி நாலு அங்குலம்; அவரது தலைமுடியின் நீளமும் அவ்வளவே!

"என் அருகில் நிற்கிற இரண்டு பேர், தங்களுக்குள் ஏதோ ரகசியமாகப் பேசிக் கொள்கிறார்கள் என்றால், அது அநேகமாக என் தலைமுடி பற்றித்தான் இருக்கும். சிலர் என்னிடம் நேரடியாகவே கேட்டு விடுவார்கள். நான், "நீங்கள் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சில சமயங்களில் சொல்வேன். இன்னும் சில சமயங்களில், பதிலே சொல்ல மாட்டேன். எப்போதாவது, "இது நிஜ முடி இல்லை! 'விக்' தான்; கழற்றிக் கொடுக்கட்டுமா?" என்று ரீல் விடுவேன். அப்போது, அவர்கள் முகத்தில், "பார்த்தாயா! நம் சந்தேகம் சரிதான்" என்பது போல நூறு வாட் பல்ப் பிரகாசம் ஏற்படும். நான் எல்லாவற்றையும் ரசிப்பேன்."

"கூந்தலைப் பராமரிக்க என்ன செய்கிறீர்கள்?"

"வாரம் ஒரு முறை தலைக்குக் குளிப்பேன். கன்னாபின்னாவென்று எதையும் பயன்படுத்த மாட்டேன். நன்கு அடர்த்தியாக இருந்த முடி, சமீப காலமாக கொட்டி, இப்போது மெலிந்து விட்டது."

"உங்கள் பெண்ணுக்கும் உங்களைப் போலவே நீளமான முடி இருக்கிறதா?"

"ஸாரி! எனக்குப் பெண்ணே இல்லை!"

— எஸ். சந்திரமௌலி

படம் : 'தேர்ட் ஐ' பிரகாஷ்

வேத வைபவம்

“குடும்ப நலனுக்காக வீட்டில் ஹோமம் செய்வோம். அந்தச் செலவும் நமது பட்ஜெட்டுக்குள் கட்டுப்பட்டு கையை கடிக்காமல் பார்த்துக்கொள்வோம். ஆனால் உலக மக்களின் நன்மைக்காக, அனைத்து ஜீவ ராசிகளின் க்ஷேமத்துக்காக 42 நாள் வேத பாராயணம் மற்றும் மஹாஹோம உத்ஸவத்தை முப்பது லட்சம் ரூபாய்ச் செலவில் நடத்திக் கொண்டிருக்கும்போது, ஆன்மீக அன்பர்கள் அதில் கலந்துகொண்டு அருள் பெறாமே என்றார் ஸ்ரீசத்குரு வேதபாராயண ட்ரஸ்டின் செயலர் விஜயபானு கனபாடிகள்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி மடாதிபதிகளின் அநுக்ரஹத்துடன், ஸ்ரீ ஜெயேந்திரரின் உத்தரவின்படி உலக அமைதிக்காக



வேத பாராயணங்கள், ஹோமங்கள் நடத்தி வரும் இந்த அறக்கட்டளை கடந்த நவம்பர் பதினாறாம் தேதி தொடங்கி, டிசம்பர் இருபத்து ஏழாம் தேதிவரை இந்த மகா தெய்வீக காரியத்தை நடத்தி வருகிறது. மேற்கு மாம்பலம், ஈஸ்வரன் கோவில் தெருவில் மேட்லி சுரங்கப்பாதையின் முடிவில் எதிர்படும் ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கர மடத்தில் நடந்து வரும் இந்த வேத வைபவம் - நாற்பத்திரண்டு நாட்கள் நடப்பது பெரும் சிறப்பு.

வேத கனபாராயணத்தைப் பொழிந்து பக்தர்களின் நெஞ்சங்களை அருள் மழையால் நனைக்க வெளி மாநிலங்களில் இருந்தும் வேத உபாசகர்கள் வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

“வேதங்களுக்கு எல்லாம் மூத்த வேதமாகிய ரிக்வேதம் கனபாராயணம் செய்யப்பட்டு வருகிறது. இந்த வேதத்தில் மொத்தம் மூன்று கோடியே தொண்ணூற்று ஏழாயிரத்து இருநூற்று அறுபத்தைந்து அக்ஷரங்கள் உள்ளன. ஒவ்வொரு அக்ஷரமும் ஒரு பகவான் பெயராகும். எனவே இந்தப் பாராயணத்தைக் கேட்டு சரணம் செய்தால் தீய எண்ணங்கள் விலகி சகல நன்மைகளும் வந்து சேரும். குடும்பத்தில் ஆரோக்கியமும், செல்வமும் கொழிக்கும்”

“குறிப்பாக வேதங்களைப் பாராயணம் செய்யும் முறையில் ஜடா, மாலா, சிகா, ரேகா, த்வஜ, தண்ட, கன என்று சொல்லக்கூடிய ஒன்பது விதமான உச்சரிப்பு முறைகள் இருக்கின்றன. இதில் கன உச்சரிப்பு முறைதான் உத்தமமானது அதிக பலனை அள்ளி கொடுக்கக் கூடியது. எனவே ரிக்வேதம் முழுமையும் இங்கே கனமொழியில் உச்சரிக்கப் பட்டு வருவது. அதிக பலனை கொடுக்கும் என்று பிரார்த்திக்கிறோம். அதேபோல மஹாகணபதி ஹோமம் தொடங்கி ஸம்ஹிதா ஹோமம் வரை முப்பத்து ஏழு முக்கிய ஹோமங்களை நடத்தி வருகிறோம். இதில் மழைக்காக ஸ்ரீபர்ஜன்ய ஹோமம் வரை முப்பத்து ஏழு முக்கிய ஹோமங்களை நடத்தி வருகிறோம். இதில் மழைக்காக ஸ்ரீபர்ஜன்ய ஹோமம் மூன்று நாட்கள் நடக்கிறது” என்கிறார் விஜயபானு கனபாடிகள்.

வேதகன பாராயணம் காலை ஏழு மணி முதல் பகல் பதினொன்று முப்பது வரையும், பிற்பகல் மூன்று மணி முதல் ஐந்து வரையும், மாலை ஆறு மணி முதல் ஏழு வரையும் மூன்றுமுறை நடக்கிறது. ஹோமம் காலை ஏழு முதல் பகல் பதினொன்று முப்பது வரை செய்யப்படுகிறது. உபன்யாஸம், சங்கீதக் கச்சேரிகள் தினசரி மாலை ஏழு முதல் ஒன்பதுவரை.

இந்த அரிய வேதபாராயண கனபாராயண சம்பூர்த்தி ஹோம மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகளும், அருளுரை உபன்யாசம் நிகழ்த்துகிறார்.

— ஸ்ரீ சக்ரம்

படம்: ராஜன்

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்





ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ஹனுமத் ஜெயந்தி மஹோத்ஸவம்

ஸ்ரீ பக்த ஆஞ்ஜநேயர் ஏகதின லட்சார்ச்சனை

23.12.2000 முதல் 25.12.2000 வரை

நடைபெறும் இடம்: T.V.R. சுப்பு செட்டி வசந்த மண்டபம்,
எண் 14, மேற்கு சித்திரகுளம் தெரு, மயிலாப்பூர்.

23.12.2000 சனிக்கிழமை. **நவதானிய காப்பு கட்டணம் ரூ. 250/-** நவக்கிரகவிடை மற்றும் சனிஸ்வரவிடை விலகுவதற்கு இந்த உபயத்தில் கலந்து கொள்ளவும். (2 கிராம் வெள்ளி டாலர்)

24.12.2000 ஞாயிற்றுக்கிழமை **செந்தூரகாப்பு கட்டணம் ரூ. 250/-** தேஜஸ் உண்டாக, சத்ரு பயம் நீங்க கலந்து கொள்ளவும். 2 கிராம் வெள்ளி டாலர்.

ஹனுமத்ஜெயந்தி அன்று 25.12.2000 திங்கட்கிழமை. **விசேஷ வெண்ணெய் காப்பு. ரூ. 500/-** அஷ்ட ஐஸ்வர்யமும் உண்டாக கலந்து கொள்ளவும். (5 கிராம் வெள்ளி டாலர்)

வடை மாலை உபயம் ரூ. 100/- (20 வடை மற்றும் காப்பர் டாலர்)

லட்சார்சனை கட்டணம் ரூ. 60/- (காப்பர் டாலர்)


(குறிப்பு: அனைத்து உபயத்திற்கும் செந்தூரம் பிரசாதம் வழங்கப்படும்)

MO, DD அனுப்ப, நேரில் அணுக வேண்டிய முகவரி:

ஸ்ரீ சுதர்ஷன மஹா யக்ஞ கமிட்டி,
S. ஸ்ரீ ரங்கராஜபட்டாசாரியார்,
பழைய எண் 5, புதிய எண் 32.
கேசவப்பெருமாள் சன்னதி வீதி,
மைலாப்பூர், சென்னை – 600 004. போன்: 4610179

இங்ஙனம்

ஸ்ரீ சுதர்ஷன மஹா யக்ஞ கமிட்டி,
S. ஸ்ரீ ரங்கராஜபட்டாசாரியார்,
T. சம்பத்குமார், V. நந்தகுமார்,
M. பிரவின்குமார் T. சுதர்ஸன்



100% திருப்தி

நியாயமான விலையில் அற்புதமான வீட்டு மனை

கிருஷ்ணா நகர் (அரசு அங்கீகாரம் பெற்ற மனைகள் DTP/LPDM-16-74)
மேடவாக்கம் சென்னை – 601302 (வேளச்சேரி அருகில்)

சிறப்பு அம்சங்கள்

• மாநகருக்கு மிக அருகில் • கவர்னர் மாளிகையிலிருந்து 20 நிமிட பயணம் • அடையாறு, திருவான்மியூர், வேளச்சேரி , கிண்டி மற்றும் தாம்பரத்திலிருந்து ரயில் மற்றும் பஸ் வசதி
• நன்கு திட்டமிட்ட மனைப்பிரிவு, சுற்றிலும் வேலி • சுற்றிலும் நல்ல வீடுகள்
• 12′ ஆழத்தில் சுவையான நீர் • அருகாமையிலேயே நல்ல பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், கடைகள் போன்ற அனைத்து வசதிகள்
• சுத்தமான பத்திரம், நம்பகமான நிறுவனம் • 5 வருட மனை பாதுகாப்பு சேவை

சுந்தரம் ஹோம் பைனான்ஸ் லிட்
அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்திரங்கள்; நிதி உதவியும் உண்டு.

Tel : 4357721/31 Telefax : 4353183 Cell : 98400 44018 e-mail: blbestmail@vsnl.net
http://business.vsnl.com/blbestates

BLB Estates (P) Ltd.

S-3,"Ramana Flats" 27, Rathna Nagar, Off Anna Salai,
(Behind Apollo Cancer Hospital), Teynampet, Chennai - 18.

நன் மதிப்பில் முதலீடு.

மெகா சீரியல்களில் மகா தொல்லை தரும் நடிகைகளுக்காக ஒரு trouble shooting வழி வைத்திருக்கிறார்கள். ஒரு கார் விபத்து- வெடிகுண்டு- வெள்ளம் - பூகம்பம் - அவ்வளவுதான். அவர்கள் கதை முடிந்தது. (இதற்குத் தோதாக, அந்த நடிகர் - நடிகை இறந்து போவதாக ஆரம்பத்திலேயே ஒரு காட்சி எடுத்துத் தயாராக வைத்துக் கொள்கிறார்கள் என்றுகூட ஒரு பயங்கர வதந்தி.)

'சித்தி' தயாரிப்பாளர்கள் didn't bother that much.

அஜய் ரத்னம் வீட்டுக்குள் வருகிறார். அறையில் அவர் மனைவி பாடிக் கொண்டிருக்கிறாள். விஜி என்ற அந்தப் பாத்திரத்தில் (அது வரை) நடித்து வந்தவர் தீபா வெங்கட். அந்தப் பக்கம் திரும்பினாற்போல் உட்கார்ந்திருந்தவர் இந்தப் பக்கம் திரும்பி முகத்தைக் காட்டியதும் அதிர்ச்சி! அஜய் ரத்னத்துக்கு அல்ல. நமக்கு! அவர் தீபா வெங்கட் அல்ல. வேறொரு நடிகை.

'விஜி பாத்திரத்தில் இனிமேல் இவர் நடிப்பார்' என்று அந்தக் காட்சியின் மேலே இரண்டு வரி காட்டிவிட்டு, கையை

விஜி என்று இரண்டு பேர்

டெட்டால் போட்டுக் கழுவிக் கொண்டு போயே போய்விட்டார்கள்.

Euthanasia என்று வேறு எதையோ சொல்கிறார்கள். இதல்லவா அது!

அதே தினம் பார்த்த அசல் விஜியின் சோக முடிவு அநியாயப் பரிதாபம்.

கழுத்துக்குப் பக்கத்தில் கருகருனான நைலான் கயிறுகள் அவிழ்ந்து கிடக்க, மடங்கிய நாக்குப் பிதுங்கிய உதடுமாகக் கோழி கூவுது விஜி தரையில் கோரமாய்ப் படுக்க வைக்கப்பட்டிருக்க, அவர் தந்தை தலையில் மடார் மடாரென்று அறைந்துகொண்டு அழ - ஷோபா, படாபட், சில்க் ஸ்மிதா வரிசையில் விஜியும் சேர்ந்துவிட்டார்.

நடிகைகளின் வாழ்க்கையில் ஏன் இந்த அவலம்? Feelings of insecurity என்கிறார்கள். இருக்கட்டுமே? பாதுகாப்புத் தேடி, ஏற்கெனவே திருமணமானவர்களைத்தான் காதலிக்க வேண்டுமா? அதில் தோல்வி அடைய வேண்டுமா? தற்கொலைதான் நிவாரணம் என்ற முடிவுக்கு வர வேண்டுமா? மொத்த உலகத்தையும் வெறுக்க வேண்டுமா?

The man who kills a man, kills a man; the man who kills himself kills all men என்று ஜி.கே. செஸ்டர்ட்டன் சொன்னதில் அர்த்தம் உள்ளது.

பிறரால் காப்பியடிக்க முடியாத குரலும், பாந்தமான பார்வையும், சுறுசுறுப்பான உச்சரிப்பும் கொண்டவர் இந்த மூவரில் யார்?

A. சரத்குமார் B.அனுபம் கெர் C. அமிதாப்பச்சன்

C. அமிதாப்பச்சன். Sure? sure. Confident? confident. Definite? Definite. லாக்கர்தேன்? எஸ்.பில்குல் ஸஹி ஜவாப்.

உண்மைதான். இருந்தாலும் 'திருநெல்வேலி அல்வா எந்த ஊரிலிருந்து வருகிறது?' என்பது போன்ற அரிச்சுவடிக் கேள்விகளிலிருந்து விடுபட்டு, மெல்ல



• தீபா வெங்கட்

மெல்லத் தேறி வருகிறார் சரத்குமார் என்பதையும் சொல்ல வேண்டும். சற்றுத் தெளிவாகப் பேசவும் கொஞ்சம் சிரிக்கவும்கூடப் பழகிக் கொண்டிருக்கிறார்.

அனுபம் கெர்ரின் விஷயம் தனி. ஆயிரம், பத்தாயிரம், லட்சம், பத்து லட்சம் என்று சைபர் சைபராகச் சேர்த்து அவர் அள்ளி வீசும்போது ஆசையாகத்தான் இருக்கிறது கலந்து கொள்ள. இரண்டு பயமுறுத்தல். 1. அளவுக்கு மீறிய இந்திப் பேச்சு. 2. மனிஷா கொய்ராலாவின் முடி அலங்காரம். (ஆனால் ஜிம்பாப்வே ஒலாங்கோவின் சிகை அலங்காரத்துக்கு உறை போடக் காணாது. An absolute beauty அது.)

• விஜி



புன்சிரிப்பில் கடுமையான புன் சிரிப்பு என்று ஒன்று இருக்க முடியுமா? முடியுமென்றால் பழ. நெடுமாறனின் முகத்தில்தான் அதைப் பார்க்க முடியும். வெடிகுண்டுக் கருத்துக்களை அவர் வீசுவது இருதய ஆழத்திலிருந்தா அல்லது பல் இடுக்கிலிருந்தா என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் மறைத்து விடுகிறது அந்த அரைச் சிரிப்பு. ('சன்'னில் வீரபாண்டியனின் நேருக்கு நேர்!)



• சரத்குமார் படம்: ஸ்ரீஹரி

தமிழ்நாடு, ஆந்திரம், பஞ்சாப், வங்காளம் என்று தனித் தனிப் பகுதிகளாகத்தான் முன்பு இந்தியா இருந்தது என்றும், அவற்றையெல்லாம் ஒன்றிணைத்து இந்தியா என்கிற நாடாக ஆக்கியவன் வெள்ளைக்காரன்தான் என்றும் நெடுமாறன் சொன்னார். (அதுபோலப் பல நாடுகளாகப் பிரிக்கலாம் என்று மறைமுக யோசனை.) அது வெள்ளைக்காரன் செய்த நன்மை என்று நாமெல்லாம் நினைத்திருக்க, அது அவன் செய்த பாதகம் என்கிறார். அவரைச் சொல்லிக் குற்றமில்லை. He who rides a tiger is afraid to dismount.

இந்தப் பேட்டியில் ஒரு கண்ணாமூச்சி விளையாட்டும் இருந்தது. 'கர்னாடக, தமிழ் நாட்டுச் சிறைகளில் அப்பாவி தடா கைதிகள் அடைபட்டு வதை படுகிறார்கள். இவர்களைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்?' என்று நெடுமாறன் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார். 'நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களும் காவல் துறை அதிகாரிகளும் வீரப்பனால் கொலை செய்யப்பட்டார்களே, அதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?' என்று வீரபாண்டியன் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார். இவரும் அதற்குப் பதில் சொல்லவில்லை. அவரும் இதற்குப் பதில் சொல்லவில்லை. The game went on.

அவள் ஒரு குடும்பத் தலைவி in her forties. வளர்ந்த மகன்கள், மருமகன், பேரன், பேத்தி என்று வீடு நிறைந்த சூழ்நிலையில் கர்ப்பமாகிறாள். இந்த வயதில் தாயாவதா, நாலு பேர் சிரிப்பார்களே என்று மனம் நொந்து அழுதுகொண்டு அவள் படுத்திருக்க, வீட்டில் உள்ளவர்கள் ஆளாளுக்குப் பரிகாசம் செய்ய, குற்றமிழைத்த கணவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஒதுங்க, அவளுடைய மகன்களில் ஒருவன் தான் ஆறுதல் கூறுகிறான்: 'தாய்மை என்பது புனிதமானது, அம்மா. அது எல்லாருக்கும் கிடைக்கிற பாக்கியமில்லை.

வினோத்

இதிலென்ன அவமானம்? எழுந்திரு. அழாதே' என்று தேறுதல் சொல்கிறான். God could not be everywhere, therefore he made mothers என்பதை அறிந்தவன்.

ராஜ் டி.வி.யில் பார்த்த இந்த எபிஸோடில், முன்னே என்ன நடந்ததோ தெரியாது. பின்னே என்ன நடந்ததோ அதுவும் தெரியாது. நடுவே சிறிது பார்த்ததுதான். ஆனால் அதற்குள் எப்பேர்ப்பட்ட வித்தியாசமான, வேதனையான, விசித்திரமான உலகத்தைக் காண முடிந்துவிட்டது!

பிற்பாடு சொன்னார்கள் - ஜெயகாந்தனின் 'மௌனம் ஒரு பாஷை' என்ற கதையில் வரும் ஒரு கட்டம் அது என்று. கே. பாலசந்தரின் மைக்ரோ தொடரில் ஒரு பகுதியாம். ஆச்சரியமில்லை. அத்தகைய அற்புத நிமிடங்களை வழங்க வேறு யாரால் - யார்களால் - முடியும்!

சுமி சூப்பர்மார்க்கெட்

தீபாவளிக்கு ஆரம்பிச்சுக் கார்த்திகையோட நம்ம சகாப்தம் டுவுக்கு வயசு ஆறு வாரம்தான் ஆகுது. அதுக்குள்ள வந்திருக்கற லெட்டர்ஸ் எக்கச்சக்கம்.

ஆனா வி.விஜயராகவனோட இன்டலி



ஜன்ட்லி ஆங்க்லிசைஸ்ட் கவிதைகள் நீங்கலாக எந்த லெட்டர்லயும் சொல்லிக்கற மாதிரி சமாசாரம் இல்லியே! (வி.வி. சார், உங்க கவிதைக்கப்புறம் குறைந்த பட்சம் நாலு கவிதைகள்– மற்ற மன்ற உறுப்பினர்களுடையது – தேர்வாகி பிரசுரமானப்புறம்தான் திரும்பவும் உங்களுக்கு சான்ஸ் – அதுக்குள்ள சந்தன விரப்பன் சப்ஜெக்ட் பழசாயிடும்னு சொல்றீங்களா – டோன்ட் வொரி! இன்னொரு கடத்தல் டிராமா நடந்தாலும் நடக்கும்.

டிரான்ஸ்லேஷன்ல உள்ள கஷ்டங்களைச் சொன்னா, ஆங்கிலத்தின் வளமின்மையைச் சுட்டிக் காட்றேன்னு நினைச்சுக்கிட்டு சண்டைக்கு வந்திருக்கார் சென்னை – 90, ஈ. லக்ஷ்மணன். 'நம்பிக்கைன்ற ஒரு தமிழ்ச் சொல்லுக்கு இங்க்லிஷ்ல கான்ஃபிடன்ஸ், ஹோப், பிலீஃப், ஃபெய்த், டிரஸ்ட்னு எத்தனை வார்த்தை இருக்கு தெரியுமா...? – வித் டிஃபரன்ட் ஷேட்ஸ் ஆஃப் மீனிங்க்'ன்னு கொதிக்கறார்.

இங்க்லிஷ் லாங்குவேஜை போய் நம்ம காலம்ல குறை சொல்லுவோமா... புரிஞ்சுக்குங்க லக்ஷ்மணன் சார்.

மிஸ்டர் கொடுவேரி திரும்பவும் எழுதியிருக்கார். 'ஹார்ட் ஃபெல்ட் கிராடிட்யூட்' அப்படின்னு சகாப்தம் டு ஆரம்பிச்சப்போ நீ எழுதினது தப்பு இங்க்லீஷ் – இதைச் சுட்டிக்காட்டி என் முதல் லெட்டர்ல எழுதினதை நீ கன்வீனியன்ட்டா இக்னோர் பண்றியே சுமி... அடுக்குமா? தருமமா? நியாயம்தானா?'ன்னு...

சாதனையைத்

ஹார்ட்ஃபெல்ட் என்கிறதை இரங்கல் தெரிவிக்கத்தான் பயன்படுத்தணும்ன்றார். அந்தப் பிரயோகம் நன்றி தெரிவிக்க பெரியவங்க சொல்லக் கேட்டு எழுதினதுதான். அதே மாதிரிதான் 'முதற் கண்' என்கிற வொர்டும் - மேடையில ரொம்ப பெரியவங்க பேசக் கேட்டு நமக்கு வந்து ஒட்டிக்கிட்ட வார்த்தை!

ஓகே! நம்மள மாதிரி சின்னவங்களுக்குள்ள நடக்கற கடிதப் பரிமாற்றங்கள்ள வர சில்லறை சர்ச்சைகளை விட்டுட்டுப் பெரியவங்க கரஸ்பான்டன்ஸ் பக்கம் திரும்பிப் பார்ப்போமா?

'கல்கி கடிதங்கள்' (வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை – 17) என்கிற புக்கைப் படிச்சேன்.

கல்கி கிருஷ்ணமூர்த்தி, டி.கே.சி, ராஜாஜின்ற மூணு நண்பர்கள் ஒருத்தருக்கொருத்தர் எழுதிக்கிட்ட லெட்டர்ஸோட தொகுப்பு.

கல்கி எழுதினதும் கல்கிக்கு எழுதப்பட்டதுமான லெட்டர்ஸ் தவிர ராஜாஜியும் டி.கே.சியும் ஒருத்தருக்கொருத்தர் எழுதிக்கிட்டதையும் இதுல ஏன் சேர்த்தாங்கன்னு யோசிச்சுக்கிட்டே படிக்க ஆரம்பிச்சேன். ஆனா இந்த லெட்டர்ஸோட ஸ்பெஷாலிடி என்னன்னா மூணு பேர்ல யார், யாருக்கு எழுதினாலும் அதுல மூணாவது நபர் பத்தி ஏதாவது ஒரு ரெஃபரன்ஸ் எங்கயாவது வந்துடுது. இந்த அளவுக்கு நெருக்கமா மூணு நண்பர்கள் இருந்திருப்பாங்களான்றது சந்தேகம்தான்.

கல்கியும் டி.கே.சியும் அன்பைப் பொழிஞ்சு குடும்ப நலம் விசாரிச்சுக்கறது எனக்கு அதிசயமாப் படலை. ஆனா,



ரண்டும் கடிதக் கலை!

ராஜாஜி மாதிரி ஒரு டிஸ்டில்ட் இன்டலெக்சுவல் 'எல்லோருக்கும் என் சொல்லொணாத அன்பு', 'உங்களையெல்லாம் விட்டுப் பிரிவது கஷ்டமாகத்தான் இருந்தது', 'எல்லோருடைய அன்பும் மழை போல் பொழிந்து என் உள்ளத்தைக் கரைத்து விட்டது' போன்ற வாக்கியங்களை யூஸ் பண்ணி எழுதியிருக்கார்.

எப்பேர்ப்பட்ட ஞானியானாலும் அன்புனால மூவ் ஆயிடறதைப் பார்க்கறோம். இந்தக் குவாலிடி விவேகானந்தரோட லெட்டர்ஸ்லயும் கவனிக்கலாம்.

இங்கதான் கரஸ்பான்டன்ஸ் என்கிற கடிதக் கலையோட இம்பார்டன்ஸ் பத்தி நமக்குப் புரியுது. ஆழமான நட்பைப் பரிமாற, ஆரோக்கியமான கரஸ்பான்டன்ஸ் உகந்த வழி. சாதனைகளைத் தூண்டற சக்தி லெட்டர்ஸுக்கு உண்டு. ஏன்னா முகத்துக்கு நேர பேசறதைக் காட்டிலும் எழுதறபோது சத்தியம் வேகமாவும் பவர்ஃபுல்லாவும் வெளிப்படுது. இதுக்கு சாட்சியா பல லெட்டர்ஸ் 'கல்கி கடிதங்கள்' புக்ல இருக்கு! இன்னிக்கு கரஸ்பான்டஸ் வால்யூ எத்தனை பேருக்கு புரிஞ்சுருக்குன்றது தெரியலை. அதைப் புரிஞ்சுக்கிட்டு செயல்படற ஒரு நபர் டெய்லி முரசொலில உடன்பிறப்புக்கு லெட்டர் எழுதற தமிழக முதல்வர்!

'எமோஷனல் பாங்க்' ஒண்ணு ஒவ்வொரு மனுஷனுக்குள்ளேயும் இருக்கு. அதுல தொடர்ந்து டெபாஸிட் பண்ணிக்கிட்டேயிருந்தாதான் நெருக்கமான உறவு வளமாகும் – அர்த்தமுள்ளதா வளரும்னு எழுதியிருக்கார் ஸ்டீஃபன் கவின்ற தற்கால மானேஜ்மண்ட் எக்ஸ்பர்ட். ஸ்டீஃபன் கவி பிறக்கறதுக்கு முன்னாடியே இதைக் கடைப்பிடிச்சுருக்கார் கல்கி.

ஊட்டியில ராமகிருஷ்ண மடத்துல போய்த் தங்கினப்போ தன் இரண்டு வயசு மகள் ஆனந்திக்கு இரண்டு நாளைக்கு ஒரு கடிதம் வீதம் எழுதியிருக்கார்! எல்லாமே குழந்தைக்குச் சொல்லக் கூடிய, சொல்ல வேண்டிய விஷயம் – ஆனா பாப்பா மொழி கிடையாது; நல்ல தமிழ்! (அதைப் படிச்சுமா உனக்கு இன்ஸ்பிரேஷன் வரலை சுமின்னு கேட்பீங்களே, தெரியும்!) குழந்தையால படிக்க முடியுமா? புரியுமான்னெல்லாம் யோசிக்காம ரொம்ப ஸ்பான்டேனியஸா எழுதியிருக்கற ஒவ்வொரு லெட்டரும் ஒரு அழகான கவிதை.

எல்லாத்தையும்விட அதிசயமான கடிதம் விட்டலாபுரம் வேங்கடாச்சாரின்றவருக்குக் கல்கி எழுதியிருக்கறதுதான். 'அன்றிலைப் போல உங்க வரவுக்குக் காத்திருந்தேன்'னு எழுதறார். நண்பர் வராததால குற்றாலத்து அருவி நீரும் நிலவொளியும் வீணாய்ப் போகுதுன்றார். கவிதைகளைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியும் பேசறதுக்கு ஏற்ற நண்பர்கள் கிடைக்கறது லைஃப்ல பெரிய பிளெஸ்ஸிங்ன்ற உணர்வு அந்த லெட்டரைப் படிக்கும்போதே கிடைக்குது.

புக் ரொம்ப நல்லா வந்திருக்கு. நண்பர்கள் மூணு பேரும் எவ்வளவு அதிர்ஷ்டம் பண்ணாங்களோ அவ்வளவுக்கு இந்த புக்கோட தொகுப்பாளர் சுப்ரபாலனும் லக்கின்றது என் அபிப்ராயம்.

அத்தனை லெட்டர்ஸையும் தேடிக் கண்டுபிடிச்சு படிச்சு வரிசைப்படுத்தறப்போ, கல்கி காலத்து பெரிய கான்வாஸை ரொம்ப நெருங்கி நின்னு பார்த்து, துளித்துளியா அனுபவிக்கற முதல் சந்தர்ப்பம் அவருக்குத்தானே கிடைச்சுது. இப்போ புக்கா படிக்கறவங்க எல்லாம் அதே அனுபவத்தைப் பெறுவாங்க. பட் ஹீ வாஸ் தி ஃபர்ஸ்ட்!

— சுமி

KALKI SHOPPING PAGE

ஸ்ரீஆனந்தவல்லி ஸமேத ஸ்ரீஅழகு சுந்தர வரதராஜப் பெருமாள் திருக்கோயில், ஆலப்பாக்கம் சாலவாக்கம் 603 107. காஞ்சீபுரம் ஜில்லா

விஜ்ஞாபநம்

செங்கல்பட்டுக்கு அடுத்த மையூர், அன்னாதூர், சாலவாக்கம் நடுவில் அமைந்துள்ள வடபுரம் என்கிற ஆலப்பாக்கம் சேக்ஷத்திரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அழகு சுந்தர வரதராஜப் பெருமாள் திருக்கோயில் மஹா ஸம்ப் ரோக்ஷணம் தை மாதம் 22ந் தேதி 4.2.2001 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 முதல் 11.00 மணிக்குள் நடைபெற நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

இத் திருக்கோயிலின் நித்ய ஆராதனைக்காக ஒரு நிரந்தர கமிட்டி நிதி ஏற்படுத்தி அதன் வருவாயிலிருந்து வரும் வட்டித் தொகை திருவாராதனை அர்ச்சகர்ஸம்பாவனை தக்ஷிணை முதலானவற்றைச் செலவு செய்ய ஆஸ்திகப் பிரபுக்களும் பக்தர்களும் கலந்து கொண்டு நிதி உதவி அளிக்க வேண்டுகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :
காசோலை (அ) டிராப்ட்
SRI ASVAPNA SABHA
48/2, (N.97) Arunachala Street, Chintadripet, Chennal - 600 002.



'தினமலர்' வாரமலரில் 'எம்.ஜி.ஆர். நினைவுகள்' 44 வார தொடர் கட்டுரைகள் எழுதிய, அவ்வப்போது வார மலரிலும் மற்றும் பல இதழ்களிலும் கட்டுரைகள் எழுதி, லட்சக்கணக்கான வாசகர்களின் பாராட்டைப் பெற்ற பத்திரிகையாளர்

எஸ். விஜயனின் 18 ஆண்டு பத்திரிகையுலக அனுபவங்களின் விளைவாக வெளிவந்துள்ளது.

இதயக்கனி மாத இதழ்

'நவம்பர்' இதழைத் தொடர்ந்து 'டிசம்பர்' இதழ் இரண்டு புத்தகங்களாக வெளிவந்துள்ளது. மற்றும் பரபரப்பான அரசியல், சினிமா விஷயங்களுடன், எம்.ஜி.ஆரின் அபூர்வ படங்களுடன் அபூர்வமான இதழாக விளைந்திருக்கிறது.

தனி இதழ் ரூ.**10/-** **25%** கமிஷன் நீக்கி முன் பணம் அனுப்பும் விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

அருள்மொழி பதிப்பகம்
32, வீரபாண்டிய நகர், 2வது குறுக்கு சந்து, சூளைமேடு, சென்னை – 600 094.
போன்: 4844814, 3722920.

NATURAAL PRODUCTS

அறிமுகப்படுத்தும் புதிய மூலிகைத் தயாரிப்புகள்

WIN OIL - S
THE HERBAL SKIN OIL

This rich, natural and extra nutrient value oil contains extracts of vilva, cucumber, badam, castor. This new herbal formualation prevents suntan, dryness wrinkles, improves complexion, removes scars due to pimples and cracks in the feet. Gives lustre to the skin. Suitable for all kinds of skin and good for infants also.

225 ml. Rs. 240 only.

WIN OIL - H
THE HERBAL HAIR OIL

This oil has a natural nutrient value and contains extracts of katthazhai, karisilankanni, Kizhanalli, poduthalai, sembharuthi, vembu, adhimadhuram, avarampoo, tulasi and many other herbs. Regular use of this oil prevents hairfall, dandruff, early grey and stimulates hair growth.


225 ml. Rs. 240 only.

For your queries on skin and haircare: Write to Mrs. RAJAM
51, Perumal koil street Saidapet, Chennai - 600 015. Ph. : 4852196, 3717940

எமது தயாரிப்புகள் கிடைக்கும் இடங்கள் :

in MALASIYA at TILA COLLECTION, 2-7, Place Hotal palaza, Jalan masjid India, Kualalumpur -501150
Ph. : 2711-2289, Cell No. : 013-3630481.

(1) Mrs. Chitra, Srirangam, ✆ : 0431-431140. (2) Ms. Uthra -Trichy, ✆ : 0431-456879. (3) Mrs. Jayanthi - Raja Annamalaipuram ✆ : 044-4333457 (4) Mrs. Sarala Gopalan - Crompet ✆ : 044-2381618 (5) Ms. Anandhi Balu-Thiruvanmiyur ✆ : 044-4417569 (6) Ms. Bama .S., T. Nagar, ✆ :8280836 (7) Mrs.R.Parimala-Adyar ✆ : 044-4401655, 4454605. (8) Mrs. Revathi Krishnan - Triplicane, ✆ : 044-8415133. (9) Mrs. Radha Sundhar - Triplicane, ✆ : 044-8547728.



தொடரவேண்டும் கலைஞர் ஆட்சி!

வாழப்பாடி ராமமூர்த்தி,
தலைவர், தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சி



தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சி கடந்த 1996ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் முடிந்து இரண்டு வருடம் கழித்து துவங்கப்பட்டது.

நாங்கள் அகில இந்திய அளவில் திவாரி காங்கிரஸோடு அந்தத் தேர்தலின் போது இணைந்து இருந்தோம். சட்டமன்றத் தேர்தல் முடிந்த பிறகு சீதாராம் கேசரி தலைமையில் இருந்த காங்கிரஸில் இணைந்தோம். ஆனால் அன்றைக்கு இருந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையின் தவறான அணுகுமுறையால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டோம். அதற்குப் பின்னால்தான் எங்கள் கட்சி முறைப்படி தேர்தல் ஆணையத்தில் பதிவுசெய்யப்பட்டது. '98ல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தோம். ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. அந்த இடத்தில் நின்று வென்ற எனக்கு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சராகும் வாய்ப்பு கிடைத்தது.

வாஜ்பாய் அரசைக் கவிழ்க்க ஜெயலலிதா முனைந்த நேரத்தில், நாங்கள் அவருடைய அரசியல் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம், தமிழக மக்கள் நிலையான அரசுக்கு ஆதரவு தெரிவித்துதான் அந்தக் கூட்டணிக்கு வாக்களித்தார்கள். நாங்கள் வாஜ்பாயோடு உறுதியாக நின்றோம். ஆனால் ஜெயலலிதா துரோகம் செய்துவிட்டு

கூட்டணியிலிருந்து வெளியேறினார். கூட்டணிக்குள் தி.மு.க. வந்தது. தமிழகத்தில் பெரிய மாற்றம் நிகழ்ந்தது. அ.தி.மு.க. கூட்டணியிலிருந்த கட்சிகள் தி.மு.க. தலைமையிலும், தி.மு.க. அணியில் இருந்த கட்சிகள், அ.தி.மு.க. தலைமையிலும் அணிவகுத்தன. தி.மு.க. கூட்டணியில் இருந்த த.மா.கா. திரிசங்கு நிலையில் மூன்றாவது அணி அமைத்து தமிழகத்தில் படுதோல்வி அடைந்தது. அந்தத் தேர்தலில் சில சதிகாரர்களின் வஞ்சகச் சூழ்ச்சியால் எங்கள் கட்சிக்குக் கிடைக்க வேண்டிய இரண்டு இடங்கள் பறிபோனது. அதோடு மட்டுமல்லாமல் கூட்டணியில் இருந்த மற்றொரு கட்சியே எங்கள் தோல்விக்குக் காரணமாக இருந்தது. எங்களைப் பொறுத்தமட்டில் நேற்று, இன்று, நாளை உறுதியாக, தேசிய ஜனநாயக முன்னணியிலேயே இருந்தோம் – இருக்கிறோம் – இருப்போம்.

தமிழக சட்டமன்றத் தேர்தல் வர இருக்கின்ற நிலையில், இப்பொழுது உள்ள அணிகள், உறுதியானவை என்று சொல்வதற்கில்லை. இதில் மாற்றம் வர வாய்ப்பிருக்கிறது. புதிதாக முளைத்துள்ள ஜாதிய அரசியல் கட்சிகள் மற்றும் த.மா.கா. ஆகியவை இணைந்து மூன்றாவது அணி அமைக்கும் சாத்தியம் உண்டு. பிரதான எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க. சேனாதிபதி இல்லாத படையாகவும், மாலுமியை இழந்த கப்பலாகவும் காட்சியளிக்கிறது. டான்சி ஊழல் வழக்கில் இரண்டு வருடம் கடுங்காவல் தண்டனை பெற்றதன் மூலம் தற்போதுள்ள தேர்தல் விதிகள்படி ஜெயலலிதா போட்டியிட முடியாது. எனவே அ.தி.மு.க. தங்கள் தரப்பில் யார் முதல்வர் என்பதை முன்னிறுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. ஜெயலலிதாவைத் தவிர்த்து வேறு யாராக இருந்தாலும், தி.மு.க. சார்பாக முன்னிறுத்தப்படுகிற கலைஞரின் அனுபவம், திறமை, ஆற்றல் ஆகியவற்றிற்கு முன்னால் யாருமே நிற்க முடியாது. ஜெயலலிதாவுக்கும் தகுதி இல்லை என்றாலும், இந்தச் சட்டச் சிக்கல்கள் இல்லாமல் இருந்திருந்தால் குறைந்தபட்சம் கலைஞரை எதிர்த்துப் போட்டியிடுகிற சந்தர்ப்பமாவது ஜெயலலிதாவுக்குக் கிடைத்திருக்கும்.



"புதுசா வந்திருக்கற டாக்டர் போலி டாக்டரா இருப்பார்னு நெனக்கிறேன்!"

"எப்படிச் சொல்ற?"

"மார்ச்சுவரியைச் சுத்திப் பார்த்துட்டு ஏப்ரல்வரி எங்கே இருக்குதுன்னு கேக்கறார்!"

– கொங்கணாபுரம் வே. செந்தில்

இந்தச் சட்டமன்றத் தேர்தலில் மக்கள் முன் உள்ள பிரச்னைகள் என்ன? தி.மு.க. அரசு இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை என்று சில சிறிய குறைகளைப் பிரதானப்படுத்துவதை விட்டுவிட்டு, '96 முதல் கலைஞர் அரசு செய்த சில பணிகளால் தமிழகம் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக, உழவர் சந்தை, நமக்கு நாமே திட்டம், வருமுன் காப்போம், பெரியார் சமத்துவபுரம், மகளிர் சிறு வணிகக் கடன், பெண்கள் சுயநிதிக் குழுக்கள் என்று கலைஞர் அரசின் சாதனைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.' இந்தத் திட்டங்கள் எல்லாம் தமிழகத்தில் ஜாதி இன பேதமற்ற சமுதாயத்தை அமைப்பதற்காகவும், அடித்தளத்தில் உள்ள மக்களைக் கைதூக்கி விடவும் போடப்பட்ட திட்டங்களாகும். தி.மு.க. ஆட்சியில் முதல்வர் மீதோ, மற்ற அமைச்சர் மீதோ ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லை. இதற்கு நேர்மாறாக '91–'96 இல் நடைபெற்ற ஜெயலலிதா ஆட்சியில், சர்வமும் ஊழல் மயம்; அதிகார துஷ்பிரயோகம். செய்யாத வேலைகளைச் செய்ததாகக் கணக்கு எழுதிக் கொண்டதுதான் ஜெயலலிதா சாதனை. 'அத்திப்பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை' என்பதுதான் ஜெயலலிதா ஆட்சியின் வரலாறு. அ.தி.மு.க. ஆட்சியில் நிர்வாகத் திறமைக்கு பேர் போன அதிகாரிகளும் ஊழலுக்கு உடந்தை ஆனதுதான் பரிதாபம்.

தி.மு.க. ஆட்சி ஒரு தொலைநோக்குத் திட்டத்தோடு செயலாற்றும் காட்சியைப்

பார்க்கிறோம். குறிப்பாக தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கம்ப்யூட்டர் கல்வி போதிக்கப்படுகிறது. கோடிக் கணக்கில் செலவு செய்யப்பட்டு பள்ளிகளுக்கு கம்ப்யூட்டர்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், டைடல் பார்க்கும் ஒரு மாபெரும் சாதனையாகும். வருங் காலத்தில் தகவல் தொழில்நுட்பம் ஒரு முக்கிய பங்கு வகிக்க இருப்பதால், தமிழக அரசு பொறியியல் கல்லூரிகளில் ஏழாயிரம் இடங்களை உருவாக்கியிருக் கிறது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்பதோடு மட்டுமல்லாமல் பல்வேறு சலு கைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வியா பாரிகளுக்கு வணிகர் நல வாரியம் அமைக் கப்பட்டுள்ளது. ஆனால் தமிழக அரசை எதிர்நோக்கியுள்ள சவால், கைத்தறி, விசைத்தறி, பஞ்சாலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதுதான். பணப்புழக்கம் இல்லை. நிதி நிறுவனங்கள் ஆயிரக்கணக் கான கோடிகளை ஏப்பம் விட்ட நிலையில் அதன் முதலாளிகள் சிறையில் ஜாலியாக ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரவுடிகள் இராஜ்யம் ஓரளவு கட்டுப்படுத் தப்பட்டிருந்தாலும் இன்னமும் கடுமை யான நடவடிக்கை தேவை.

நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத் தில் லாகவமாகச் செயல்பட்டு பிரச்னைக் குத் தீர்வு கண்டு இரு மாநில மக்களையும் பெருமூச்சு விட வைத்திருக்கிறார் கலைஞர். வீரப்பன் பிரச்னை அடியோடு ஒழிய கடு மையான நடவடிக்கைகளை எடுக்கிறது தமிழக அரசு.

இந்த ஐந்து ஆண்டுகளில் கிடைத்த முன்னேற்றத் திட்டங்கள் தேக்கமடையா மல், அதே வேகத்தோடு, வருகிற ஐந்தாண்டு களிலும் செயல்படுத்தப்படுமேயானால் தமிழகம் நிச்சயமாக செல்வச் செழிப்புமிக்க மாநிலமாக மாறும். எனவே தமிழக மக்கள் ஊழலுக்கு நிரந்தரமாக விடை கொடுத்து மீண்டும் கலைஞர் தலைமையில் அரச மைக்க அமோக ஆதரவு தெரிவிக்க வேண் டும். அப்பொழுதுதான் வருங்காலத்தில் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கும். இந்த அடிப் படையில்தான் வரும் சட்டமன்றத் தேர் தலில் ராஜீவ் காங்கிரஸின் பிரசாரம் அமை யும்.



படம் : ராஜன்

தூதுவரும் மார்கழி

- தும்பை பூ மலரும்
ஒளிமயமாய் ஒரு நாள்புலரும்
பச்சைப்புல் இனங்கள்
பனித்துளியில் முகம் பார்க்கும்

- வெட்கத்தில் தலைகுனியும்
எங்கள் ஊர்ப்பெண்களைப்போல்,
வயல்வெளியில்
கதிர்முற்றி,
அறுவடைக்கு காத்திருக்கும்

- அருகம்புல் சிரித்திருக்கும்
அத்தனை வீதியிலும்
வயசுப் பெண்கள் கோலமிடும்
வளையோசை கலகலக்கும்.
வண்ணங்கள் தெருவடைக்கும்

- மேனியை மீட்டிச்செல்லும்
மெல்லிய குளிர் காற்றில்,
சாணிக்கோப்பை மீதமர்ந்து
பரங்கிப் பூ உள்நடுங்கும்

- சலசலக்கும் ஆறுகளில்
பக்தர்கள் நீராட்டம்,
சின்னக்கடைகளிலும்
ஐயப்பன் இசை பரவும்

- செவிகுளிர்ந்து
மனங்குளிர–

- தைபிறந்து வழிபிறக்கும்
சந்தோஷச் செய்தி கொண்டு
வண்டினமாய் தூதுவரும்
வருடந்தோறும் மார்கழி.

– ஆதலையூர் சூரியகுமார்

பூவரசு மரநிழலில் அமர்ந்திருந்த குருவிக்காரன் அஞ்சுமணி, அவன் மனைவி அம்பிகா, பத்து வயது மகன் ஆகியோர் தூரத்தில் வரும் நாட்டாமையைக் கண்டதும் எழுந்து பவ்யமாக நின்றார்கள். அருகே வரும் வரை அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

அருகே வந்ததும், "வணக்கம் ஷாமி" என்று கும்பிட்டார்கள்.

"என்னடா அஞ்சுமணி! ஊர்ப் பக்கமே ரொம்ப நாளா காத்தடிக்கலே? உன் அப்பன் பொறந்த ஊராச்சே. மறந்துட்டானா?"

"பொயக்கணுமே ஷாமி."

பாம்பு



"சரி, சரி. இப்போ எங்கே இருக்கீங்க?"

"திர்ணாமலையில."

"சாப்புடுறீங்களா?"

"காலையில் திண்டிவனத்தில் ஒரு கல்யாணத்தில ஷாப்டு வந்தாச்சி ஷாமி."

"உன் அப்பனும், ஆத்தாளும் சௌக்கியமா?"

"நெல்லா இருக்காங்க ஷாமி."

"நீ திருவண்ணாமலையில பொண்ணு கட்டிட்டு எல்லாரையும் மாமியார் ஊருக்கே கூப்பிட்டும் போயிட்டே."

"மாமியா வூட்ல குந்திகின்னு துன்ற பயக்கம் எங்குளுக்கு இல்ல ஷாமி. அங்க ஊசி, மணி யாவாரம் பிச்சிகின்னு ஒடுது – கொஞ்ஷம், கொஞ்ஷமா ஷம்பாரிச்சி ஒரு பொட்ட பன்னி வாங்கிப் போட்டேன். முப்பது பன்னியா விருத்தியாச்சி. கடேஸியா மூள காசல் வருதுன்னு கேவுருமுண்டு தொரத்தி, தொரத்தி எல்லா பன்னியையும் கட்டுப் போட்டுடுச்சு. செத்த பன்னிங்கள வந்த வெலக்கி வித்து அதுங்கூட கொஞ்ஷம் பணம் போட்டு ரெண்டு பால் மாடு வாங்கிப் போட்டிருக்கே. அதான் ஷாமி அப்பிடி, இப்பிடி நவர முடியலே."

"இப்போ மட்டும் எதுக்கு வந்தே?"

"ஷாமி கும்புடப் போறே ஷாமி. அதுக் காகத்தா..." எனக்கூறி புன்னகைத்தபடியே தலையைச் சொறிந்தான் அஞ்சுமணி.

"முன்னேதான் திண்டிவனத்தில் பொழைச்சக்குன்னு இருந்தீங்க. இந்த ஊரில் சாமி கும்பிட்டீங்க. இப்போ வாழுகிற இடத்திலேயே சாமி கும்பிடுவதை விட்டுட்டு இங்கே எதுக்கு கும்பிடணும்?"

"நாங்க ஒங்க புளியமரத்து அடியில்தானே வயக்

கமா ஷாமி கும்புடுறது? அதனாலதா...''

''அந்த இடம் என் தம்பிக்கு பாகமா போயிடுத்து. நீ அவருகிட்டேதான் அனுமதி கேட்கணும்.''

''அவருகிட்ட கேட்டே ஷாமி. முடியாதுன்னு சொல்லிட்டார். நீங்க ஊர் நாட்டாமை. நீங்கதா...''

''பாகம் பிரிக்கும்போது தோப்பில் எனக்கு வேணாம். தெரு ஒழுங்கில் நாம இப்போ இருக்கோமே இந்த இடம் தனக்கு வேணும்னு கேட்டாரு. மனை பாகம் பங்கிட்டால் கிழ, மேலன்னுதான் கிராமத்தில் பங்கிடுவது வழக்கம். உன் இஷ்டத்துக்கு விட முடியாதுன்னு பஞ்

எஸ். சீதாராமன்

சாயத்தார் சொல்லிட்டாங்க. ஆனாலும் தம்பி தெரு ஒழுங்கில்தான் வேணும்னு பிடிவாதமா இருந்ததால் திருவுளச் சீட்டு போட்டு முடிவு பண்ணினாங்க. பஞ்சாயத்தார் முதலில் பாகம் பிரித்தது போல் எனக்கு இங்கேயும், தம்பிக்குத் தோப்பும் விழுந்தது. அப்போ கூட அரை மனத்துடன்தான் தம்பி ஒத்துக்கிட்டார்.''

''ஷாமி, தலைமுறை, தலைமுறையா ஒங்க புளியமரத்தடியில்தானே ஷாமி கும்முடுவோம். இது ஒங்களுக்கும் தெரிஞ்ச விஷயம்தானே?''

''எனக்கு மட்டுமில்லாமல் சுற்றுப்பட்டு எல்லா ஊருக்கும் தெரிந்த விஷயம்தான். என் பாகமா இருந்தா பேஷா சாமி கும்பிட்டுக்கச் சொல்லி இருப்பேன். இப்போ அந்த இடம் தம்பிக்குத்தான் சொந்தம். நீங்க கெஞ்சிக் கேட்டால் ஒத்துக் கொள்வார்.''



''காலுல கூட உயிந்து கும்முட்டு பாத்துட்டோம் ஷாமி. ஒத்துக்கவே மாட்றார்'' அம்பிகா கூறினாள் சோகத்துடன்.

''ஆச்சர்யமா இருக்கே! இந்த ஊருக்கு நீ எப்போ வந்தாலும் உன் கூடவே சுத்துவார் என் தம்பி - அவர் உன் நண்பன்னு ஊருக்கே தெரியும். அப்படி இருக்கும்போது நீ சாமி கும்பிட இடம் விட மாட்டார்னு சொல்வதை என்னால் நம்ப முடியலையே!''

''என்னை நெல்லா தெரிஞ்ச நீங்களே இப்பிடி சொல்றீங்களே ஷாமின்னு கேட்டதுக்கு அப்போ இங்கே ஊடு இல்ல. ஷாமி கும்முட உட்டோம். இப்போ உட முடியாதுன்னு சொல்லிட்டார் ஷாமி.''

''ரெண்டு நாள் உங்க சாதி ஜனம்

கூச்சல் போட்டுகின்னு கிடப்பாங்க. அதை நினைச்சுத்தான் இடம் விட மாட்டேன்னு சொல்லுறார்."

"போன தடவை இங்க ஷாமி கும்முட்ட போது ஒங்க அப்பாகிட்ட 'ஷாமி ஒங்க ரெண்டு புள்ளீங்க கூட இருக்கிற இப்பவே சொல்லிடுங்க. ஏங் புள்ளைக்கிப் புள்ள இந்த மரம் இருக்கிற மட்டும் இங்கேயே ஷாமி கும்புட எடம் உடும்படி சொல்லிடுங்க ஷாமி'ன்னு கேட்டபோது நீ இஷ்டம் போல கும்புட்டுக்கடான்னு சொன்னதைக் காப் பாத்தலன்னா எப்பிடி? இத ஒங்ககிட்ட கேட்டுட்டு போகலாம்னுதா வந்தே ஷாமி."

நாட்டாமையை அந்த வார்த்தைகள் தியாகச் சுட்டன.

"பாகப்பிரிவினையிலிருந்தே அவர் என்கிட்டே பேசியதே இல்லை. இப்போ வீடு ஏறிப் போனா மரியாதை கொடுப் பாரோ என்னவோ?"

"ஊருக்கே நாட்டாம நீங்க. ஒங்களுக்கு மருவாத குடுக்க மாட்டாரா? அப்பா குடுத்த வாக்க காப்பாத்த வேண்டியது புள்ளீங்க கடம இல்லியா ஷாமி? வந்து பேசிப் பாருங்க. அப்புறம் காளியாத்தா உட்ட வயி ஆவட்டும்."

"சரி வா போவோம்" எனக் கூறி நாட் டாமை முன்னே நடந்தார். பின்னே அஞ்சு மணியின் குடும்பம் நடந்தது.

தம்பியின் வீட்டருகே சென்றார். வீட் டுக்கு எதிரே யாருமில்லாததால் புளிய மரத்தின் வேர் மேல் அமர்ந்தார்.

இந்த வருஷமாவது இந்தக் குடிசை வீட்டைப் பிரித்து வீசி விட்டு மெத்தை வீடு கட்டுவானா? செங்கல் கூட நம் சூளையி லிருந்து எடுத்துக்கச் சொல்லி விடலாம். பொண்டாட்டி பேச்சைக் கேட்கும் வரை அண்ணான்னு வந்து மனம் திறந்து பேசுவது கஷ்டமே!

"ஷாமி, சொம்மா குந்திட்டீங்களே. கூப்புடுங்களே ஷாமி."

"செல்லப்பா! செல்லப்பா!" சற்று உயர்த்தி குரல் கொடுத்தார்.

அடுத்த சில நொடிகளில் பதில் குரல் கொடுக்காமல் நாட்டாமையின் தம்பி செல் லப்பனும், அவன் மனைவியும் வெளியே வந்தார்கள்.

"அஞ்சுமணி, சப்போட்டுக்கு இவரை கூட்டாந்துட்டியா?" அஞ்சுமணியைப் பார்த்துக் கோபமாகக் கேட்டான் செல்லப் பன்.

மகுடிக்கு அடங்கும் நல்ல பாம்பு போல் மௌனம் காத்தான் அஞ்சுமணி.

"சப்போர்ட்டுக்கு வரலை செல்லப்பா. இந்தப் புளிய மரத்தடியில் எப்ப வேணும் னாலும் இவர்கள் சாமி கும்பிட்டுக் கொள் ளலாம்னு நம்ம அப்பா இவன் அப் பாவுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டியது நம் கடமை இல்லையா?"

"நான் வாக்குக் கொடுத்தேனா?"

"நீ வேற தனியா வாக்கு கொடுக் கணுமா என்ன? தந்தை கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டியது பிள்ளையின் கடமை அல்லவா?"

"இந்தக் காலத்தில், தான் கொடுத்த வாக்கையே காப்பாற்ற மாட்றான். ஏழு வருஷத்துக்கு முன்பு அப்பா சொல்லிட்டா ராம். அதை நான் காப்பாற்றணுமாம். வேற

"என்ன செக்ரெட்டரி சார்... இந்த வாட்டியாவது உங்க சபாவில் பாட எனக்கு ஒரு சான்ஸ் தரக் கூடாதா?"

"அவசரப்படாதீங்க... டிசம்பர் சங்கீத சீசன்லாம் முடியட்டும்... ஓய்வா இருக்கும்போது வந்து பாருங்க!"

– புளியரை கணேசன்

எங்கேயாகிலும் போய் சாமி கும்பிட்டால் இவன் சாமி ஏத்துக்காதா?"

"ஏய் ஷாமி! ஆத்தாவ குத்தம் சொல் லாதீங்க ஷாமி. குத்தம் சொல்லாதீங்க" என்று கூறித் தொடைகளை கைகளால் பதற்றத்துடன் தட்டி கலங்கினான் அஞ்சு மணி.

"பொறுமையா இரு அஞ்சுமணி" அன்பாகச் சொன்னார் நாட்டாமை.

"ஷாமி, இது வெறும் புளியமரமில்ல. எங்காத்தா காளியாத்தாவே இதுதா ஷாமி" கையைக் கடித்துக் கொண்டான் அஞ்சு மணி.

"கேட்டாயா தம்பி! ஒருவனின் உணர்ச்சி யைப் புரிஞ்சுக்கலைன்னா நாம மனுஷனா பிறந்து என்ன புண்ணியம்? இந்தப் புளிய மரத்தடியில் இவர்கள் சாமி கும்பிட நீ அனுமதிச்சா அளவில்லா சந்தோஷம் அடைவார்கள் என்பதை நினைத்துப் பாரு. எல்லாவற்றுக்கும் மேலா நம்ம தந்தை இவன் தந்தைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றப் பாரு."


"என்னதான் நாட்டாமையா இருந்தா

லும் அனாவசியமா எங்க சொந்த விஷயத்தில் தலையிடுவது சரியில்லை'' நாட்டாமையின் தம்பி மனைவி நறுக்கென உறவைக் கிள்ளினாள்.

''நாட்டாமை சும்மா அதிகாரத்தைக் காட்டாதீங்க. இப்போ இந்த இடம் பொது இடமில்லை. எனக்குப் பாகம் வந்த இடம். இங்கே எந்த முடிவையும் எடுக்க யாருக்கும் உரிமை இல்லை. நான் முடிவெடுத்தபடி இவர்களை இங்கே சாமி கும்பிட அனுமதிக்கவே மாட்டேன்'' செல்லப்பன் உறுதியாகச் சொன்னான்.

"நம்மப் பரம்பரை, சொன்ன வார்த்தையைக் காப்பாற்றும் பரம்பரைப்பா. தயவுசெய்து..."

"என்னால் விட முடியாது. வேணும்னா உங்க பாகத்தை எனக்கு விட்டுட்டு, நீங்க



இந்தப் பாகத்தை எடுத்துக்குங்க. பிறகு நீங்க என்ன வேணும்னாலும் செய்துக்குங்க. எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. இதற்குச் சம்மதமா இருந்தா மேலே பேசுங்க. இல்லேன்னா வாயைத் திறக்காமல் போயிடுங்க" தம்பியின் வார்த்தைகளில் தீப்பொறிகள் கலந்திருந்ததால் நாட்டாமையும் ஒரு முடிவுக்கு வந்தார்.

''அவ்வளவுதானே! நான் இருக்கிற இடத்துக்கு நீ போயிடு. நான் இங்கே வந்துடுறேன்'' அப்பாவின் வாக்கைக் காப்பாற்றும் உறுதியுடன் சொன்னார் நாட்டாமை.

"இப்போ நீங்க வாயால் சொல்லுடுவீங்க. இவன் சாமி கும்பிட்டு முடிந்ததும் பழைய பாகப்படி போயிடுவோம்னு உங்க மனைவி, புள்ளைங்க சொல்லுவாங்க. அதுக்காக இப்பவே ஊர்ப் பஞ்சாயத்தில் பாகபரிவர்த்தனைப் பத்திரம் எழுதிக் கொள்வோம்.''

நாட்டாமை அதற்கும் சம்மதித்தார். பஞ்சாயத்தார் முன்னிலையில் இருவரும் முறைப்படி தத்தம் பாகத்தை மாற்றி எழுதிக் கொண்டார்கள்.

திருவண்ணாமலையில் அஞ்சுமணிக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

குடிசையின் உள்ளே அஞ்சு மணியின் அப்பா மானூரானும், அம்மாவும் அசோக வனத்து சிதை மாதிரி சோகமே உருவாக அமர்ந்திருந்தார்கள்.

மகனைக் கண்டதும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதார்கள்.

''அப்பா, என்ன நடந்ததுன்னு சொல்லிட்டு அழு'' என்று உலுக்கினான் அஞ்சுமணி.

"பாவி மவனே! நாட்டாம தம்பி இங்கே கிரிவலத்துக்கு வந்தபோது இப்போ நானும், அண்ணனும் வேறயா போயிட்டோம். நீங்க ஷாமி கும்முடுவீங்களே அந்த எடம் என்கு பாகமா வந்திருக்கு. மெயின் தெருவிலிருந்த வூடும், மண்ணும் அண்ணனுக்குப் போயிடுச்சு. தெரு ஒயிங்கில் வாய என்கும், புள்ள, ஷம்ஷாரத்துக்கும் ஆச. நீ ஷாமி கும்புடப் போறேன்னு அங்க வா. நா புளியமரத் தாண்ட ஷாமி கும்புட கூடாதுன்னு தடுக்கிறே. நீ பஞ்சாயத்துக்கு அண்ணன் கிட்டே போ. அப்பா குடுத்த வாக்க காப்பாத்த வேண்டி என்கிட்டே நாயம் கேக்க வருவார். நா உடாபுடியா ஷாமி கும்புட உட மாட்டேன்னு கண்டிப்பா சொல்லுவே. அண்ணாவோ அப்பா சொன்ன வாக்க காப்பாத்த வேண்டி என்கி தெரு ஒயிங்கில் உட்டுட்டு அவர் தோப்புக்கு வர சம்மதிப்பாரு. என் திட்டப்படி அண்ணா தோப்புக்கு வந்துட்டா' என்கி ஒத்தாச செஞ்ச ஒனக்காக ருவா ரெண்டாயிரம் ரொக்கமா குடுக்கிறேன்னு சொன்னார். நீ ரெண்டாயிரம் ருவாயிக்கி ஆசப்பட்டு நா அதர்மத்துக்கு போவாதேன்னு எவ்வளவு சொல்லியும் கேக்காம நாயத்த மீறி நடந்தே."

"என்னிக்குமில்லாம இங்க கல்யாணச் சோறு அதிகமா கெடைச்சதால வாரி வந்த அல்யா சோறையும் மாட்டுக்கு வச்சிட்டோம். சோறு ருசியா இருந்ததால அளவுக்கு மீறி மாடுங்க துன்னு வவுறு கெட்டு பொகக்கி, பொகக்கின்னு உயிந்தி செத்துப் போச்சிங்க அஞ்சுமணி" என்று அழுகையினூடே சொன்னான் மானூரான்.

''காளியாத்தா! இருவதாயிரம் குடுத்து மாடு வாங்கி இப்படிப் போச்சே!'' அம்மா வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதாள்.



19

சீதை சூடாமணியைக் கொடுத்ததும் ஆஞ்சனேயன் அதைப் பெற்றுக் கொண்டு கிளம்பிப் போய் விடவில்லை.

ஏனென்றால், ஒரு நல்ல தூதனாகப் பட்டவன் தனது எஜமானன் சொல்லி யனுப்பிய காரியத்துக்கும் அதிகமாக ஏதாவது செய்ய இயலுமா என்று பார்த்துவிட்டு, முடிந்தால் செய்து விட்டுத்தான் திரும்பிச் செல்வான். -. இது வால்மீகி குறிப்பிடும் குணம்.

அவ்வாறிருக்க, ஆஞ்சனேயன் மட்டும் அதன்படி நடக்காமலிருப்பானா...?

சூடாமணியைப் பெற்றுக் கொண்டவன் சுற்றும் முற்றும் பார்க்கிறான். திரும்பிச் சென்றால் ஸ்ரீராமன் தன்னிடம் என்னவெல்லாம் கேட்கக்கூடும் என்பதை எண்ணிப் பார்க்கிறான். சீதையைப் பற்றி அவர் கேட்கப் போகிறார் என்பது உறுதி. அதற்கு மேல் என்ன

கேட்பார்...?

"ராவணனுடைய கோட்டையைப் பார்த்தாயா?"

"அவனுடைய ஆயுதக் கிடங்கில் என்னென்ன இருக்கின்றன?"

"இலங்கை சைனியத்தின் பலங்கள் எவையெவை?...."

இவ்வாறெல்லாம் ஸ்ரீராமன் கேட்கக்கூடும் என்று முடிவுக்கு வருகிறான் ஹனுமான். உடனே, இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் தெரிந்து கொள்ளாமல் திரும்புவதில்லை என்று முடிவு செய்கிறான். ராவணனையே போய்ச் சந்தித்து விடுவது என்று கூட தீர்மானம் செய்து விடுகிறான்.

'ஸாம, தான, பேத, தண்டம் என்ற நான்கு உபாயங்களுள் கடைசி உபாயமான தண்டம்தான் ராக்ஷஸர்களை அணுக லாயக்கானது' என்கிற எண்ணமும் ஹனுமானுக்கு உண்டாகிறது.

அப்போதே அந்தக் கணமே அசோகவனத்தை அழிப்பது என்று முடிவுக்கு வருகிறான். வனத்தை துவம்சம் செய்ய ஆரம்பித்தால், உடனே அரக்கர்கள் நம்மைப் பிடித்து ராவணேசுவரனிடம் அழைத்துப் போவார்கள் என்கிற திட்டத்தில் செயல்படுகிறான்.

தொடைகளை வேகமாகத் தட்டிக் கொண்டு மரங்களை முறித்துப்

கல்யாணபுரம் ஆராவமுதன்

போடுகிறான் ஹனுமான். அவன் நிகழ்த்திய ரகளையில், வனத்தில் ஒளிந்திருந்த பாம்புகளும் மிருகங்களும் பயந்துபோய் சிதறி ஓடின.

இந்தக் காட்சியை கம்பர் விவரிப்பதில் கேட்கிற ஓசைநயம் அப்படியே ஹனுமானின் அசைவுகளையும் அவனுடைய உள்ளத்தின் உக்கிரத்தையும் வெளிப்படுத்துகின்றன பாருங்கள் :

முடிந்தன; பிளந்தன; முறிந்தன; தெரிந்த
மடிந்தன; பொடிந்தன; மறிந்தன; முறிந்த
இடிந்தன; தகர்ந்தன; எரிந்தன; கரிந்த
ஒடிந்தன; ஒசிந்தன; உதிர்ந்தன; பிதிர்ந்த

– இப்படிப் பல பாசுரங்களில் தொடர்கிறது கம்பனின் வர்ணனை. அதைப் படிக்கும்போதே விச்வரூபியாக விண்முட்ட கிளம்பியெழுந்த ஹனுமான் வனத்தை அழிக்கும் காட்சி, நம் கண் முன் விரிகிறது.

துளஸிதாஸர் இந்தக் கட்டத்தில் வெகு அழகான கற்பனை ஒன்றைப் புகுத்திப் பேசுகிறார் : ஹனுமான் என்ன செய்தானாம்... 'அசோக வனத்தை துவம்ஸம் செய்வது' என்று முடிவுக்கு வந்து விட்டாலும் முதலில் அதற்குச் சீதையிடம் அனுமதி கேட்டானாம்!

"தாயே! அழகான மரங்களையும் பழங்களையும் பார்த்ததும் எனக்குப் பசி வந்து விட்டது! இந்த வனத்திலுள்ள பழங்களைப் பறித்து உண்ண அனுமதி உண்டா?'' என்று முதலில் கேட்டானாம்!

அதற்குச் சீதை சொன்னாளாம் : ''குழந்தாய்! மஹா பலவான்களான ராக்ஷஸர்கள் காவல் காத்துக் கொண்டிருக்கும் இந்த வனத்தில் நீ எப்படி

செஞ்சியில் சிரஞ்சீவி!

விச்வரூப ஹனுமானை அர்ச்சா ரூபத்தில் ஸேவிக்க வேண்டுமா...? செஞ்சி மலைக் கோட்டைக்குப் போகிற வழியில் உள்ள ஒரு குன்றின் மேல் உறைகிறார். சுருண்டு நிற்கும் இவரது வாலில் ஒரு மணி தொங்குவதையும் பார்ப்பீர்கள்!

நுழைவாய்....? உன்னைக் கண்டால் அவர்கள் தீர்த்து தொலைத்து விடுவார்களே!'

எத்தனைதான் தன் பலத்தை ஹனுமான் நிரூபித்திருந்தாலும் சீதையின் எளிய மனத்தில் கவலையும் சந்தேகமும் திரும்பத் திரும்ப எழுந்து வாட்டுகின்றன.

அதைக் கண்டு ஹனுமான் சொல்கிறான்:

"தாயே! அரக்கர்களைப் பற்றிய பயம் உங்களுக்கு வேண்டாம். அவர்களை நான் சமாளித்துக் கொள்கிறேன். வனத்துக்குள்ளே புகுந்து பழங்களைக் கொய்யலாமா என்பதை மட்டும் கூறுங்கள்?" எனக் கேட்கிறான்.

சீதாபிராட்டி என்ன பதில் சொல்கிறாள்...

"சரி! வனத்துக்குள் செல் - ரகுபதியின் சரணாரவிந்தங்களை உன் ஹ்ருதயத்தில் இருத்திக் கொண்டு போ. போய்ப் பழங்களை உண்டு பசியாற்றிக் கொள்."

ஹனுமான் சீதையிடம் இவ்வாறு அனுமதி கேட்டதற்கு வேறு ஒரு வியாக்யானம் இருக்கிறது துளஸிதாஸர் ராமாயணத்தில்!

அதாவது, கடமையைச் செவ்வனே முடித்துக் காட்டி விட்டு அதன் பிறகே பசியைக் குறித்த சிந்தனையைக் கூட அனுமதிக்கிறார். சீதையைக் கண்டு, ஸ்ரீராமன் தெரிவித்ததைக் கூறி, கணையாழியைக் கொடுத்து விட்டு சூடாமணியைப் பெற்றுக் கொள்கிற வரையில் தன் பசி பற்றி சிந்திக்கவேயில்லை ஹனுமான், என்பது துளஸிதாஸரின் விளக்கம்.

இதிலே மிகவும் வேடிக்கையான விஷயத்தைக் கவனியுங்கள்...

ஹனுமானுக்கு அசோகவனத்தில் சென்று பழங்களைப் பறிக்க அனுமதி அளிக்கும் சீதை என்ன சொல்கிறாள்...?

"அந்த ரகுபதியின் சரணாரவிந்தங்களை மனத்தில் இருத்திச் செல்" என்று சொல்கிறாள் அல்லவா... ஏறத்தாழ இதே சொற்களைத்தான் சற்றுமுன் ஹனுமான் அவளிடம் கூறி ஆறுதலளித்திருக்கிறான். துளஸி ராமாயணத்தின் அந்தக் கட்டத்தைப் பாருங்கள்:

ராமனைப் பிரிந்த துயரத்தில் சீதை அசோகவனத்தில் வாடிக் கொண்டிருப்பதைக் காணும் ஹனுமான், அந்த ராமன்

அருள்வாக்கு

"**அ**ரியும் சிவனும் ஒண்ணு; அரியாதவன் வாயிலே மண்ணு" என்பதும் நம் எல்லோருக்கும் தெரிந்தது. இதிலே 'அரியாதவன்' என்பதில் வல்லின 'றி'யை இடையினமாக மாற்றி, 'அரியாதவன்' என்று சொல்வார்கள். ஹரியாகிய யாதவ குலக் கண்ணன் என்று அர்த்தம். அவன் வாயிலே மண்ணைப் போட்டுக் கொண்டு விட்டு யசோதைக்கு லோகம் முழுவதையும் காட்டினான் அல்லவா? அதைத்தான் 'அரியாதவன் வாயில் மண்ணு' என்பது.

"ஸரி, அரியும் சிவனும் ஒன்று என்று சொல்லிவிட்டு, இப்படி ஒன்று-இவர்களிலே ஹரி லோகம் முழுவதையும் காட்டினவன் என்று-எதற்காகச் சொல்ல வேண்டும்?"

பட்ட துன்பங்களை அவளுக்கு எடுத்துச் சொல்ல, அவள் துக்கம் மேலும் அதிகமாகி விட்டது. உடனே ஆஞ்சநேயன் அவளை நோக்கிச் செல்கிறான் :

"தாயே! தைரியமாக இருங்கள். அடியார்களுக்குச் சுகம் தரும் ராமனை ஸ்மரணை செய்யுங்கள். ரகுபதியின் வல்லமையை ஹ்ருதயத்தில் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். ராம ரூபமான சூரியன் உதயமாகி விட்டால், ராக்ஷஸ சேனை என்கிற இருள் அகன்று ஓடிவிடும்."

அதே வார்த்தைகள்! 'ரகுபதியின் வல்லமையை மனத்தில் இருத்துங்கள்' என்று ஹனுமான் சீதையிடம் சொல்கிறான். "ரகுபதியின் சரணாரவிந்தங்களை உன் ஹ்ருதயத்தில் கொண்டு போ!" என்று சீதை ஆஞ்சநேயனிடம் சொல்கிறாள்!

பிரேமையும் பக்தியும் - அதாவது அசஞ்சல பக்தி - எப்படி இரு உள்ளங்களை நேர்க்கோட்டில் இணைத்து ஒன்றை மற்றொன்றுக்குப் பலமாக, உரமாகப் பாய்ச்சுகிறது பாருங்கள். தூய பக்திக்கு மட்டுமே உரிய பெருஞ்சக்தி இது.

இந்த இடத்திலே இன்னொரு அழகான காட்சியையும் சொல்லி விடுகிறேன் - கொஞ்சம் போல பின்னோக்கிச் செல்லுவோம். சீதையை ஹனுமான் சமாதானம் செய்தான் அல்லவா! "சிறிது பொறுங்கள்; ராமன் வந்து தங்களை அழைத்துப் போவார்" என்கிறான்.



''எதற்காகவா? இதிலேயும் பெரிய தத்வம் இருக்கிறது. ஒரே பிரம்மம்தான் ஹரி, சிவன் இரண்டு பேரும். அதனாலே அவர்கள் ஒன்றேதான். ஆனால் அந்த ஒரே பிரம்மத்தை நிர்குணம், ஸகுணம் என்று இரண்டு நிலைகளில் நாம் பாவிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்த இரண்டில் லோக வ்யவஹாரம் அடிபட்டுப் போன நிர்குணம்தான் சிவன். லோக வ்யவஹாரத்தை நடத்தும் ஸகுணமே ஹரி. மண்ணைத் தின்று லோகம் முழுவதையும் தன் வாயில் அடங்கியிருப்பதாக அவன் காட்டினபோது இந்த உண்மையைத்தான் உருவகப்படுத்தியிருக்கிறான். 'அரி யாதவன் வாயில் மண்ணு' என்று சொல்லி இதை ஞாபகப்படுத்திவிட்டதால் முதல் வரியில் சொன்ன 'அரியும் சிவனும்' என்பதில் விட்டுப்போன சிவன் நிர்குணம் என்பதையும் சொன்னதாகி விடுகிறது.''

'றி' யை 'ரி' யாகக் கூட மாற்றாமல் 'அறியாதவன்' என்ற ஒற்றை வார்த்தையை 'அறி யாதவன்' என்று இரண்டாகப் பண்ணிக் கொண்டாலே போதும். 'அறி, யாதவன் வாயிலே மண்ணு' என்றாலே அரியும் சிவனும் ஒண்ணானாலும்' இவர்களில் யாதவனாக வந்து மண்ணைத் தின்னவன் ஸகுண ப்ரம்மம் என்று அறி; அதனால் இன்னொருவன் நிர்குணம் என்றும் அறி' என்று அர்த்தமாகி விடும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

அவளோ, ''வானர சேனை எவ்வாறு நூறு யோஜனை விஸ்தீரணமுள்ள சமுத்திரத்தைக் கடந்து வரும்?'' என்று சந்தேகம் கொள்கிறாள்.

அப்போது ஹனுமான் சொன்னானாம் :

''தேவி! சுக்ரீவனின் வானர சைனியத்தில் உள்ள மிகச் சாதாரணமான வானரம் நான். நானே இத்தனை பெரிய கடலைத் தாண்டி வந்தேன் என்றால் மற்றவர்களுக்கு அது முடியாமலா போய்விடும்!'' என்று!

தன்னாற்றலைத் தானே உணர்ந்து நிரூபித்த பின்னரும் இத்தனை அடக்கத்துடன் அவனால் பேச முடிகிறது. இதற்கும் அவன் வினய பக்தியன்றி வேறு என்ன காரணமாக முடியும்!

சரி, விட்ட இடத்துக்கு மீண்டும் வருவோம். ஹனுமான் அசோக வனத்தின் மரங்களைப் படாதபாடு படுத்துகிறான். அதைக் கண்டு, சீதைக்குக் காவலாயிருக்கும் அரக்கிகள் அஞ்சி ஓடிப் போகிறார்கள். நேராக ராவணன் சபைக்குப் போய்ப் புகார் படிக்கிறார்கள்.

''அரசே! அசோகவனத்தை ஒரு குரங்கு வந்து ஹதாஹதம் செய்கிறது. போதாக் குறைக்கு சீதையிடம் வேறு ஏதோ நெடு நேரம் பேச்சு நடத்தியது அந்த வானரம். இப்போது கட்டுப்பாடிழந்து துவம்சம் செய்து கொண்டிருக்கிறது'' என்றார்கள்.

இதைக் கேட்டதும் ராவணனுக்கு எவ்வளவு கோபம் வந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

குரங்கு ஒன்று, இலங்கையில் புகுந்து சீதையுடன் உரையாடியது என்பதையே அவனால் பொறுக்க முடியவில்லை. அது அசோகவனத்தை வேறு அழிக்கிறது என்றால்... பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பதா!

உடனே அரக்கர் படையை அழைத்து ஹனுமாருடன் போர் புரிய அனுப்பினான் ராவணன்.

ஏழு மந்திரி குமாரர்கள், கிங்கரன், ஜம்புமாலி, விரூபாக்ஷன், ராவணனின் மகன் அக்ஷகுமாரன் என்று வரிசையாக ஒவ்வொருத்தராகப் போகிறார்கள். போனவர்கள் அத்தனை பேருக்கும் வாயுபுத்திரன் கரங்களால் மரணம்!

எண்பதாயிரம் அரக்கர்களை மரக் கிளைக் கொண்டும் தடிகளைச் சுழற்றியும் அடித்து வீழ்த்தினான் நமது கதாநாயகனான ஸ்ரீராம பக்த ஹனுமான்!

''ராமனுக்கு வெற்றி உண்டாகட்டும்! லக்ஷ்மணனுக்கு வெற்றி உண்டாகட்டும்! ராஜாவான சுக்ரீவன் வெற்றி பெறட்டும்! நான் ராமதாஸன்! ஆயிரம் ராவணன்கள் வந்தாலும் என்னை ஏதும் செய்ய முடியாது!'' என்று ஆரவாரமிட்டபடியே அசோகவனத்திலே வீற்றிருக்கிறான் ஹனுமான்.

(வளரும்)

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஈ. சிதம்பரம்,
418/1140, முத்துராமலிங்க நகர்,
ரிசர்வ்லைன்,
சிவகாசி (மேற்கு)

* ரூ. 25 பரிசு பெறுபவர் :
ராமகிருஷ்ணன்,
காயக்காடு,
ஆவணத்தாங்கோட்டை - 614 624
அறந்தாங்கி தாலுகா
புதுக்கோட்டை மாவட்டம்.

● எம். பிச்சைக்கனி, நெமிலி.

? 'விடுதலைப் புலிகளுக்கு மத்திய அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும்' என்று வைகோ கூறுகிறாரே?

! புலியின் திறந்த வாய்க்குள் தலையை விடுங்கள் என்பதற்கு ஒப்பான யோசனை. கருணாநிதியும் அத்வானியும் மசிந்து கொடுக்காமல் உறுதியாக இருக்க வேண்டும்.

● ஈ. சிதம்பரம், சிவகாசி (மேற்கு) ❑

? 'அற்புதங்கள்' என்று, பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர் பாபா ஆசிர்வாதத்தால் நடந்து வந்ததாக வெளியாகியிருக்கிறது. பகுத்தறிவுப்படி இதை ஏற்றுக் கொள்ள முடியுமா?

! மக்களை ஈர்க்க பாபா சில காரியங்களைச் செய்யக்கூடும். ஆனால் தாம் 'அற்புதங்கள்' நிகழ்த்துவதாக பாபா என்றும் சொல்வதில்லை. தமது உள்ளத்திலிருந்து பிறக்கும் அன்பை உணர முடிகிறதா என்றுதான் கேட்கிறார். இந்த அன்புதான் முக்கியம்; இதுதான் சாதனைகளைப் புரிகிறது என்றும் சொல்கிறார். Faith healing என்பது ஏசு காலத்திலிருந்து இருந்து வருகிறது. நம்பிக்கை



• புலி வாய்க்குள்...!



• நம்பிக்கை அற்புதம்!

சமையல் காஸ் விலைக்குறைப்பு அ.தி.மு.க.வின் வெற்றியாமே?

தான் அடிப்படை.

● என். சுப்பிரமணியன், சென்னை - 33.

? உலக வங்கி பல நாடுகளுக்குக் கோடிக் கணக்கில் நிதி உதவி அல்லது கடன் கொடுக்கிறதே. உலக வங்கிக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது?

! உலக வங்கி பணக்கார நாடுகளிடமிருந்து (அமெரிக்கா, கானடா, பிரிட்டன், ஜெர்மனி, ஜப்பான்) டாலர்களை டெபாசிட்டாகப் பெற்று ஏழை நாடுகளுக்குக் கடனாக உதவுகிறது. உலக வங்கியின் முக்கிய உறுப்பினர் அமெரிக்கா. அதிக டாலர்களை வங்கிக்கு அளிப்பதும் அமெரிக்காதான். இதனால் பரம்பரை பரம்பரையாக ஓர் அமெரிக்கர்தான் உலக வங்கியின் தலைவராக இருந்து வருகிறார். உலக வங்கியின் நோக்கம், பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு உதவி அவற்றை மேம்படுத்துவது.

● கே. இளங்கோ, கல்யாண ஓடை.

? அச்சிட்ட தாள்களில் தின்பண்டங்கள் வைத்துச் சாப்பிட்டால் வியாதி வர வாய்ப்பு இருக்கிறதாமே?

! நிறையவே இருக்கிறது; தாளை ரீசைக்ளிங் முறையில் தயாரிக்கவும் அச்சிடும் மையை உற்பத்தி செய்யவும் ஏராளமான ரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதால்.

● டி.கே. சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்.

? வாக்காளர் அடையாள அட்டைக்கு போட்டோ எடுக்க வாக்காளர்கள் உற்சாகமாக முன்வருவதில்லையாமே?

! அடையாள அட்டை இருந்தால்தான் வோட்டுப் போட முடியும் என்பதே அடிப்படை உரிமைக்கு மாறான, அநீதியான ஏற்பாடு. வாக்காளர் அட்டை இல்லாவிடில் ரேஷன் கார்டு, வருமான வரி கார்டு

நீங்கள் கேட்டவை

– தராசு

டிரைவிங் லைசென்ஸ், பணியாற்றும் நிறுவனத்தில் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை போன்ற ஏதேனும் ஒன்றைப் பயன் படுத்த அனுமதிக்கப்பட வேண்டும். இதுவும் கள்ளவோட்டு குறித்துச் சந்தேகம் எழும்போது மட்டும் கேட்கப்பட்டால் போதுமானது.

● இ. ராமதாஸ், சென்னை - 33.

? **பாராளுமன்றத்தில் 33வது முறையாகத் தலைதூக்கியிருக்கும் லோக்பால் மசோதா பற்றி...?**

! சிறிது காலம் சென்று, 'நூறாவது முறையாக தலைதூக்கியிருக்கும் லோக்பால் மசோதா பற்றி...?' என்று நீங்களே திரும்பவும் கேள்வி கேட்கும் நிலை வரலாம்!

● க. நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? **சமையல் காஸ் விலை குறைப்பு, அ.தி.மு.க.வுக்குக் கிடைத்த வெற்றி என்கிறாரே ஜெயலலிதா?**

! எந்த ஒரு சின்ன நன்மை ஏற்பட்டாலும் கூட அது ஜெயலலிதாவின் வெற்றி; சிறிதோ பெரிதோ - எந்த தவறு நேர்ந்தாலும் கருணாநிதிதான் காரணம் - இதுவே ஜெயலலிதாவின் அரசியல். இதை மம்தா புரிந்து கொண்டு கோபப்படாமல் இருந்தால் சரி.



* ...புரிந்து கொள்வாரா...?


● வி. சிவா, மதுரை.

? **வினாயகர், பத்ரகாளி படங்களை நவீன கழிப்பறை சாதனங்களில் பொறித்து ஓர் அமெரிக்க நிறுவனம் விற்பனை செய்வது பற்றி...?**

! மனமுதிர்ச்சியற்ற வியாபார யுக்தி இது. திமிரும் கலந்திருப்பதால் கண்டனத்துக்கும் நடவடிக்கைக்கும் உரியது. பிரதமர் அமெரிக்கா வந்த போது வரவேற்பு அளித்து அவரை தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கிய ஹிந்து அமைப்புகள் இதுபோன்ற விஷயங்களைக் கவனித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் எல்லாருமே அரசியல் ஆதாயத்தை மட்டுமே கவனிப்பதாகத் தோன்றுகிறது.



* அரசியல் பாணியாய்...



* கல்தா மணி!

● எம். சிவகுருநாதன், சென்னை - 42.

? **'சாதியை யாராலும் ஒழிக்க முடியாது; அதனால் தனித்தனி சாதிச் சங்கங்கள் வைத்துச் செயல்படுங்கள்" என்று அண்மையில் காரைக்குடியில் நடைபெற்ற ஒரு விழாவில் பேசிய மதுரை ஆதீனத்தின் கருத்து பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

! ஒரே ஒரு திருத்தம் : 'செயல்படுங்கள்' என்பதற்குப் பதில் 'குட்டிச்சுவராகப் போங்கள்' என்று கூறியிருக்கலாம். ஏனெனில், அத்தகைய செயல்பாடு இத்தகைய முடிவில்தான் கொண்டு விடும்!



* திருத்தி வாசியுங்கள்!

● சி.கொ.தி. முருகேசன், கோபி.

? **வீரப்பனுடன் பேச்சு நடத்திய கொளத்தூர் மணி திராவிடர் கழகத்தை விட்டு விலகியது பற்றி...?**

! அவர் விலகலைங்க; விலக்கப்பட்டிருக்கிறார்.

● ராமகிருஷ்ணன், காயக்காடு.

? **தென் ஆப்பிரிக்காவில் கறுப்பு இனத்தவர்களை வெள்ளை இனக் காவலர்கள் நாய்களைக் கொண்டு கொடுமைப்படுத்தியதைக் காட்டிய டீவி சானல்களை விமர்சித்திருக்கிறீர்களே... அநீதிகளை வெளிக் கொண்டு வருவது மீடியாவின் பொறுப்பு தானே?**

! உண்மைச் செய்தி வெளிவர வேண்டும் என்பதில் இரு கருத்தில்லை. அதை எப்படிச் செய்கிறார்கள் என்பதும் முக்கியம். வெறும் 'அதிர்ச்சி' தூண்டுதலுக்காக காரியம் செய்வது சரியான மீடியா அணுகுமுறை அல்ல. மனித மனத்தின் குரூரங்களும் வக்கிரங்களும் அணு அணுவாகச் சித்திரிக்கப்படுவது பார்ப்போர் மனங்களில் அதிர்ச்சியை மட்டுமின்றி கொடூரத்தையும் தூண்டும்.

இல்டி

ரமணி இட்லி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். பக்கத்தில் குழந்தை நாற்காலியைப் பிடித்துக்கொண்டு தத்தி தத்தி நடக்க முயன்று கொண்டிருக்கிறது.

"குழந்தே, ஒனக்கு இட்லி வேணுமா?"

"இல்டி."

"கோமதி, கோமதி, இங்கே வாயேன், சீக்கிரம்."

கோமதி கையைத் துடைத்துக்கொண்டு அடுப்பங்கரையிலிருந்து விரைந்து வந்தாள்.

"என்னத்துக்குக் கூப்பிட்டேள், டீ கசந்து போகும்."

"டீ வேறே போட்டுண்டாப் போறது. இங்கே உன் பிள்ளை என்னமோ வேணுங்கறானே என்னன்னு கேளு."

முதல் குழந்தையில்லையா?

கோமதிக்கும் ஆர்வம் வந்து விடுகிறது. "என்னடாம்மா வேணும் கண்ணுக் குஞ்சுக்கு?" - கொஞ்சி கேட்கிறாள்.

"இல்டி."


தம்பதியர் இருவரும் ஏழாவது சொர்க்கத்துக்குப் போய்விட்டனர்.

இந்த சமயம் பார்த்து சொர்க்கத்தில் கட்டெறும்புக்கடி மாதிரி காலிங் பெல் அடிக்க, எந்தக் கடன்காரன் ஞாயிற்றுக் கிழமையைக் கெடுக்க வருகிறான் என்று மனத்திற்குள் முணுமுணுத்துக் கொண்டு ரமணி எழுந்து போய்க் கதவைத் திறந்தால்,

கையில் ரஸ்க் பொட்டலத்துடன் நிற்கிறார் கோமதியின் அண்ணா. "வா, வா, சாம்பு! இப்பதான் உன்னை நினைச்சேன். உன் மருமகன் என்ன பேச்செல்லாம் பேசுகிறான் வந்து பாரு."

"குட்டிம்மா, உனக்கு என்ன வேணும் சொல்லு?" இது கோமதி.

குழந்தை மௌனம் சாதித்து அம்மாவின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டது.



"சொல்லுடா, இப்பதானே சொன்னே. ஒனக்கு என்ன வேணும்?" இது அப்பா.

குழந்தையோ அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஒரே நீதியை வழங்குகிறது.

"ரஸ்கைப் பாத்துடுத்தோ இல்லியோ, அதோடே புத்தி அங்கே போயிடுத்து போல் இருக்கு."

"ஒரு ரஸ்கை எடுத்துக்குடுங்கோ. அப்போ சொல்லுவான்."

அப்பாவுக்கு ஒரு ஐடியா பிறக்கிறது.

"இதோ பாத்தியா ரஸ்க். இல்டி சொல்லு, இல்லாட்டா ரஸ்க் கிடையாது."

அப்பாவின் மிரட்டலின் கூடவே அம்மாவின் தாஜா. குழந்தைக்கு என்ன புரிந்ததோ? அது கடவுளுக்குத்தான் தெரியும். ஆனால் திடீரென்று வாயைத் திறக்கிறது. பெற்றோர் மூச்சை நிறுத்திக் கொண்டு உன்னித்துக் கேட்கிறார்கள்.

குழந்தை பேசிவிட்டது.

"இட்லி."

— எஸ்.வி. ராமகிருஷ்ணன்.

சூப்பர் டச்!

✉ 26.11.2000 சத்ய சாயி - 75 கல்கி இதழ் முழுக்க முழுக்க 'ஓம் சாயிராம்' என்ற மந்திரம் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. சாயிராம் பக்தர்களுக்கு இது ஓர் அரிய பொக்கிஷம். பாராட்டுக்கள்.

தொண்டி, முகவை முத்துசாமி.

✉ மருத்துவ மணிகள் இருவரும் இணைந்து வழங்கி வரும் 'கிச்சன் கிளினிக்' எங்களுடைய நோய்கள் பற்றிய அச்சம் போக்கி அளவிலா ஆனந்தம் தருகிறது.

மதுரை-10, வி. பரமசிவம்.

✉ வில்லன் நடிப்பில் எங்களை அசத்தும் ரகுவரன், 'சாய் பக்தர்' என்பதைப் படித்து ஆச்சரியமடைந்தேன். அவரது மகன் செய்வதைப் போலவே, எனது மருமானும் இரு கைகளையும் உயர்த்தி மழலை மொழியில் "பா...பா" என்று சொல்கிறான். பெரியவர்களைவிட குழந்தைகள்தான் மிகவும் எளிதாக, சீக்கிரமாக பாபாவை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று என் மனத்துக்குத் தோன்றுகிறது.

திண்டுக்கல்-5, ஜனனி பார்கவி.

✉ தலையங்கம் நடுநிலையோடு எழுதப்பட்டுள்ளது. கமிஷன் அறிக்கைகள் சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் வைக்கப்படுவதும், கிழிக்கப்படுவதும் மரபாகி விட்டனவோ? வாதாடுவதற்கும் கருத்துச் சொல்லவும் சட்டமியற்றவும் தான் சட்டமன்றம். ஆனால் இப்போதெல்லாம் எல்லை மீறப்படுகிறது.

விருதுநகர், இரா. சந்திரசேகர்.

✉ மிகப் பெரிய ஜனநாயக நாடு என மார் தட்டிக் கொள்ளும் அமெரிக்காவில் தற்போது நடந்த தேர்தல் முடிவு கேலிக்கூத்தாகிக் கொண்டிருப்பதை விலாவாரியாக விவரித்து அதற்குப் 'பாடாய்ப்படுத்தும் ஃப்ளோரிடா' என்று பெயர் வைத்தது இருக்கிறதே அதுதான் கல்கியின் ஸ்பெஷல் சூப்பர் டச்.

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ கண்ணப்பனின் ஆதங்கப் பேச்சா, ஜாதி சங்கத்தின் தலைவர் பேச்சா என்றே புரியவில்லை. ஜாதிய அமைப்புக்குத் தேர்தல்தான் முடிவு சொல்ல வேண்டும். ஆளாளுக்கு கட்சி துவங்கும் உரிமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால்தான் நாடு சுபிட்சமாகும்.

சாத்தூர்-3, சி. கார்த்திகேயன்.



✉ கல்கி நவம்பர் 26ம் தேதி இதழில் கேள்வி-பதில் பகுதியில், "தேசியக் கொடியைத் தங்கள் கொடியாக வைத்துக்கொண்டு ஏமாற்றும் காங்கிரஸ் கட்சி" என்று குறிப்பிட்டு எழுதியிருக்கிறீர்கள். இந்திய அரசியல் அமைப்பு சபையின் கூட்டத்தில் நேருஜி தேசியக் கொடி பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசினார். விவாதத்தில் ஒருவர்கூட, "காங்கிரஸார் பயன்படுத்திய கொடியை எப்படி தேசியக் கொடியாக ஏற்கலாம்?" என்று கேட்கவில்லை. மாறாக, கடந்த பல ஆண்டுகளாக எந்தக் கொடியைத் தாங்கிப் போராடினோமோ அதுவே தேசியக் கொடியாக அமைந்தது பற்றி எல்லாருமே மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்...

சென்னை-17, குமரி அனந்தன்.

(திரு குமரி அனந்தன் நமக்கு எழுதியுள்ள நீண்ட கடிதத்தின் ஒரு பகுதியே மேலே தரப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பு சபையில் நடந்த விவாதங்களை விரிவாகத் தமது கடிதத்தில் மேற்கோள் காட்டியிருக்கிறார் குமரி அனந்தன். அவருக்கு நமது நன்றி.

ஆனால் பிரச்னை, காங்கிரஸ் கொடி தேசியக் கொடியாக உருமாறியது பற்றி அல்ல. அதன் பின்னணி பலரும் அறிந்த ஒன்றுதான். அப்படி உருமாற பெருந்தன்மையுடன் அனுமதித்த காங்கிரஸ், அதன் பிறகு, தனக்கு வேறு ஒரு கொடியை வேறு வண்ணங்களில் தேர்ந்தெடுத்திருக்க வேண்டாமா என்பதுதான் கேள்வி. 'தொடர்ந்து தேசியக் கொடியின் வண்ணங்களையே கட்சிக் கொடியிலும் வைத்திருப்பது பாமர மக்களை ஏமாந்து போகச் செய்யும் என்பதுதான் ராஜாஜி உள்பட பல அறிஞர்களின் கருத்தாக இருந்தது. பலமுறை இது பற்றி ராஜாஜி எழுதியும் பேசியும் இருக்கிறார். தராக பதில் இதன் அடிப்படையில் அமைந்ததுதான். – ஆர்)



கண்ணுக்குத் தெரியாதவன் துரத்துகிறான்!

Hollow Man - விமர்சனம்

'நிஜத்தில் இப்படி நடப்பதற்கு சாத்தியமே இல்லை' – என்று கற்பூரமடித்துச் சொல்கிற விஷயங்களைக் கூட, 'அட! இப்படியும் நடக்கலாமே!' என்று நம்பும் படியாக அமைத்துத் திரைப்படங்களைத் தருவதில் சில ஹாலிவுட் இயக்குநர்கள் மகா கெட்டிக்காரர்கள். அவர்களில் டைரக்டர் பால் வெர்ஹோவனுக்கு ஸ்பெஷல் இடம் உண்டு. மனிதனையும் – ரோபாட்டையும் இணைத்து அவர் உருவாக்கிய 'ரோபோ காப்', 'ஸ்டார்ஷிப் ட்ரூப்பர்ஸ்' வரிசையில் இப்போது லேட்டஸ்டாக வெளியாகியிருக்கிறது HOLLOW MAN திரைப்படம்.

'மற்றவர்களின் கண்களுக்குப் புலப்படாமல் அவர்களுக்கிடையில் சகஜமாக உலாவருவது' என்பதுதான் படத்தின் பின்னணி. இப்படிப்பட்ட அதிபயங்கர சக்தியை வைத்துக் கொண்டு அந்த ஹீரோ, நம்ம தமிழ்ச் சினிமா வில்லன்கள் மாதிரி சில்லறை விஷயங்களில் சிக்கிக் கொள்வதுதான் ஆதங்கம்.

கதாநாயகன் (கம் வில்லன்) செய்ன் ஒரு விஞ்ஞானி. அமெரிக்க ராணுவ அமைச்சகத்தின் நிதி உதவியோடும், சக ஆய்வாளர்கள் (அதில் இரண்டு யுவதிகள்) நால்வரின் ஒத்துழைப்போடும் இரண்டு ஊசி மருந்துகளைக் கண்டுபிடிக்கிறான். முதலாவதைப் போட்டால், அந்த உருவம் கண்களுக்குப் புலப்படாமல் போய்விடும். இரண்டாவதைப் போட்டுக் கொண்டால், பழையபடி உருவம் தெரிய ஆரம்பித்து விடும். இதை முதலில் ஒரு கொரில்லாவுக்குப் போட்டு சோதனை செய்ய, சக்ஸஸ் ஆகிறது. அடுத்ததாக மனிதர்கள்தான் இலக்கு. ஆனால் இந்தச் சோதனைக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள யாரும் முன்வராத நிலையில் செய்ன் தன் மீதே அதைப் பரிசோதிக்கிறான். முதலில் தோல், நரம்புகள், சதை, எலும்பு... எனப் படிப்படியாக மறைந்து போகிறான். (உஷ்! ரத்தமெல்லாம் எங்கே போச்சு? என்று லாஜிக்கெல்லாம் பார்க்கக் கூடாது!) திரும்பப் பழையபடி மாற ஊசியைப் போடும் போதுதான் சிக்கல் முளைக்கிறது. உருவம் திரும்பக் கிடைத்தபாடில்லை. வாரக்கணக்கில் அருபமாகவே அலையும் செய்னுக்கு இந்தப் புதிய வாழ்க்கை ரொம்பப் பிடித்துப் போகிறது. அந்தப் புதிய சுதந்திரம் அவனுக்குப் போதை ஏற்றுகிறது. (அதற்காக பக்கத்து வீட்டுப் பெண்ணை பலாத்காரம் செய்வதெல்லாம் ரொம்ப மட்டம்!) இதிலிருந்து வெளிவர அவன் விரும்பவில்லை. அப்படியே இருந்து விடுவதென்று தீர்மானிக்கிறான். ஆனால் தன் சக விஞ்ஞானிகள் நால்வருக்கு விஷயம் தெரியுமே... வேறு வழியில்லை. அவர்களை அடியோடு ஒழித்துக் கட்டிவிட முடிவெடுக்கிறான். படத்தின் பின்பகுதியில் கண்களையும், காதுகளையும் கொஞ்சம் கூடுதல் ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்வது நல்லது. அவ்வளவு ரத்தம். அவ்வளவு சத்தம். இறுதியில் படத்தின் பட்ஜெட்டில் பாதியைச் சாப்பிட்டு விடும் செலவில் ஒரு க்ளைமாக்ஸ்.

ஹீரோவாக வரும் கேவின் பேகனுக்கு முழுச் சம்பளம் கொடுத்தார்களா என்று சந்தேகமாய் இருக்கிறது. முக்காலே மூணு வீசம் அவர் குரல்தான் நடிக்கிறது. படத்தின் நிஜ ஹீரோ – சோனி பிக்சர்ஸ் தயாரித்து அங்கங்கே தெளித்திருக்கும் கிராஃபிக் உத்திகள்தான். அருவருப்பான, பயங்கர காட்சிகளைத் தாங்கத் தயாராயிருந்தாலன்றி தியேட்டர் பக்கம் போய் விடாதீர்கள்!

— எம். அருண்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.

Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)

Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka